# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஆலங்குடி தட்சிணாமூர்த்தி

மாலை 3]　　சார்வரி தை　　[மணி 5

பிப்ரவரி 1961

ரதி.

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



மதுரையில் இராமேசுவரம் தேவஸ்தான பாடசாலைப் புதுக் கட்டிடத்தை அறநிலைய அமைச்சர் திறந்துவைத்தல்.

## பொருளடக்கம்


1. திருநாவலூர்த் திருப்பணி
2. திருவாட்டாறு
3. தசாவதாரம்
4. நவதிருப்பதி அநுபவம்
5. திருவேள்விக்குடிக் கல்வெட்டு வரலாறு
6. ஸ்ரீ ருத்ராத்யயனம்
7. சிவஞானபோதம்
8. திருநாளைப்போவார் நாயனர்
9. அறநிலையச் சட்டம்


## வேண்டுகோள்

1960 அக்டோபர் முதல் 1961 செப்டம்பர் முடியவுள்ள மூன்ருவது ஆண்டுக்கான 'திருக்கோயில்' **சந்தா தொகை** ரூ. 10 அனுப்பும்படி தனித் தனியே பொதுவான சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. இதுவரை பணம் அனுப்பிவைக்காதவர்கள் உடனே பணம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 3] சார்வரி தை - பிப்ரவரி 1961 [மணி 5


# திருநாவலூர்க் கோயில் திருப்பணி

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் [வைத்த
அங்கணர் ஓலைகாட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீதமதியிருமருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள்நாடும் திருமுனைப்பாடி நாடு.

பெருகிய நலத்தால்மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச்சைவம் ஓங்க அருளினாலவதரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை [குன்றாத்
திருமறையவர்கள் நீடும் திருநாவலூராம் அன்றே.

பூவலரும் தடம்பொய்கைத் திருநாவலூர்'
—சேக்கிழார்.

நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித்தீசனுக் காட்செயுமூர் அணி நாவலூர்
—சுந்தரர்.

ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இரு மணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாளென்றுந்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வ மாமால்
—காஞ்சிப்புராணம்.

''வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி''

''மாதவம் செய்த தென்னிசை வாழ்ந் திடத் தீதிலாத் திருத்தொண்டத் தொகை தர''த் தோன்றியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ''தீதகன்று உலகம் உய்யத்திரு அவதாரம் செய்தார்'' என்று கூறுகிறார் சேக்கிழார் பெருமான். அவர் இயற்றிய பெரியபுராண காவியத்திற்கு அவரைத் தலைவராகவும் அமைத்துப் பெருமை பாராட்டியிருக்கிறார். ''சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி'' என்றும், ''மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராயிருந்த, ஞாலமுய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான் தோழர்'' என்றும் போற்றியிருக்கிறார். சடையன் தன்சிறுவன் வன்றொண்டன் என்று சுந்தரரே தம்மைக் கூறிக்கொள்ளுகிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் நடுநாட்டில் நடு நாயகமாய் விளங்கும் திருநாவலூரில் பிறந்தவர். ''அறந்தருநாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருள உளதானால் நம் மளவோ பேருலகில் சிறந்த திருமுனைப் பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு'' என்று குன்றை முனிவர் அந்நாட்டின் பெருமையைப் புகழ்ந்து போற்றுகின்றார்.

திருக்கைலாயத்தில் சிவபெருமான் கண்ணாடியில் தமது பிரதி பிம்பத்தைச் 'சுந்தரா வருக' என்றழைத்தருள சுந்தரர் தோன்றிப் பெருமானுக்குத் திருமாலைத் திருத்தொண்டு, திருநீற்றுமடல் ஏந்தல், சாமரம் வீசுதல் முதலிய திருவணுக்கத் திருத்தொண்டு செய்து வந்தனர். தான் சிவ சிருஷ்டியால் ஞான சரீரம் பெற்றவர் என்பதை 'தான் எனை முன் படைத்தான்' என்று தமது இறுதிப் பாடலிலே சுந்தரர் விளக்கியுள்ளார். உமாதேவியாரின் சாயா ரூபம் கமலினி அநிந்திதை

ஞான சரீரிகளாய் வெளிப்பட்டு அம்பிகைக்குத் திருமாலைத் திருத்தொண்டு புரிந்துவந்தனர். தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமுதமெடுக்க முற்பட்டபோது சிவபிரானையும் விக்கினேசுரரையும் மறந்தனர். ஆலால விஷம் எழுந்து நண்ணினோர் மேனி எல்லாம் கருகும்படி வெதுப்ப, தேவர்களெல்லாம் சிவபிரானிடம் சென்று முறையிட இறைவன் சுந்தரரை அனுப்பிவைத்தார். சுந்தரர் ஆலால விஷத்தைக் கையில் திரட்டிக் கொண்டு வந்து கொடுத்ததால் அவருக்கு 'ஆலால சுந்தரர்' என்ற பெயரும் உண்டு.

சுந்தரரைப் பூவுலகில் தமிழ் நாட்டுக்கனுப்பித் தமிழ் வேதமாகிய தேவாரத்திருப்பதிகங்களையும் திருத்தொண்டத் தொகையையும் பாடச் செய்ய வேண்டுமென்று திருவுளங் கொண்டனர். மலர் எடுக்க நந்தவனத்திற்குச் சென்ற சுந்தரரும் அவ்விரு பெண்களும் ஒருவரையொருவர் கண்டுவிரும்பும் நிலை, இறைவன் திருவருளாணையால் ஏற்பட்டு மூவரும் மண்மேல் தோன்றும்படி நேர்ந்தது. சுந்தரர் சடையனுர் இசைஞானியார் மத்தியில் மூன்று வயதுள்ள சோதி மயமான நர பாலரூபராய்த் தோன்றினுரென்று திருநாவலூர்ப் புராணம் கூறும். இவர் பல தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடியதும் திருவாரூரில் பரவைநாச்சியாரையும் திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரையும் மணந்து சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்கை மீறியதன் பயனுகக் கண்களை இழந்து மீண்டும் இடக்கண்ணை அம்பிகையருளால் காஞ்சியில் பெற்று வலக்கண்ணைத் திருவாரூரில் பெற்றதும், வேண்டும்போதெல்லாம் இறைவனிடம் பொன்னும் பொருளும் பெற்றதும், பல ஆண்டுகளுக்கு முன் முதலையால் விழுங்கப்பெற்ற பாலனை மீட்டதும் முதலிய பல அற்புதங்களை நிகழ்த்தியதும் யாவரும் அறிந்ததே. இறைவனுல் அனுப்பப்பெற்ற வெள்ளானையில், அவர் கைலை சென்ற வரலாறு அவர் அருளிய நொடித்தான் மலைப் திருப்பதிகத்திலேயே விளக்கப்பட்டுள்ளது.

'பரம்பரையானந்த வடிவு நின்றது பேரின்ப வெள்ளத்து மலர்ந்தனர் வன்ருெண்டர்' என்பது சேக்கிழார் திருவாக்கு.

சுந்தரர் பரவையார் ஊடலைத் தீர்க்க இறைவன் தூதுபோன அதிசயத்தைத் திருக்களிற்றுப்படியார் "மோக மறுத்தவர்க்கே முத்திகொடுப்பதென ஆகமங்கள் சொன்னவர்தம்மைத்-தோகையர்பால் தூதராகப்போகவிடும்வன்ருெண்டன் தொண்டுகளை ஏதாகச் சொல்வேனியான்" என்று விளக்குகிறது.



(சுந்தரர்-திருநாவலூர்)

முற்பிறப்பிற் செய்த புண்ணியப் பயனுகத் திருநாவலூரில் சடையனுருக்கும்இசைஞானியாருக்கும் திருமகவாய்த் தோன்றிய சுந்தரருக்குப் பெற்ருேர் இட்டபெயர் 'ஆரூரர்'. ஆரூரிலுள்ள தியாகேசர் அவர்கள் குல தெய்வமாதலால் 'ஆரூரர் 'என்ற திருநாமத்தைச் சூட்டினுர். அம்மான்றன் திருப்பேர்கொண்டஆரூரான் என்பது திருவாரூர் தேவாரம். ஆரூரரை, நரசிங்கமுனையரையர் என்ற குறுநில மன்னர் ஆசைப் பிள்ளையாக வளர்த்து வந்தார். மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொலிய வளர்ந்த இக்குழந்தை திருமணப் பருவம் அடைந்ததும் பெற்ருேரும் உறவினரும் புத்தூர் மறையவரான சடங்கவி சிவாசாரியர் மகளை மணம்பேசிமுடித்தனர். மணமகனுன நம்பியாரூரர் புத்தூர்

வந்தடைந்தார். திருமணப்பந்தரில் சிவ பெருமான் கிழப்பிராமணர் வடிவம் கொண்டு வந்து அதைத் தடுத்து, திரு வெண்ணெய் நல்லூர் சென்று அங்குள்ள வேதியர் முன் வழக்கிட்டுப் பின்னர் மறைந்து சுந்தரரை ஆட்கொண்டார். திரு வெண்ணெய் நல்லூரில் அவர்முறையிட்ட இடம், அக்கோயிலிலுள்ள "வழக்கு வென்ற திருவம்பலம்'' என்ற பெயரால் அழைக்கப்படும் மண்டபம். சிதைந்து கிடந்த அந்த மண்டபத்தை திருப்பணி செய்ய அரசாங்க மான்யம் வழங்கப் பெற் றுள்ளது. சுந்தரரை வளர்த்த நரசிங்க முனையரையர் இருந்த இடத்தில் எவ் விதமான சின்னங்களும் இல்லை. மணம் நடைபெருமல் போனதால் மணம் தவிர்ந்த புத்தூர் என்று அழைக்கப்படுகிறது. சுந் தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் செய்த திருநாவலூரிலுள்ள பக்கஜனேசு வரர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிக ளுக்குத் தனிக்கோயில் இருக்கிறது. நர சிங்கமுனையரையர் உருவமும் இருக்கிறது. இந்த ஆலயத் திருப்பணிக்காக அரசாங்கம் ரூ. 8,000 உதவித் தொகையாக அளித் திருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தத் திருப்பணி முடிய வில்லை. ஆதிசைவ வேதியர்களான அர்ச் சகர்கள் பலர் கூடிப் பெருமுயற்சி செய்து, மிகவும் ஊக்கத்துடன் அத்திருப்பணியில் இப்போது ஈடுபட்டிருக்கின்றனர். 63 நாயன்மார்கள், 9 தொகையடியார்கள் பெருமையை உலகறியப் பெரிய புராணம் என்னும் ஒப்பற்ற அருள்நூல் சேக்கிழார் பெருமான் இயற்ற முதற் காரணமாக இருந்தவர் நம்பியாரூரர். அவர் திருவவ தாரம் செய்த பதியான திருநாவலூரில் அவர் பேரால் உள்ள திருக்கோயிலமைந்த ஆலயத்தை விளங்க வைக்க வேண்டியது சைவப் பெருமக்களின் தலையாய கடமை. சடையனுர் இசைஞானியாருக்கும் உருவங் கள் அமைக்க வேண்டுவதும் அவசியம். பிற தேவஸ்தானங்களும், அறநிலையங் களும், செல்வந்தர்களும் நன்கொடை யளித்து அந்தத் திருப்பணி விரைவில் முடிவு பெற ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம்.

'போதமுண்ட பிள்ளையென்பு பொரு கண்மாது செய்ததோ், காதல்கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்ப உய்த் ததோ, வாய்திறந்து முதலைகக்க மகனை நீ யழைத்ததோ, யாது நம்பி யரிது நன் றெனக்கியம்ப வேண்டுமே' என்பது சிவப் பிரகாச சுவாமிகள் வாக்கு. பூம்பாவையை யழைக்க எலும்புகள் இருந்தன. திரு நாவுக்கரசர் மிதக்கக் கல் இருந்தது.ஆனல் அவிநாசியில் சுந்தரர் பல ஆண்டுகளுக்கு முன் முதலையுண்ட பாலனையழைத்த போது குளத்தில் நீரில்லை, முதலையில்லை. பாலனின் உறுப்புக்கள் ஒன்றுமில்லை. குளத்தில் நீர் வந்து முதலை தோன்றி குழந்தையும் தக்க வளர்ச்சியோடு வந்தது தனிச்சிறப்பன்றே.

பேரூரும் பரவை மனப்பிணக்கற எம்பெருமானை
ஊரூரும் பலபுகல ஓரிரவில்தூ தனெனத்
தேரூரும் திருவாரூர்த்தெருவு தொறுநடப்பித்தாய்
ஆரூரநின் பெருமை அயன்மாலும் அளப்பரிதே.

—இராமலிங்க அடிகள்.

திவநாவலூர்த்தலத் தேவாரப்பதிகம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது ஒன்றே நமக்குக் கிடைத்துள்ளது. இத் தலம் பண்ருட்டியிலிருந்து 10 மைல் தொலைவிலும் விழுப்புரத்திலிருந்து சுமார் 15 மைல் தொலைவிலும் உள்ளது. அவரு டைய திருநாவலூர்ப் பதிகம் கீழே காண்க.

### திருநாவலூர்-பண் ; நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

1. கோவலன் நான்முகன் வானவர்
   கோனுங் குற்றேவல் செய்ய
   மேலவர் முப்புரம் தீயெழு
   வித்தவன் ஓரம்பினல்
   ஏவல னூர்வெண்ணெய் நல்லூரில்
   வைத்தெனை ஆளுங்கொண்ட
   நாலவ னூர்க்கிடம் ஆவது
   நந்திரு நாவலூரே.

2. தன்மையி னுலடி யேனைத்தாம்
   ஆட்கொண்ட நாட்சபைமுன்
   வன்மைகள் பேசிட வன்ரெண்டன்
   என்பதோர் வாழ்வு தந்தார்
   புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்
   தென்னைப் போ கம்புணர்த்த
   நன்மையி னூர்க்கிடம் ஆவது
   நந்திரு நாவலூரே.

3. வேகங்கொண் டோடிய வெள்விடை
ஏறியோர் மெல்லியலை
ஆகங்கொண் டார் வெண்ணெய் [டார்
நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்
போகங்கொண்டார் கடற்கோடியின்
மோடியைப் பூண்பதாக
நாகங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

4. அஞ்சுங்கொண் டாடுவராவினிற்
சேவினை ஆட்சிகொண்டார்
நஞ்சங்கொண் டாரடிச் சண்டியைத்
தாமென வைத்துகந்தார்
நெஞ்சங்கொண் டார் வெண்ணெய்
நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

5. உம்பரார்கோ னைத்தண் தோள்முரித்
தாருரித்தார் களிற்றைச்
செம்பொனுர் தீவண்ணர் தூவண்ண
நீற்றர்ஓர் ஆவணத்தா
லெம்பிரா னுர்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நம்பிரா னுர்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

6. கோட்டங் கொண்டார் குடமூக்கிலுங்
கோவலுங் கோத்திட்டையும்
வேட்டங்கொண் டார் வெண்ணெய் [டார்
நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்
ஆட்டங்கொண்டார் தில்லைச் சிற்றம்
பலத்தே அருக்கனைமுன்
நாட்டக்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

7 தாயவ ளாய்த்தந்தை ஆகிச்
சாதல் பிறத்தலின்றிப்
போயக லாமைத்தன் பொன்னடிக்
கென்னைப் பொருந்தவைத்த
வேயவனுர் வெண்ணெய் நல்லூரில்
வைத்தனை ஆளுங்கொண்ட
நாயக னுர்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

8. வாயாடி மாமறை ஓதிஓர்
வேதியன் ஆகிவந்து
தீயாடி யார்சினக் கேழலின்
பின்சென்றோர் வேடுவனுய்
வேயாடி யார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்ட
நாயாடி யார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

9. படமாடு பாம்பணை யானுக்கும்
பாவைநல் லாள்தனக்கும்
வடமாடு மால்விடை ஏற்றுக்கும்
பாகனுய் வந்தொருநாள்
இடமாடி யார் வெண்ணெய்
நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட
நடமாடி யார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

10. மிடுக்குண்டென் றோடிஓர் வெற்பெடுத்
தான்வலி யைநெரித்தார்
அடக்கங்கொண் டாவணங் காட்டிநல்
வெண்ணெயூர் ஆளுங் கொண்டார்
தடுக்கஒண் ணுததோர் வேழத்
தினைஉரித் திட்டுமையை
நடுக்கங்கண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

11. நாதனுக் கூர்நமக் கூர்நர
சிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயும்
ஊர் அணி நாவலூ ரென்
றோதநற் றக்கவன் றொண்டன்
ஆரூரன் உரைத்ததமிழ்
காதலித் துங்கற்றுங் கேட்பவர்
தம்வினைக் கட்டறுமே.

---

*திருப்புகளூர்:* அக்னீசுவர சுவாமி கோயிலில் 8-1-61-ல் பாவை மாநாடு பாராளு மன்ற உறுப்பினர் திரு. சி.ஆர். பட்டாபிராமன் M.P. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ஆர். இலட்சுமண ஐயர் அவர்கள் B. A., B. L, மேல்தஞ்சை மாவட்ட நீதிபதி, முன்னுள் கவர்னர் திரு. கே. சந்தானம் அவர்கள், திரு. ஆர். சண்முகசுந்தரம்செட்டியார் அவர்கள், திரு. இரத்தினசாமி காளிங்க ராயர் அவர்களும் பாவைச்சிறப்பு பற்றி சொற்பொழிவாற்றினர்கள். மாணிக்கவாசகர், ஆண்டாள் திருவுருவப் படங்கள் ஊர் வலமாகக்கொண்டு வரப்பட்டன. அன்று மாலை 6—மணிக்கு மத்திய ரயில்வே துணை அமைச்சர் கனம் S. V. இராமசாமி அவர்கள் புதியதாகக் கட்டப்பட்ட பள்ளிக்கூடக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். திரு. வைரவன் சேர்வை M. P. அவர்களும் கலந்துகொண்டார்கள். பாவைப் பரிசுப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

*சிரவண்புரம்:* கௌமார மடாலயத்தில் தண்டபாணிக் கடவுளுக்கு 18-12-60-ல் 1008 சங்காபிஷேகம் நடைபெற்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - FEB 1961
MADRAS


# திருவட்டாறு

அருள்பெறுவா ரடியார்தம்
 மடியனேற்கு ஆழியான்
அருள்தருவா னமைகின்று
 னதுநமது விதிவகையே
இருள்தருமா ஞாலத்து
 ளினிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழி நீமடநெஞ்சே
 வாட்டாற்ரு னடிவணங்கே

—நம்மாழ்வார்.

மங்கள சாசனம்பெற்ற நூற்றெட்டு திவ்விய தேசங்களில் ஒன்று **திருவாட்டாறு**. இப்பதி கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் பகுதியிலிருக்கிறது. திருவனந்தபுரத்திற்கு தென்கிழக்கே 28 கல் தொலேவி லுள்ளது. நாகர்கோயிலிலிருந்து 18 கல் தொலேவு. இவ்வூர்க் கோயிலின் மூன்று பக்கங்களில் ஆறு வட்டமாகச் சுற்றிச் செல்வதால் (வட்ட+ஆறு) **வாட்டாறு** என்ற பெயர்வழங்கலாயிற்றென்பர். **ஆதிதாமஸ்தலம், பரசுராம க்ஷேத்ரம்** என்ற பெயர்களும் உண்டு.

எம்பெருமான் திருக்கோயில் ஊர் நடுவே உயரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. கோயில், திருவனந்த புரத்திலுள்ள பத்மநாப சுவாமி கோயிலேப் போன்றது. கேரள சிற்ப அமைப்புடையது. கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு வாயில்கள் இருக்கின்றனறன. பெரிய பிரகாரங்கள் அழகிய தூண் வரிசைகளுடன் இருக்கின்றன. (பின் அட்டைப் படம் காண்க). சுற்றிலும் விளக்கு மாடங்கள் உள்ளன. பெருமாளின் திருநாமம் **ஆதிகேசவமூர்த்தி**. மேற்கே திருமுக மண்டலத்துடன் புஜங்கசயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கிருர். மூன்று வாயில்கள் வழியே அவரைத் தரிசனம் செய்யவேண்டும். சந்நிதிக்கு முன்னல் ஒரே கல்லாலான தரை மட்டத்தின் மேல் மண்டபம் இருக்கிறது. வெளியில் வலப்புறம் நாரதர், விஷ்வக்சேனர்,



திருவட்டாறுகோயில் விமானம்

பிரகலாதர் இவர்களின் சுதை உருவங்களிருக்கின்றன. இடதுபுறம் தசாவதார உருவங்கள் காணப்படுகின்றன.

வெளிப்பிரகாரத்திலிருந்து சந்நிதிக்குள் நுழையும்போது ஒரு மண்டபம் இருக்கிறது. அதன் தூண்களில் கர்ணன், அர்ச்சுனன், கங்காளநாதர், வேணுகோபாலர், ஊர்த்துவ தாண்டவர், காளி, இரண்டு குறவர்கள் இவர்களின் சிலைகள் இருக்கின்றன. உள்ளே நுழைந்ததும் இருபுறமும் இரதி, மன்மதன் உருவச்சிலைகள் உள்ளன.

கோயிலின் வெளிப்பிரகாரத்தின் தென் மேற்குப் பக்கம் **கண்ணன்** சந்நிதியிருக்கிறது. புல்லாங்குழலுடன் காட்சியளிக்கிறார். தெற்குப் பிரகாரத்தில் **சாஸ்தா** சந்நிதிக்கிருக்கிறது. இக்கோயிலில் பிராட்டியாருக்குத் தனிச் சந்நிதியில்லை. **மரகதவல்லிநாச்சியார்** என்று திருநாமம் கூறப்படுகிறது. சயனத் திருக்கோலத்திலுள்ள பெருமாள் கடுசர்க்கரையால் செய்யப்பட்டதென்பர். முழுவதும் தங்கக் கவசத்தால் மூடப்பெற்றிருக்கிறது. கர்ப்பக் கிரகத்தின்மேல் ஒரே மரத்தினலான சங்கிலி தொங்குகிறது. இந்த தலத்திற்கு கடல் வாய்த் தீர்த்தம், இராம தீர்த்தம் என்று இரண்டு தீர்த்தங்கள் உண்டு. ஐப்பசி, பங்குனி மாதங்களில் உற்சவங்கள் நடைபெறுகின்றன. ஆடி, தை மாதங்களில் பெருந்தமுது பூசையில் எல்லோருக்கும் உணவளிக்கின்றனர். பங்குனி ஆராட்டுக்கு **மோகற்றுமுகத்துக்கு** பெருமாள் எழுந்தருளுவார். பறளி, கோதை, தாமிரவருணி இந்த மூன்று ஆறுகள் சேருமிடம் **மூன்றாற்றுமுகம்** என்பது **மோகற்றுமுகம்** என்று வழங்கலாயிற்று. இது இரண்டுகல் தொலைவிலுள்ளது. திருவாட்டாறு கோயிலில் திருவனந்தபுரம் கோயிலில் நடப்பதுபோன்றே பூசை முதலியன நடைபெறுகின்றன. கோயில் மிக உயரமான இடத்தில் அமைந்திருப்பதோடு எங்கேயும் வெளிச்சமாக இருக்கிறது. இருட்டுள்ள இடமே இல்லை. திருவிழாக்களில் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் தான் பெருமாள் எழுந்தருளுவார். வாகனங்களைப் போற்றிமார்கள்தான் தூக்கிச் செல்வர். பூசையும் அவர்களே செய்கின்றனர்.

இந்த திவ்விய தேசத்து இறைவன் பரசுராமருக்கும், சந்திரனுக்கும் பிரத்தியட்சம். வேதவியாசர் இயற்றிய பத்ம புராணத்தில் இந்த ஸ்தல மகாத்மியம் கூறப்பட்டிருக்கிறது. **நம்மாழ்வார்** பதினொரு பாசுரங்கள் கொண்ட ஒரு பதிகத்தால் இத்தலத்தெம் பெருமானைப் போற்றியிருக்கின்றார். அப்பாடல்களில், வாட்டாற்றான் மலரடி வணங்கிப் பேறுபெற வேண்டுமென்று ஆழ்வார் தன் நெஞ்சுக்கு அறிவுரை கூறியிருப்பது நம்முடைய நெஞ்சை உருக்குவன.

உமையம்மை மகாராணி திருவிதாங்கூர் சீமையை ஆண்டபோது மகம்மதிய மன்னனை திப்புசுல்தான் படையெடுத்து வந்தான். கேரள வர்மராஜா என்ற படைத் தலைவரின்கீழ் ஒரு சேனையை மகாராணியார் அனுப்பினர். படைத்தலைவர், மகம்மதிய மன்னனின் பெரும்படையைக்கண்டு தம்முடைய சிறு படையைக் கொண்டு எவ்வாறு எதிர்க்கமுடியும் என்று அஞ்சினர். திருவாட்டாற்று எம்பெருமானை வாழ்த்தி, வணங்கி, வழிபட்டார். இறைவன் திருவருளால் கேரளவர்மா திப்புசுல்தானின் படையை முறியடித்து வெற்றிகண்டார். அவர் பெருமான்மேல் பாடிய பாடலைப் **படைசங்கீர்த்தனம்** என்ற பெயரால் வழங்குகின்றனர். இப்போதும் கோயிலை வழிபடவரும் பக்தர்கள் அந்த சங்கீர்த்தனத்தைப் பாடுகின்றனர்.

கோயிலில் சில தமிழ், வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவை வீர உதய மார்த்தாண்ட திருவடி, வீரரவிவர்மர் இவ்வரசர்கள் காலத்தியவை. கோயில் திருப்பணி செய்தது, ஒற்றைக்கல் மண்டபம் அமைத்தது, நிலம் வழங்கியது இவைகளைப் பற்றித் தெரிவிக்கின்றன. இவ்வூரில் இன்னும் குலசேகரப் பெருமாள்கோயில், வழிப்பிள்ளையார் கோயில், தளியல் சிவன்கோயில், அருவிக்கரைக் கண்ணன்கோயில், பகவதியம்மன் கோயில் இவைகளும் பார்க்கவேண்டியவை.

**மாலை முடிநீத்து**
**மலர்ப்பொன் அடிநோவப்**
**பாலைவனம் புகுந்தாய்**
**பண்டுஎன்று—சாலவும்நான்**
**கேட்டால் துயிலேன்காண்**
**கேசவனே பாம்பணைமேல்**
**வாட்டாற்றுக் கண்துயில்**
**கொள்வாய்.**

**—பிள்ளைப்பெருமாளையங்கார்.**

## சங்கரராமேசுவரர் கோயில் திருப்பணி அஷ்டபந்தன கும்பாபிஷே கமிட்டி

தூத்துக்குடி நகரின் மத்தியில் இருதயம் போன்ற இடத்தில் ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோயில் அமைந்திருக்கிறது. இந்தக் கோயில் சங்கரராமபாண்டியனுல் கட்டப் பட்டது. எல்லா மூர்த்திகளும் சிறப்பாக அமையப்பெற்ற இந்த கோயிலுக்கு இராஜ கோபுரம் இல்லாத குறையொன்று இருந்ததை நிவர்த்திக்க 3½ வருங்களுக்கு முன் கமிட்டி யொன்றை நிறுவி 22 அடி உயரத்தில் கல்ஹாரம் வரை சிற்ப சாஸ்திர விதிப்படி கட்டி முடித்திருக்கிறது. இனி செங்கல் வேலைதான் பாக்கியிருக்கிறது. பக்கத்திலுள்ள மண்ட பமும் கட்டி விமானங்கள் பழுதுபார்த்து வர்ணங்கள் தீட்டப்பெற்று வேலைகள் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன. இதுவரை 2¼ இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. கும்பாபிஷேகம் நடந்து 51 வருஷங்கள் ஆகிறபடியால் அஷ்டபந்தனமும் அவசியமாயிருக்கிற நிலைமைக் கருதி (30-1-61) நாளது தை மாதம் 17 ம் தேதி காலை 4 மணி முதல் 4-45க்குள் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடத்துவதாக தீர்மானிக்கப்பெற்றது. 33 ஓம குண் டங்கள் அமைந்த யாகசாலை அமைக்கப் பெறுகிறது. கும்பாபிஷேகத்தை பழநி சிவத்திரு ஈசான சிவாசாரியார் அவர்கள் நடத்திவைக்க இசைந்துள்ளார்கள். இப்படி வாய்ப்பு கிடைப்பது அரிது. பாக்கி திருப்பணியும் மகா கும்பாபிஷேகமும் செய்து முடிக்கஇன்னும் 50,000 ரூபாய் அவசியம் வேண்டியிருக்கிறது. பக்த சிரோன்மணிகள் எல்லோரும் தாராளமாகப் பொருளுதவி செய்யுமாறும் மணியார்டர் செக்குமூலம் அனுப்பு கிறவர்கள் கே. எஸ். பி. சண்முகவேல் நாடார், பொருளாளர், சங்கராமேஸ்வரர் கோயில் திருப்பணி கமிட்டியென்று அனுப்பும்படியும் திருப்பணி கமிட்டி சார்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

### பத்மனுபபுரம் குருப் தேவஸ்தான அலுவலகத்திலிருந்து வெளியிடும்

## அ றி வி ப் பு

மண்டைக்காடு தேவஸ்தானத்தில் நிகழும் 1136 ஆம் மாசித்திங்கள் 15 தேதி (26—2—1961) ஞாயிறன்று **திருக்கோடியேற்று** வைபவமும் 20 தேதி 3—3—61 வெள்ளியன்று **வலியபடுக்கையும்**, 24 தேதி (7-3-61) **கொடை விழாவும்** நிகழும் என்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மெய்யன்பர்கள் யாவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

பத்மனுபபுரம்
3—1—61

**சு. நல்லகுற்றுலம் பிள்ளை**
தேவஸ்தானம் சூப்பிரண்டு

---

**திருப்பரங்குன்றம்:** சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தெப்ப மகோற்சவம் 17-1-61 முதல் 27-1-61 வரை நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

**திருவிடைமருதூர்:** மகாலிங்க சுவாமி கோயிலில் 15-9-60 முதல் நடைபெற்று வரும் பன்னிரு திருமுறைப் பாராயணம்-நிறைவு விழாவை 18-1-61-ல் அற நிலைய ஆணையர் துவக்கிவைத்தார்கள். 19-1-61 வியாழன் இரவு அறுபத்துமூன்று நாயன் மார்கள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது.

# ஆணையர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 19—12—60 | மானமதுரை | சோமநாதசுவாமி கோயில் | ...திருமுறைக் கோயில் நிறுவுதல். |
| 20—12—60 | திருப்புவனம் | பூவணநாதசுவாமி கோயில் | ...தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| 8—1—61 | கும்பகோணம் | இராமசுவாமி கோயில் | ..வண்ணம் தீட்டும் வேலை துவக்கு விழா. |
| ,, | ஆண்டான்கோயில் | சுவர்ணபுரீசுவரர் கோயில் | ...திருமுறைக் கோயில் நிறுவுதல். |
| ,, | குடவாசல் | கோனீசுவர சுவாமி கோயில் | ,, |
| 9—1—61 | சித்தாய்மூர் | பொன்வைத்தநாதர் கோயில் | ...முன்கோபுரத் திருப்பணி துவக்குவிழா திருமுறைக் கோயில் நிறுவுதல். |
| ,, | தண்டலை | நீள்நெறிநாதர் கோயில் | ..திருமுறைக் கோயில் நிறுவுதல் - தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| ,, | திருக்களர் | பாரிஜாதவனீசுவரர் கோயில் | ,, |
| ,, | நேமம் | வேதபுரீசுவரர் கோயில் | ,, |
| 10—1—61 | புஷ்பவனம் | சுகந்தவனீசுவரர் கோயில் | ...திருப்பணி துவக்கு விழா. |
| 10—1—61 | திருத்துறைப்பூண்டி | பாவா ஓசைதீசுவரர் கோயில் | ...திருமுறைக் கோயில் நிறுவுதல். |
| 11—1—61 | யோகீசுவரம் | யோகநாதீசுவரர் கோயில் | ,, |
| ,, | பல்லவனீசுவரம் | பல்லவனீசுவரர் கோயில் | ,, |
| 19—1—61 | வலிவலம் | இருதய கமலநாதசாமி கோயில் | ...ஆலய அலுவலகக் கட்டடம், நூல்நிலையம் திறப்புவிழா. |
| ,, | கடாரம் கொண்டான் | கைலாசநாதசுவாமி கோயில் | ...திருப்பணி துவக்கு விழா. |
| 20—1—61 | பேட்டைவாய்த் தலை | மத்தியார்ச்சுனேசுவரர் கோயில் | ...முன் கோபுரம் திருப்பணி துவக்குவிழா - நந்தவனம் திறப்பு விழா. நால்வர் உருவச்சிலை நிறுவுதல். ...திரு. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் ரூ. 511-க்கு வெள்ளிக் கரண்டி ஏலத்தில் எடுக்கப்பட்டது. |
| ,, | திருமங்கலம் | சாமவேதீசுவரர் கோயில் | ...உற்சவ மண்டபத் திருப்பணி துவக்குவிழா. |

தசாவதாரம்

# கண்ணனின் அன்பு

[பி. ஸ்ரீ.]

அன்புருவாகிய அழகன் கண்ணன், எனவே உலகரட்சகன் என்பது கிருஷ்ணபக்தர்களின் கருத்து. இந்தியர்களின் ஞான வாழ்க்கையில் இத்தகைய கிருஷ்ணபக்திக்கு ஒரு சிறப்பான இடமுண்டு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்ணன் அவதரித்தான் என்பது இந்துமக்களின் நம்பிக்கை. வேதகாலம் தொட்டு வளர்ந்து வந்திருக்கும் சனாதனதரும விளக்கத்தில் கண்ணனின் தோற்றம் ஒரு மகத்தான ஞானப்புரட்சியின் பிறப்பாகும் என்று அறிஞர் டி. எல். வாஸ்வனி கூறியுள்ளார். எத்தனையோ அரசுகள், பேரரசுகள் தோன்றின, வேரூன்றின, வளர்ந்தன, தளர்ந்தன, மறைந்தன; ஆனால் கண்ணனின் அன்பு என்ற பேரரசு காலம் ஏற ஏற உருகி முதிர்ந்தும் கனிந்தும், செழிந்தோங்கிய வண்ணமாக இருக்கிறது நமது பாரத பூமியில்.

கண்ணன் குழலூதினான்; பசுக்களையும் கோபியரையும் முனிவர்களையும் வசீகரித்தான், கண்ணனின் கீதம் கீதைப் பேருண்மையுமாயிற்று. அந்தக் காலம் தொட்டு, 'மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருள்' அழகுக் கடவுளாக வழிபடப் பெற்றதைக் காண்கிறோம். 'ஆனந்தமே பிரம்மம்; பிரம்மமே ஆனந்தம்' என்பதை உட்பொருளாகக் கொண்டிருப்பது கண்ணன் வழிபாடே என்று கண்ணனின் தொண்டர்கள் கருதுவாராயினர்.

பௌத்த சமயம் துறவு நெறியை வற்புறுத்தியது; கிருஷ்ணபக்தியோ அன்பு நெறியை வற்புறுத்தியது. 'உலகத்தைவிட்டு விலகிச் செல்வது முத்திநெறி' என்ற கொள்கையைக் காட்டிலும் அன்புச்சுவையை உள்ளபடி உணர்த்தும் பக்திநெறியே மேலானது, பெரும்பாலான மக்களுக்குப் பொருந்துவதாகும் என்றனர் கிருஷ்ணபக்தர்கள். கர்மம் அல்லது செயலை விட்டுவிடும் நிவர்த்தி மார்க்கத்தைக் காட்டிலும் கர்ம பலனைக் கண்ணனுக்கு அர்ப்பணித்து வாழும் தொண்டு நெறியே கண்ணனின் மெய்த்தொண்டர்களால் பாராட்டப்பெறுகிறது. ஆனால் ஆசை செயலைத் தூண்டுவதற்கு மாறாக அன்பே செயல் திறனையும் தூண்டிவிடவேண்டும்.

இத்தகைய வாழ்க்கையில் கடவுள் நம்பிக்கைக்கு அதி முக்கியமான இடமுண்டு. உண்மையில், கடவுள் உண்மையை உணர்வதுதான் அன்பு வாழ்வின் உயிர் நிலையும் மூச்சுக் காற்றுமாகும். 'நான் யார்? எங்கிருந்து வந்தேன்? இங்கே ஏன் இருக்கிறேன்? எங்கே போகிறேன்' என்ற கேள்விகளை நம்மை, நாமே கேட்டுக்கொண்டு விடைகாண முயலும்போது, 'தெய்வத்திற்கும் நமக்குமுள்ள உறவை ஒருவாறு ஊகித்துக்கொள்வதும் சாத்தியமாகும். 'இந்தக் கேள்விகள் அவசியமா? இந்த வினா-விடைகளைக்கொண்டு மூளையைக் குழப்பிக்கொள்வதைக் காட்டிலும் 'வாழ்க்கை-வாழ்வதற்குத்தான்' என்ற கருத்துடன் வாழ்ந்து வந்தால் போதாதா' என்று கூறுவோருமுண்டு.

'ஒவ்வொரு தொட்டிலும் குழந்தையை நோக்கி "நீ எங்கே இருந்து வருகிறாய்?" என்று கேட்கிறது; சவப்பெட்டி "நீ எங்கே போகிறாய்" என்று கேட்கிறது என்று கேட்கிறார் கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கை நடத்திய இங்கர்சால் என்பவர். தெய்வநாட்டமோ தெய்வ உறவோ வாழ்க்கைக்குத் தேவையில்லை என்பது இவர் கருத்து. ஹெக்கல் என்ற ஜடமாயாவாதியும் மனிதனுக்கும் தெய்வத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை என்கிறார்; உறவு உண்டென்று நினைப்பதெல்லாம் மாயமும் மயக்கமும்தான் என்று முழக்குகிறார். எறும்பும்

ஈயும் புழுவும் போலத்தான் மனிதனும் வாழ்க்கை நடத்தி மாய்ந்து போகிறுன் என்கிறது நாத்திகவாதம். கண்ணனுடைய லீலைகளும் உபதேசங்களுமோ ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள உறவையே பலவகையில் வற்புறுத்துகின்றன.

இயற்கைக்கும் மனிதனுக்கும் உயிர் நிலையாக இருப்பது தெய்வம்தான் என்ற கண்ணன் கொள்கை இந்தியாவில் தொன்று தொட்டு நிலவிய கொள்கைதான். ஆனல் இந்த உண்மையை அறிவால் அறிந்துகொண்டால் போதாது, அநுபூதி முறையில் கண்டு கொள்ளவேண்டும் என்றும் கண்ணன் உபதேசிக்கிறுன். 'இதற்கு அவகாசமில்லை, நமக்கு வாய்ப்பில்லை என்று கூறுவதில் பொருள் இல்லை.' அலுவலகத்திற்குப் போகவேண்டும், எத்தனையோ கவலைகளைச் சமாளிக்கவேண்டும் என்கிறுர்கள். வழிபாட்டிற்கு நேரமில்லை, பிரார்த்தனைக்கு அவகாசமில்லை. தியானத்திற்குப் பொழுதில்லை. பொழுது போக்குவதற்குத்தான் பொழுதிருக்கிறது என்பது பலர் மனநிலை. ஆனல் இந்த நாளிலும் கண்ணன் கொள்கையை-கிருஷ்ண-பக்தியைப் பின்பற்றிய வண்ணம் உலக வாழ்க்கைக்குரிய கடமைகளையும் செய்துகொண்டிருக்க முடியும். உலகத் தொண்டையும் ஆற்ற முடியும். உலகத்தில் இருந்துகொண்டே கடமைக்குக் கையும் இறைவனுக்கு இதயமுமாக வாழவேண்டுமென்று தானே கண்ணன் உபதேசிக்கிறுர்; தன் லீலைகளாலும் உணர்த்துகிறுர்.

யாக்ஞவல்கியர் கதையில் இம்முனிவர் பெருமான் மைத்ரேயி என்ற தன் மனைவியை நோக்கி, "நான் என் சொத்தை உனக்குக் கொடுத்துவிட்டு வறுமை நெறியைப்பின் பற்றுவேன்" என்று சொன்னுர். அதற்கு அவள் 'செல்வம் நித்திய வாழ்வு தருமா?' என்று கேட்டாள். 'அதனுல் தரமுடியாது' என்று பதில் சொன்னுர் முனிவர். 'அப்படியானல் அமர வாழ்வின் இரகசியம்தான் என்ன?' என்று மறுபடியும் ஒரு கேள்வி கேட்டாள் மனைவி. அதற்கு முனிவர் பின் வருமாறு பதில் கூறினுர்; 'மனைவி என்பதற்காக மனைவி இனியவள் அல்லள்; அவள் இதயத்தில் குடிகொண்டிருக்கும் பரமாத்மாவிற்காக அவள் இனியள். கணவன் என்பதற்காகக் கணவன் இனியன் அல்லன்; ஆனல் அவனிடம் கோயில்கொண்டிருக்கும் பரமாத்மாவிற்காக அவன் இனியன். மகனுக்காக மகன் இனியன் அல்லன்; ஆனல் அவன் இதயத்துள் வீற்றிருக்கும் தெய்வத்திற்காக அவன் இனியன். உலகத்திற்காக உலகம் இனிதன்று; ஆனல் அநித்யமான பொருள்களை ஊடுருவியிருக்கிறது என்ற உண்மைக்காக உலகம் இனிது'. இக்கொள்கையில் கண்ணனுடைய வாழ்க்கைத் தத்துவத்தையும் உபதேசங்களையும் விதையில் ஒரு மகாவிருட்சத்தைக் காண்பதுபோல் காண்கிறுேம்.

மேலே சொன்னபடி இறைவனுடைய நிலைமை உணர்ந்து உலக வாழ்க்கை நடத்தும்போது, தெய்வம் நமக்காக எத்தகைய தியாகத்தைப் புரிந்திருக்கிறது என்ற உண்மையும் இனிது புலனுகிறது. பீதாம்பரம் புழுதிபடியாத நிலையில் தெய்வம் எங்கேயோ மேலுலகில்தான் கொலுவிருக்கிறது என்பதில்லை. தெய்வம் எங்கும் இருக்கிறது; மண்ணகத்திலும் விண்ணகத்தைக் காட்டுகிறது: மக்கள் இதயத்திலிருந்து கொண்டே தன்னை உணர்த்தப் பார்க்கிறது. இத்தகைய இறைநிலையை அந்தர்யாமி என்று கூறுவதுண்டு.

இத்தகைய இறைநிலையை உணர்ந்து கொள்வதுடன் கடவுளுடைய அவதார நிலையையும் உணர்ந்து கொள்ளவேண்டும். உள்ளும்புறத்தும் அந்தர்யாமியாக இருப்பதில் தெய்வத்தின் தியாகம் புலருவதைக் காட்டிலும் அதிக அளவில் அவதார நிலையில் புலனுவதைக் காண்கிறுேம். ஒளி மயமான பேரின்ப உலகிற்குரிய பெருமான் 'துயர் விளையும் இருள்தருமா ஞாலம்' என்ற இந்த உலகத்திற்கு இறங்கிவந்து நமது சுகதுக்கங்களில் பங்கு கொள்கிறுன். கீழே இறங்கி வந்து நம்மைத் தாங்கி உயர்த்துவதற்காகவே அவதாரம் நிகழ்கின்றது. அவதாரங்கள் பல; முக்கியமானவை பத்து என்பர். இவற்றுள் கிருஷ்ணுவதாரமே பரிபூரண அன்பு நெறியையும் அழகு நெறியையும் நமக்கு உணர்த்துகிறது என்பது கிருஷ்ணபக்தர்களின் தேர்ந்த கொள்கை.

கண்ணனின் அன்புதான் எத்தனை கதைகள் வாயிலாகத் தன்னை வெளியிட்டுக் கொள்கிறது! இக்கதைகளில் முக்கியமானவற்றை அடுத்த கட்டுரையில் ஆராய்ந்து பார்ப்போம்.

# நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

கரைகொள் பைம்பொழில் தண்பணைத்
தொலைவில்லிமங்கலம் கொண்டு புக்கு
உரைகொள் இன்மொழி யாளைநீர்
உமக்காசையின்றி யகற்றினீர்
திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்
திசைஞாலம் தாவியளந்ததும்
நிரைகள் மேய்த்தது மேபிதற்றி
நெடும்கண்ணீர் மல்க நிற்குமே.

இருபுறமுமுள்ள கரையைத் தமக்கே உரித்தாக்கிக் கொண்ட பசியசோலைகள் சூழ்ந்ததும், குளிர்ந்த கழனிகளை உடையதுமான தொலைவில்லிமங்கலத்துக்கு பகவத்குணானுபவத்திலே பெயர்பெற்ற இனியமொழியுடைய இவளை நீர்கொண்டுபோய் அவ்வூருள் புக்கு அச்செயலின் பலனாக அவள் பக்கல் உமக்கு இனி ஆசையில்லை யென்று சொல்லும்படியான அளவுக்கு அவளை அகலச் செல்ல விட்டுவிட்டீர்கள். பலன்? அவள் அவன் திருப்பாற் கடலிலே பள்ளிகொண்டருளினபடியையும், திக்கெல்லாம் அகப்பட இப்பூமியை அளந்துகொண்டதையும், அவன் பசுக்கூட்டங்களை மேய்த்ததையும் நினைத்து அதே பிதற்றலாய் நீண்ட தன் கண்களில் நீர் பெருக்க நிற்கிறாள்.

"கரைகொள் பூம்பொழில்"

கரையில் பூமியகப்பட்ட இடமெல்லாம் மரமும் செடியுமாய் வியாபித்துக்கொண்ட பொழில். அப்படித் தனக்கே ஏகமாய்க் கரையைக்கொண்ட் மகிழ்ச்சி தோன்ற பசுமை விளங்கத் தோன்றும் சோலைகள்.

தண்பணை

பொருநையின் குளிர்த்தி யனைத்தையும் ஸ்வீகரித்துக்கொண்ட வயல்கள்.

"உரைகொள் இன்மொழியாளை"

இவள் இயல்பு இன்று திடீரென்று தோன்றியதல்லவே. பகவத் குணானுபவத்திலே இவளுக்குண்டான ஈடுபாடுதான் உலகறியப்ரஸித்தமன்றோ. அவளை தொலைவில்லிமங்கலத்துக்குக்கொண்டு போவார்களா. அவ்வூர்ப் பொழில்கள் கரையையும் கழனிகள் தண்மையையும் தமக்கே உரித்தாக்கிக் கொண்டவையாயிற்றே. அத்தன்மை கண்டால் இவளும் பகவத்குணங்களனைத்தையும் தனக்கேயாகக் கொண்டுவிடுவாளே என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டாமோ.

"இன்மொழியாளை"

இயல்பிலே மதுரமான மொழியுடையவளை. கோபித்தாலும் மொழி கடினம்பெறாத இயல்புடையாள்.

"நீர் உமக்காசையின்றி யகற்றினீர்"

உண்மையில் அவளிடம் உமக்கு ஆசையில்லை. இருந்தால் இப்படிச் செய்திருப்பீரா. இச்செயல் நீர்செய்ய ஏற்கனவே உங்களை மெல்ல மெல்ல உள்ளத்தினின்றும் அகற்றிக்கொண்டிருந்த அவள் இப்போது வெகுதூரம் அகன்று போகவழி செய்தீர். அவள் இவ்விதம் உங்களைவிட்டு அகல வழி வகுத்த நீங்கள் உண்மையில் அவளை உங்களைவிட்டு அகற்றினீர்களே யாவீர்கள்.

அரக்கரைக் கூட்டம் கூட்டமாக அனுப்பி மாருதி கைக்குப் பலியாக்கிய இராவணனை நோக்கி இந்திரஜித்து "கொன்றார் அவரோ கொலைசூழ்கென நீ கொடுத்தாய்" என்றான். மாருதியின் கைவரிசை தெரிந்தபின்பு என்போல்வாரை அனுப்பாமல் சாதாரண அரக்கரை அனுப்பிப் பலியிட்ட நீ உண்மையிலே அவர்களைக் கொலைக்குட்படுத்தியவன்தானே என்கிறான் இந்திரஜித்து. அதுபோல நீங்களும் அவளியல்பறிந்தும் அவளை இவ்வூரில் கொண்டுபுக்கதால் அவளை உங்களிடமிருந்து அகற்றினவர்கள் தானே.

திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்

அதன் பலன்? அவள் அவன் குணானுபவங்களிலே ஆழ்ந்தாள். முதலில் ஆர்த்தநாதம் செவிப்பட அவன் தன் மேன்மையான இருப்பைவிட்டுச் சமீபமாக க்ஷீராப்தி (பாற்கடல்) யிலே வந்து சாய்ந்த தண்மையில் ஈடுபடுகிறாள்.

திசைஞாலம் தாவியளந்ததும்

அடுத்து இந்திரனுக்காக வாமனனாய் வந்து விக்ரமனாய் வளர்ந்து அகில புவனங்களையும் கைக்கொள்ளும் வியாஜத்தாலே திருவடி ஸ்பர்ஸம் எல்லா உயிர்களுக்கும் கிடைக்கும்படி அடியால் உலகளந்த தயை அவள் நெஞ்சை அள்ளுகிறது.

''நிரைகள் மேய்த்ததுமே''

அதற்கு மேலாக தன் மேன்மையையெல்லாம் சூரிகள் பாடிப் பரவாநிற்க அதை உதறித்தள்ளி ஞானம் நடையாத குலத்தில் அவதரித்து திர்யக்குகளை மேய்த்துநின்ற அவனது ஸௌலப்யம் (எளிமை) அவள் நெஞ்சை உருக்குகிறது.

''பிதற்றி......நிற்குமே''

இப்படி அவனுடைய இந்த குணங்களையே மனம்நினைக்க அக்குணங்கள் தோன்ற அவன் செய்த செயல்களை அவள் வாய் பன்னிப் பன்னிப் பிதற்றுகிறது. அவள் உள்ளம் கரைந்து கண்கள் வாயிலாகக் கண்ணீர் உருவில் பெருக்கெடுத்து வழிகிறது. கரைந்த உள்ளம் கண்ணில்முட்டி வெளிப்பட்ட காரணமாகவே அவள் கண்கள் பெரிதாய் விட்டன. என்கிறாள் தோழி.

## நான்காம் பாட்டு

''நிற்கும் நான்மறை வாணர்வாழ்
தொலைவில்லி மங்கலம் கண்டபின்
அற்கம் ஒன்றும் அறவுறாள் மலிந்தாள்
கண்டீர் இவள் அன்னைமீர்
கற்கும் கல்வியெல்லாம் கருங்கடல்
வண்ணன் கண்ணபிரான் என்றே
ஒற்கம் ஒன்றுமிலள் உகந்துகந்து
உள்மகிழ்ந்து குழையுமே.''

தாய்மார்களே! நிலைத்துநிற்கும் நாலு வேதங்களையும் கற்றவர்களான மறையவர் வாழும் தொலைவில்லிமங்கலத்தைப் பார்த்த பின்பு அடக்கம் என்பதை இவள் அறவே விட்டுவிட்டாள். நம்போல்வார் தேற்றித் தணிவிக்க முடியாதபடி அக்காதல் மிகுத்துக் காணப்படுகிறாள். சொல்லும் சொல் எல்லாம் அவனுடைய திருப்பெயர்களும் அவன் கல்யாண குணங்களுமாய் அவற்றையே சதா காலமும் ஒழிவின்றிப் பேசி அதில் இளைப்பற்று உள்ளம் மகிழ்ந்து அம்மகிழ்ச்சியிலே உள்ளமும் உடலும் குழைந்து துவண்டு போனாள்.

''நிற்கும் நான்மறை''

குறைவின்றிக் காலதத்துவமுள்ள வரை கலக்கமின்றி நிலைத்து நிற்கும் நால் வேதங்கள். உலகறியும் தாமறியாதன.

அற்கம் ஒன்றும் அறவுறாள் :- முற்றிலும் அடக்கம் என்ற குணநுபவத்தையே பெருதவளானாள். இன்ன செய்யலாம், செய்யக் கூடாதென்று தாய்கூற அவள் வார்த்தைக் கடங்கி நின்றிருந்தவள் இப்போது ''தாய் வாயிற் சொற்கேளா''தவளானாள். தாய் மட்டுமல்ல, ''அன்னை என் சொல்லிலென் ஊரென் சொல்லிலென் தோழிமீர்'' என்றல்லவா கூறுகிறாள்.

மலிந்தாள்

அவன்பால் காதல் மிகுத்துப் பெருகி நிற்கிறாள். 'காதல் கடலின் மிகப்பெரிதால்' என்னுமளவுக்கு மிஞ்சி நிற்கிறது. அவள் உள்ளே கட்டுண்டு அடங்கிநிற்கும் அளவிலல்ல அது.

''கற்கும்......பிரான்என்றே''

சொல்லும் பேச்செல்லாம் அவன் வடிவழகைப்பற்றியும் அவன் நீர்மையையும் எளிமையையும் பற்றியவாயே இருக்கின்றன. கண்டவர்தம் மனம் வழங்கும்படியான தர்சநீயமான அவன் கடல்நிற வண்ணமும், கட்டி யடிக்கும்படிக்குத் தன்னைத்தாழ விட்ட அவன் எளிமையும் அவனை ஆட்கொள்ள அவற்றைப் பேசுவதே அவள் காலக்ஷேபமாயிற்று.

ஒற்க மொன்றுமிலள்

அப்படி அவற்றைப் பேசுவதில்தான் ஒருபோதேனும் ஒருசலிப்புக் கண்டோமா. அதுதான் இல்லை!

''உகந்து......மகிழ்ந்து''

ஒவ்வொரு தடவை சொல்லும்போதும் உகப்பு மிக்குக் காணப்படுகிறாள். அவள் சரீராவஸ்தை அதைக் காட்டுகிறது. உள்ளமும் படிப்படி மகிழ்ச்சி மேலிட்டு வருகிறது அதை அவள் பேச்சு வெளிப்படுத்துகிறது.

''குழையும்''

இப்படி மனமும் உகப்பிலே ஆழ்ந்து கரையவே சரீரம் தன்வயமின்றித் துவண்டு போகிறாள்.

**ஐந்தாம் பாட்டு**

"குழையும் வாள்முகத் தேழையைத்
தொலைவில்லி மங்கலம் கொண்டுபுக்கு
இழைகொள் சோதிச் செந்தாமரைக்
கட்பிரான் இருந்தமை காட்டினீர்
மழை பெய்தாலொக்கும் கண்ணநீரிஞேடு
அன்றுதொட்டும் மையாந்து இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர் தொழும்
அத்திசை உற்று நோக்கியே."

அவன் நினைவின் காரணமாக மனமும் உடலும் குலைபவளாகிய ஒளிபொருந்திய திருமுகத்தையுடையவரும் இளகிய மனமுள்ளவளுமான இவளைத் தொலைவில்லிமங்கலம் கொண்டு அழகிய அணிகலன்களைத் தரித்து, தாமரைக்கண்ணனுய், சோதியுடன் விளங்கும் அவளுடைய ஸ்வாமியான எம்பெருமான் இருந்த இருப்பை நீங்கள் காட்டினீர்கள். அதன் பலனுக பெய்யும் மாமுகில் போல் கண்ணீர் பெருக அன்றுமுதல் மயக்கம் கொண்டவள்போல முகத்தில் பசப்பூர. அவன் அழகிலே நுழைந்து ஈடுபட்ட சிந்தையளாய் இவள் அவனிருந்த திசையைக் கூர்ந்து நோக்கித் தெண்டனிடா நிற்பாளாயினுள்.

குழையும்

முன் சொன்னதுபோல் அவன் குண சிந்தையிலே தன்னையழித்துத் துவளும்.

வாள்முகத்து ஏழையை

ஒளிபொருந்திய முகத்தையுடையளாயிருந்த தவிக்கமுடியாத சபலமுடையவளை. தன்னை அவன் ஈடுபாட்டினின்றும் பறித்துக் கைவாங்க சக்தி யற்றவளை.

இழைகொள் சோதிச் செந்தாமரைக்கட்பிரான்

சகலவிதமான ஆபரணங்களையும் அணிந்து இயல்பிலே தனக்குள்ள ஜோதியோடு இவ்வாபரண ஜோதியும் கலக்க ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்குமவன். ஆபரண சோதி இவள் முகத்தே பிரதிபலித்ததா இவன்ஜோதி ஆபரணங்களிலே பிரதிபலித்ததா எனத் தெரியமுடியாதபடி ஒளிவிடுமவனை முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ என்று முன்னே ஐயமுண்டாயிருக்கிறதல்லவா இவளுக்கு.

சிவந்த தாமரைபோலும் கண்ணையுடையவன். இவளுடைய தலைவன். ஸர்வஸ்வாமியானாலும் இவள் பக்கல் அளவில் காதல் விளைத்த தலைவன்.

இருந்தமை காட்டினீர்

தன் அழகால் இவளை ஆட்கொண்ட வீறு தோன்ற வீற்றிருக்குமவன். அவனிருந்தவிடம் இவளைக் கொண்டுபோனதே தவறு. அப்படியிருக்க நீங்களோ அவளைக் கூவி அவன் இருக்கும் இருப்பின் அழகை அவளுக்குச் சுட்டியும் காட்டினீர்கள்.

"மழைபெய்தால்......நீரிஞெடு"

அதன் பலனுக, பெய்யுமாமுகில்போல் வண்ணனுன அவனை ஸேவித்ததன் பலனுக இவள்கண்கள் மழை மேகம்போல் கண்ணீரைச் சொரியா நின்றது.

அன்று தொட்டும் மையாந்து:-அவனை அடையாமையாலே, அவன் பிரிவிலே உளம் மயங்கி அவள் வாள்முகத்திலே ஒரு பசப்புப் படர ஆரம்பித்தது. இப்போது அவள் முகம் பழைய ஒளியோடா விளங்குகிறது. முகம் பசப்பூர்ந்து மங்கியல்லவா காண்கிறது.

நாயகன் தன்னைப் பராமுகம் செய்தான் எனில் மாதர் ஒளிமுகங்களிலே சந்திரன் மேலே மேகம் படர்வதுபோன்று பசப் பொன்று பரவுதல் இயல்பு.

'நீயே, செய்வினைமருங்கில் செலவயர்ந்தி யாழநின்
கைபுனைவில்லின் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறும்ண் டிலம்மை யாப்பதுபோல்
மையில் வாண்முகம் பசப்பூரும்மே

என்ற பாலைக்கலிப் பாட்டுள்ளும் பிரிதற்கு தயாராகும் நாயகன் செயல்கண்டு தலைவி முகம் பசப்பூர்ந்தமையைத் தோழி கூறியது காண்க.

நுழையும் சிந்தையள்

கூர்ந்து ஆராயும் மனமுடையள். அவனுடைய ஸௌந்தர்யங்களிலே தன்னையுட் செலவிட்டு அநுபவிக்கும் நெஞ்சுடையாள்.

தொழுமத்திசை உற்றுநோக்கியே

அப்படிச் சிந்தையைச் செலுத்தி அவனிருப்புக் கண்டவள்போல அவனிருக்கும் திசையை நோக்கித் தொழுதுகொண்டேயிருக்கிறுள். இதுவே அவளுக்கு இப்போதைய காயிக வியாபாரமாயிற்று என்கிறுள் தோழி.

## ஆறும் பாட்டு

"நோக்கும் பக்கமெல்லாம் கரும்பொடு
செந்நெலோடு செந்தாமரை
வாய்க்கும் தண்பொருநல் வடகரை
வண்தொலை வில்லிமங்கலம்
நோக்குமேல் அத்திசையல்லால் மறுநோக்கிலள்
வைகல் நாடொறும்
வாய்க்கொள் வாசகமும் மணிவண்ணன்நாமமே
இவள் அன்னைமீர்!"

கண் திரும்பும் இடமெல்லாம் கரும்பும் நெல்லும் தாமரையுமேயாய்த் தோன்றும்படி கழனிகளைச் செழிப்பாக்கி விளைவிக்கும் இயல்புடைய தாம்ரபர்ணியின் வடமருங்கிலேயுள்ள தொலைவில்லிமங்கலத் திருப்பதியைக் கண்ணில் கண்டால் அந்தத் திசையை விட்டு மறுபக்கம் பார்க்கவே மாட்டேனென்கிறாள். இப்போதெல்லாம் நாள்தோறும் இவள் வாய் கூறும் பேச்செல்லாம் அந்த நீலமணி நிறத்தவன் திருநாமங்களே யன்றி வேறல்ல.

"நோக்கும்…… ..பொருநல்"

கரையருகே நின்று கண்ணை ஓட்டினால் எங்கும் ஒரே கரும்பும் நெல்லும் தாமரையுமாயிற்றுக் காண்பது. அது ஒருபக்கம் மட்டுமல்ல. எப்புறம் நோக்கினும் இதே காட்சி தான் தென்படும். அப்படி இருபுறமும் திருமகள் உறையுளாப் பண்ணுகிற" இயல்புடையது பொருநல். தமிழை வளர்ப்பது மட்டுமல்ல செல்வமும் கொழிக்க வைப்பது இந்நதி.

அதன் வடகரையிலே அமைந்தது தொலைவில்லி மங்கலப்பதி.

நோக்குமேல்……நோக்கிலள்

அவனை நினைந்து சுற்றும் பார்க்கிறாள். அப்படிச் சுற்றி நோக்கும்போது தொலைவில்லிமங்கலம் கண்ணில் பட்டுவிட்டால் போதும். அங்கு வைத்த கண் வாங்கமாட்டாதே பார்வை அத்தலத்திலேயே ஊன்றி விடுகிறது. நுழையும் சிந்தையள்! உற்றும் நோக்குகிறாளா! அவனைக் காண்கிறாளோ என்னவோ. கண்ணை அங்கு நின்றும் பறிக்கும் ஊற்றம் பெற்றிலள். பார்த்துக் கொண்டேயிருக்கிறாள்.

வாய்க்கொள்……நாமமே

பார்க்கிறாளா. அவனைத்தான் கண்டிருக்கவேண்டும். எப்படிச் சொல்கிறேன் என்கிறீர்களா? கண் பார்த்துக்கொண்டேயிருக்கிறதா! பார்த்துக் கொண்டிருக்கும் போதே வாய்க்குள் ஏதோ சொல்கிறாள். அருகு சென்று கேட்டால் எல்லாம் அம் மணிவண்ணன் திருநாமங்கள். வேறு ஒரு வார்த்தை கிடையாது. எனில் அவனை அவள் கண்ணில் கண்டுகொண்டே தானேயிருக்க வேண்டும்!

வைகல் நாடொறும்

இது ஒருநாளல்ல. இருநாளல்ல. நாள் தொறும் இப்படித்தான். நாளிலும் இவ்வேளை என்றல்ல. சதாசர்வ காலமும். இதுவே இவள் வாக்கு வியாபாரமாய்க் கழிகிறது இப்போது என்கிறாள் தோழி.

## ஏழாம் பாட்டு

அன்னைமீர் அணிமாமயில் சிறுமானிவள்
நம்மைக் கைவலிந்து
என்ன வார்த்தையும் கேட்குறாள்
தொலைவில்லிமங்கலம் என்றல்லால்
முன்னம் நோற்ற விதிகொலோ
முகில்வண்ணன் மாயங்கொலோ அவன்
சின்னமும் திருநாமமும் இவள்
வாயனகள் திருந்தவே.

தாய்மார்களே! அழகிய மயில்போன்ற சாயலும், சிறிய மான்போன்ற கண்ணும் துடிப்பும் உள்ள இவள் எப்போதும் தொலைவில்லிமங்கலம் என்று பிதற்றுகின்றாளே ஒழிய நான் சொல்லியும் என்வார்த்தையையும் கேட்கிறாளல்லள். முற்பிறப்பில் அவள் செய்த தவமோ? கார்மேகவண்ணன் மாயமோ அறியேன். அவன் சின்னங்களும் நாமங்களும் இவள் வாயிலிருந்து வரும்போது புதிய அழகோடு வருகின்றன.

அன்னைமீர்!

இவளைப்பெற்ற தாய்மார்களே! என்ன ஆச்சர்யம் பார்த்தீர்களா!

அணிமாமயில் சிறுமானிவள்

இவள் பருவமென்ன. இயல்பென்ன. இளம் மான்கன்றுபோல மருண்ட நோக்குடையவள். இளமை தோன்றத் துள்ளிக் குதித்தோடும் மான் குட்டிபோல எங்களோடு விளையாடி வந்தவள். சரீரமே மயில்

போன்ற சாயலும் மென்மையும் கொண்டது. இப்படிப்பட்ட இவள்.

நம்மைக் கைவலிந்து

தன் பருவத்துக்கேற்ப உங்களுக்கும் எனக்கும் படிந்து நம் சொல்கேட்டு வளர வேண்டியவள். அப்படியேதான் வளர்ந்த வளும்கூட. ஆனால் இப்போது எப்படியிருக் கிருள். நம் கட்டுக்குள் அடங்காதவளா ளுள். "என் சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்" என்று நீங்கள் அங்கலாய்க்கும் படி கட்டுமீறினுள்.

என்னவார்த்தையும் கேட்குருள்

'தாய் வாயிற் சொற்கேளாள்' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் முன்னமே. அதுபோகட்டும் ஆனால் அப்போதெல்லாமா வது என்னை அந்தரங்கமாகக்கொண்டு தன் இரகசியங்களை என்னுடன் சொல்லி ஆறு வாள். நானும் அவ்வப்போது யோசனை கூறுவேன். அதைப் பின்பற்றி நடந்துவந் தாள். ஆனால் இப்போதோ என்னுடைய வார்த்தையையும் கூடவல்லவா உதறித் தள்ளுகிருள்.

தொலைவில்லிமங்கலம் என்றல்லால்

எது கேட்டாலும் "தொலைவில்லி மங்கலம்" என்ற ஒரே பதில்தான் அவளிட மிருந்து கிடைக்கிறது. அவள் அகராதியில் வேறு வார்த்தையே இல்லைபோலிருக்கிறது!

முன்னம் நோற்ற விதிகொலோ?

நானும் ஆராய்ந்தேன். சிறியவள். அநுபவமற்றவள்.. நாம் வளர்க்க வளர்ந்து நாம் கற்பிக்கக் கற்றவள். ஆனால் நம்மை எவ்வளவு விஞ்சிவிட்டாள். நாமும்தான் தொலைவில்லிமங்கலம் போனேம். எம்பெரு மான் நாமங்களையும் சொல்கிறேம். இப் படியா தன்வசமிழந்து பிச்சேறினேம். அப் பித்து நமக்கு ஏன் வரவில்லை. நம்மைவிடக் கற்றவளில்லையே அவள். அனுபவமும் குறைந்தவள். பின் அவள் இப்படிப் பைத் தியமாக வேண்டுமென்றுல் முன் ஜன்மத்தில் செய்த தவமாகத்தானிருக்கவேண்டும் என்று எனக்குப்படுகிறது. அந்த விட்டகுறை இப்போது தொலைவில்லிமங்கலம் கண்டபின் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

"முகில்வண்ணன் மாயம் கொலோ"

அல்லது அந்த மாயப்பிரானின் ஆச்சரிய சேஷ்டைகளில் இதுவும் ஒன்ருயிருக்கவேண் டும். அவன்தான் மாயத்தின் கொள்கல மாயிற்றே ஒன்ரு இரண்டா அவன் மாயச் செயல்கள். நாம் பெறமுடியாத அநு பவத்தை அவளுக்கு அவன்தானே கொடுத்து அவளை இப்படிப் பிச்சேற்றியிருக்கவேண் டும் இந்த இரண்டில் ஒன்றுதான். இவளு டைய இந்த நிலைக்குக் காரணம்.

"அவன் சின்னமும்......திருந்தவே"

மேலும் ஒரு அற்புதம் கண்டீர்களா? அவன் சின்னங்களையும் அவன் திருப்பெயர் களையும் நாமும்தான் பல தடவை கூறி அவனை வணங்கியிருக்கிறேம். பிறர் கூறு வதையும் கேட்டிருக்கிறேம். ஆனால் இவள் அழகிய வாயிலிருந்து அச்சின்னங்களின் பெயரும் அவன் திருநாமமும் வெளிப்படும் போது அவை தனியழகு பெற்றல்லவா வரு கின்றன. அவள் 'தவள ஒண்சங்கு' 'சக்கரம்' என்று கூறும்போது அச்சங்கும் ஆழியும் முன்னிலும் அழகுபெற்று வருவதாக நாம் உணர்கிறேமே. அதுபோல அவள் 'அர விந்தலோசனன்' 'தேவபிரான்' என்று கூறும்போது அவை நம் காதுகளில் என்று மில்லா இன்பத்தோடும் பொருளோடுமல் லவா ஒலிக்கின்றன. உன் வாயால் என்னைக் கூறு என்று அவன் சின்னங்களும், அவன் பெயர்களும் போட்டியிட்டல்லவா அவள் வாயிலிருந்துப் புதுப்புகர் பெற்று வருகின் றன! இந்த அதிசயத்தை நீங்கள் என்போல் உணர்ந்திருக்கிறீர்களா என்று கேட்கிருள் தோழி.

(தொடரும்.)

---

**செட்டிகுளம்:** காமாட்சியம்மன் கோயிலில் தைப்பூச உற்சவம் 22-1-61 முதல் 3-2-61 வரை நடைபெறும்.

**திருப்புடைமருதூர்:** நாறும்பூநாதசுவாமி கோயிலில் தைப்பூசப் பெருந் திருவிழா 22-1-61 முதல் 1-2-61 முடிய நடைபெற்றது.

# திருவேள்விக்குடிக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணமலைப் பல்கலைக்கழகம்]

## திருவேள்விக்குடி, இருக்கும் இடம்

இது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளுள் ஒன்ருகும். இது தாஞ்சாவூர்ச் சில்லா மாயூரந் தாலூகாவில் உள்ள குத்தாலத்துக்கு வடகிழக்கே சுமார் ஒன்றரைமைல் தூரத்தில் காவிரியாற்றின் வடகரையில் இருக்கிறது.

## திருக்கோயிலின் அமைப்பு முறை

திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கியிருக்கிறது. கருப்பஇல், அர்த்த மண்டபம், மகாமண்டபம், எடுத்துக்கட்டி, என்னும் நான்கு பாகுபாடுகளையும், இரண்டு திருச்சுற்ருலேகளையும் (பிராகாரங்களையும்) உடையது. அர்த்தமண்டபத்தின் வாசலடியில் வாயில்காவலாளர் (Doorkeepers) இருவர்க்கும், முறையே இரண்டு, இரண்டு, கைகள் இருக்கின்றன. கருப்பஇல்லின் மேல் புறத்தின் நடுப்பகுதியில் இலிங்கோற்பவர் இருக்கின்ருர். அவருக்குத் தென்பால் சந்திர சேகரர், வடபால் அர்த்தநாரீசர் இவர்களின் திருமேனிகளும்; கருப்பஇல்லின் தென்பால் அறம் உரைத்த நாயனர் (தட்சிணுமூர்த்தி); வடபால் பிர்மதேவர், இவர்களின் திருமேனிகளும் இருக்கின்றன. அர்த்தமண்டபத்தின் தென்பால் அகத்தியர் பிரதிமமும், நடராசர், பிள்ளையார் இவர்களின் திருமேனிகளும் இருக்கின்றன. முதல் பிராகாரத்தின் வடகீழ்ப்பகுதியில் அம்மன்கோயில் தெற்கு நோக்கிய வாசலுடன் இருக்கின்றது. அம்மன் கோயிலுக்குப் பின்பக்கத்தில் ஒரு சிறு கோயில் இருக்கிறது. அதை இக்காலம் ஈசானமூர்த்தி கோயில் என்பர். முதல் பிராகாரத்தின் கிழக்கு வாசலில் மூன்று நிலேயுடன் கூடிய கோபுரம் ஒன்று இருக்கின்றது. திருக்கோயிலின் சந்நிதிக்கு வடகீழ் மூலேயில் ஒன்றும், திருக்கோயிலுக்கு மேல்பால் ஒன்றும் ஆக இரு குளங்கள் இருக்கின்றன. இவை இரண்டும் தீர்த்தக் குளங்கள் ஆதல் வேண்டும்.

## கோயிலின் பழமை

இது சிவநெறிக்குரவராகிய திருஞான சம்பந்தராலும் சுந்தரமூர்த்தி அடிகளாலும் பாடப்பெற்றுள்ளமையால் திருஞான சம்பந்தர் காலமாகிய கி. பி. ஏழாம் நூற்ருண்டிற்கு முன்னரே இங்குக் கோயில் உள்ளமை பெறப்படும்.

## இதுபொழுதுள்ள கற்றளி எடுப்பிக்கப் பெற்றகாலம்

இக்கோயிலில் உள்ள பழமை வாய்ந்த கல்வெட்டுக்கள் எல்லாம் "கோப்பரகேசரி பன்மற்கு"—என்று தொடங்குகின்றன. இப்பரகேசரி என்னும் சோழன் பராந்தகன் ஆதல்வேண்டும். எனவே முதலாம் ஆதித்த சோழனது மகனுகிய பராந்தக சோழன் காலத்தில் இக்கற்றளி எடுப்பிக்கப் பெற்றதாகும். இக்கோயிலில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் சிவபெருமானைப் பூசிப்பதுபோல் ஒரு பிரதிமம் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இதைப்போலவே, திருப்புறம்பயம் சிவபெருமானின் கோயில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரிலும் ஒரு பிரதிமம் இருக்கிறது. இது முதற் பராந்தக சோழதேவரின் பிரதிமமாக இருக்கலாமா என்பதை அறிஞர்கள் அறிந்து முடிவு செய்தல் வேண்டும்.

## திருக்கோயிலே எடுப்பித்தவர்

இத் திருக்கோயிலில் வாலக்கால படைமட்டஞ் செய்வித்துத் தாடிப்படையும் பதிஞன்கு கல்லும் செய்வித்தார் நல்லூர் நாட்டுத் திருநல்லூர் கச்சுவன் காடன் கெட்டியான திருவையாறு யோகியாவார். இத்திருக் கற்றளியில் நாலோபாதி திருக்கற்றளியை எடுப்பித்தவர் திருவேள்விக்குடி நம்பியார் திருவையாறு யோகியாரும், அவரது மகனுகிய ஸ்ரீகர்ண திருக்கற்றளிப் பிச்சரும் ஆவர். மகாமண்டபத்தின் கிழக்கில் உள்ள எடுத்துக்கட்டி கடலங்குடியில் இருந்த திருவரங்க

தேவனுன கங்கைகண்ட சோழவிசயபாலனுல் கட்டப்பெற்றதாகும். அர்த்த மண்டபத்து வாசல் நிலைக்கல்லைச் செய்வித்தான் திணைக் களத்து கரவுசாந்து எழுதுகின்ற பெரிய கிழவன் பட்டன்தேவன் ஆவன்.

## கற்கள் உதவியவர்

சமிதன் வேளான் சோழியும் ஆலூர்க் கூற்றத்து சூலபாணி வேள்கிழவனும், மண வில்கோட்டத்து அரும்பாக்கமுடையான் சீயகனுங்கனும், வீரநாராயணப் பல்லவரையர் பெண்டாட்டி குணமல்ல நாணங்கையும், இத் திருக்கோயிலை எடுப்பித்தருள கற்கள் உதவியுள்ளனர். அர்த்த மண்டபத்து வாசலின் தென்பால் உள்ள மூன்று கற்கள் கண்டராச்ச தெரிஞ்ச கைக்கோளரில் ஒற்றி கண்டராவணன் முதலான மூவர்களால் இடப்பட்டனவாகும். இவர்களேயன்றி கொக்கையூர் கிழவன் அமரநிதி அண்ணியூர் நக்கனும் கல் கொடுத்துள்ளான்.

## இறைவரின் திருப்பெயர்

இக் கல்வெட்டுக்களில் இத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் **திருவேள்விக்குடி ஆழ்வார், மங்கலநக்கர்,** ஸ்ரீகோயில் தேவர், திருவேள்விக்குடி உடையார், மணவாள நம்பி என்னும் திருப்பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

## இறைவியாரின் திருப்பெயர்

இறைவியார் **திருக் காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார், நாறு சாந்து இளமுலை நாச்சியார்,** என்னும் திருப்பெயர்களால் கூறப்படுகின்றனர். **நாறு சாந்து இளமுலை அரிவையர்,** என்று அம்மையாரின் திருப்பெயரை, ஞான சம்பந்தர் இவ்வூர்த் தேவாரத்தில் குறிப்பிட்டிருப்பது மகிழ்தற்குரியதாகும்.

## எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனிகள்

வேள்விக்குடி, எங்கணதாசன் கூவண்டென் ஆடவல்லான்பட்டன், இக்கோயில் **திருவுரு நம்பியாரை** எழுந்தருளுவித்துள்ளான். இச் செய்தி கங்கைகொண்ட சோழனது மகனுகிய கோப்பரகேசரி பன்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர தேவரின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

## சில திருமேனிகளைச் செய்வித்தவர்கள்

இக்கோயில் கர்ப்பஇல்லின் தென்புறத்தில் எழுந்தருளியிருக்கும் தட்சிணமூர்த்தியைச் செய்வித்தவர், வளஞ்சியர் பணிசெய் மகன் காத்தரேய் சிங்கம் ஆவர். இக் கோயிலில் துர்க்கை (கொற்றவை)யின் திருமேனி இல்லை. அவர் இருக்கவேண்டிய இடத்தில் ஓடேந்திச் செல்வரின் (பிட்சாடனரின்) திருமேனியைப் பிற்காலத்தில் வைத்துள்ளனர். துர்க்கையம்மனின் திருமேனியைப் பழங்காலத்தில் எவர் கைக்கொண்டு சென்றனரோ? அல்லது பழுதுற்றமையால் எங்கேனும் எடுத்துப் போட்டுவிட்டனரோ? அறிகின்றிலம். அத் துர்க்கையாரைச் செய்வித்தவன் திருவழுந்தூர் நாட்டு நெற்குப்பை உடையான் ஆலன் பலதேவனுன பாத்திர சேகர பல்லவரையன் ஆவன். அர்த்த மண்டபத்து வாசலடியில் உள்ள மகாகாளனைச் செய்வித்தான், தென்கரை நாட்டு ஆனியமுடையான் காரிவேப்பனுகிய மூவேந்தவேளான் ஆவன்.

## அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்

வடகரை நல்லாற்றூர் நாட்டு குணமலப்பாடி உடையான் மாரசிங்கனுன வீரசேகர மூவேந்த வேளான் திருவேள்விக்குடி மகாதேவர்க்குத் தண்ணீர் அமுது செய்வதற்கு இருபது கழஞ்சு நிறையுள்ள வெள்ளிக் கட்டம் ஒன்றை வைத்துள்ளான். இது நிகழ்ந்தது கோப்பரகேசரிவன்மனின் பதினுன்காம் ஆட்சியாண்டாகும், இக் கல்வெட்டு கர்ப்பஇல்லின் வடபுறச் சுவரில் உள்ளது. இவனே, மேற்குறித்த கோப்பரகேசரிவர்மரின் நான்காம் ஆட்சியாண்டில் திருவேள்விக்குடி மகாதேவர்க்கு அமுது செய்வதற்கு ஊர்க்கல்லால் நானூற்றுக் கழஞ்சு நிறையுள்ள வெள்ளித் தளிகை ஒன்றை வைத்துள்ளான். இக் கல்வெட்டு கர்ப்பஇல்லின் வடபுறச் சுவரில் இருக்கிறது. திருவேள்விக்குடி சிவப்பிராமணன் மாடலன் ஆதித்தன் சாத்தனும், இக்குடி திருநாரணன் திருவேள்விக்குடியும் உள்ளிட்ட சிவப்பிராமணர்கள், இவ்வூர்ப் பிராமணர் சிவசரண சேகரப் பிச்சியார் பக்கல் பதினேழு காசு கொண்டு, அக்காசுக்குக் கிடைக்கும் பலிசையால் (வட்டியால்) நிசதம் (நாள்தோறும்) இருநாழி அரிசியும், கறியமுதும், அடைக்காய்

அமுதும்,உள்ளிட்டனகொண்டு,உச்சிப்போது ஒருசந்தி இலிங்கபுராணதேவரை அமுது செய்விப்பதாக ஒப்புக்கொண்டு செய்து வரலாயினர். இது நிகழ்ந்தது கங்கைகொண்ட சோழனது மகனாகிய விசயராசேந்திர தேவரின் (இராஜேந்திரதேவரின்) ஏழாம் ஆட்சியாண்டாகும். இக்கல்வெட்டு கர்ப்பஇல்லின் வடபுறச் சுவரில் உள்ளது. முருகவேள் மங்கலத்துச் சபையார் திருவேள்விக்குடி மகாதேவர் மங்கலநக்கர்க்கு ஸ்ரீபலிகொட்டி, காளம் ஊத இரண்டு ஆளுக்கும், செகண்டி கைக்கொட்ட ஓராளுக்கும், தங்கள் ஊரின் கிழக்கில், அரையே எழுமா என்று பெயர் உள்ளதும், கீழ்பாற்கெல்லை செங்குட்டிக்கு மேற்கும், தென்பாற் கெல்லை தேவர் அச்சனு போகத்திற்கு வடக்கும், மேல்பாற்கெல்லை வடக்குநோக்கிப் போன வாய்க்காலுக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை, பழங்காடியார் வாய்க்காலுக்குத் தெற்கும் ஆக இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலத்தையும், அவ்வூரில் தென்மங்கலத் தெருவில் இருந்த இல்லம், மனை, இவைகளையும் கொடுத்துள்ளான். இது நிகழ்ந்தது கோவிராசகேசரி வர்மரின் மூன்றும் ஆட்சியாண்டாகும். இக் கல்வெட்டு உள்ள இடம் கர்ப்பஇல்லின் வடபுறமாகும். கோவிராசகேசரி வர்மனின் நான்காம் ஆட்சியாண்டில் பாரதாயன் வேங்கடவன், ஊர் நடுவில் ஸ்ரீகோயில் தேவர்க்குத் திருவமுதுக்கு ஒருநிலத்தை நிவந்தஞ்செய்து கொடுத்துள்ளான்.

கங்கைகொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலத்துத் திருவேள்விக்குடி சிவப்பிராமண்ன் ஆதித்தசாத்தனை பஞ்சவன்மாதேவி பட்டனும், அவன் தம்பி மஞ்சனும், மாடலன் சேர சோழ பாண்டியனும், மாடலன் நூற்றெண்மனும், ஆகிய இவர்கள் திருவேள்விக்குடி எங்கணதாசன் கூவண்டென் ஆடவல்ல பட்டன் பக்கல், முப்பது காசைப்பெற்று, அக்காசுக்கு நாள் ஒன்றுக்கு பலிசைநெல் ஆகிய ஐந்நாழியும்கொண்டு, இக்கோயிலில் மேற்குறித்த கூவண்டேன் ஆடவல்ல பட்டனுல் எழுந்தருளுவிக்கப்பெற்ற திருவுரு நம்பியார்க்குச் சந்திராதித்தவரை, தயிரமுதும், கறியமுது இரண்டும் செய்விப்பதாக உடன்பட்டிருந்தனர். இது நிகழ்ந்தது கோப்பரகேசரி பன்மரான உடையார் இராஜேந்திரதேவரின் நான்காம் ஆட்சியாண்டாகும். இக் கல்வெட்டு உள்ள இடம் அர்த்த மண்டபத்தின் வடபுறச் சுவராகும். இம் மன்னனது மெய்க்கீர்த்தி "இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு"—என்று தொடங்குகிறது.

நல்லாற்றூர் நாட்டு குணமலப்பாடி இடையன் ஐயன் மாரசிங்கனை வீரகேசர மூவேளான் ஒன்றன் பொன்கொடுத்து மலைப் பருத்தி வாய்க்காலின் மீய்சிறகில் கூவனூர் சிங்கன் பக்கல் விலைகொண்டுடைய நிலம் இரண்டுமாவைத் திருவேள்விக்குடி மகாதேவர்க்கு விளக்கு ஒன்றுக்கும், இவனே திருவரங்கக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய நிலம் மாக்காணியை இத்தேவர் திருமஞ்சன நிமித்தம் பதினைங்கலம் காவிரிநீர் கொடுவந்து அட்டக் கடவதற்கும் ஆக விடேல்விடுகு சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி மக்களிடம் கொடுத்துள்ளான். அப்பெருங்குறி மக்களும் அவன்பக்கல் இறையிலியாகப் பணம்பெற்று இறை இழிச்சி இறையிலி செய்து கொடுத்துள்ளனர். இது கோப்பரகேசரி வர்மரின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் நிகழ்ந்ததாகும். இக் கல்வெட்டு உள்ள இடம் கர்ப்பஇல்லின் வடபுறமாகும். திருவேள்விக்குடி மகாதேவர் கோயில் சிவப்பிராமணர் மாடலன் சோழ பாண்டியனை திருச்சிற்றம்பலப்பட்டனும், சாத்தன் சிதேவபட்டனும், கௌசிகன் பட்டன் விக்கிரம சோழனை பொற்கோயில் பட்டனும் ஆகிய இவ்வனைவரும் மணவாள நம்பி பிராட்டியார்க்கு, இரவில் சந்திவிளக்கு ஒன்று எரிக்கக்கடவதாக, செம்பியன் கண்டியூரில் இருக்கும் வெள்ளாட்டி பிடாரர் அரியாளுக்குப் பிரமாணம் செய்துகொடுத்துள்ளனர். இது நிகழ்ந்தது முதற் குலோத்துங்க சோழதேவரின் பத்தாம் ஆட்சியாண்டாகும். இக் கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது. வடகரை குறுக்கை நாட்டு திருவேள்விக்குடி வியாபாரி வெளி நக்கனுக்காக அவன் மக்கள் நக்கன் திருவெளியும், நக்கன்கூத்தனும் ஆகிய இவர்கள் திருவேள்விக்குடி ஆழ்வார்க்கு நொந்தா விளக்கு ஒன்றினுக்கு தொண்ணூற்றுறு ஆடுகளை விட்டிருந்தனர். இது நிகழ்ந்தது கோவிராஜ கேசரிபன்மரின் பதினைந்தாம் ஆட்சியாண்டாகும். இக் கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் வடபால் உள்ளது.

குறுக்கை நாட்டு கடலங்குடி மகாசபையார் தங்கட்கு உரிய ஓடை நிலத்தில், கீழ்பாற்கெல்லை கீழ்க்கடைய அரைக்கோலுக்கு மேற்கும், தென்பாற்கெல்லை பாகனூர் ஸ்ரீகுமாரபீமவித்தர் நிலத்துக்கு வடக்கும், மேல்பாற்கெல்லை பாகனூர் அச்சட்டி பீமவித்தனும் நம்பிமாரும் நிலத்துக்கும், பாகனூர் நடுவில் ஸ்ரீ வாமதேவ கடமவித்தன் நிலத்துக்கும் கற்பகமாணிக்க வாய்க்காலுக்கு கிழக்கும் (வடவெல்லை கூறும் பகுதி சிதைந்து விட்டது) ஆக இவ் வெல்லைக்கு உட்பட்ட நிலத்தை, திருவேள்விக்குடி மகாதேவர்க்குச் சாலாபோகமாக விற்றுக்கொடுத்து, அந் நிலத்துக்கு இறைகாவலுக்காக அத்தேவரிடம் பெற்று, அந் நிலத்துக்கு இறையும், எச்சோறும் வாசலில் போந்த குடிமையும், மற்றும் ஊரிடு வரிப்பாடும், செந்நீர்வெட்டி முட்டையாளும், இந் நிலம் உழுவாரை, இந் நிலத்தரல் வந்த வெள்ளான் இறையும் மற்றும் எப்பேர்ப்பட்டதுங் காட்டாதே தாங்களே இறுப்பதாகவும் ஒப்பியுள்ளனர். இச் சாலாபோகத்திற்காக ஒருநாளைக்கு விறகுக்கு நெல்குறுணி இருநாழியும், மிளகுபொடி உள்ளிட்ட கறி நாலுக்கு மிளகு ஒருபடிக்கு நெல்லு குறுணி இருநாழியும் சாலைக்கு (Feeding house) வேண்டும் குசக்கலம் இடுவார்க்கு ஒருநாளைக்கு நெல் முக்குறுணியும், மற்றும் திருவமுது முதலியவற்றிற்கும் ஆக ஒருநாளைக்கு நெல் இருகலனேநாழி வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந் நிலத்தில் அந்நெல்லுக்குமேல் அந்நிலம் ஏற அடைசென்றால் ஏறின நெல்லைக் கொண்டு அவ் வோடையில் செங்கழுநீர் இட்டு திருவேள்விக்குடி மகாதேவர்க்குத் திருப்பள்ளித் தாமம் சாத்துவிப்பதோடு அந் நில போகத்தால் பரிகலம் வளர்த்து ஊட்டுவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இக் கல்வெட்டு கங்கைகொண்ட சோழனின் 16-வது ஆண்டில் பொறிக்கப்பெற்றிருந்தது. இது நடராசப்பெருமான் திருக்கோயிலின் வடபுறச் சுவரில் அடிப்பாகத்தில் இருக்கின்றது. இக் கல்வெட்டு, தொடர்ச்சியாய் இல்லை. சில பகுதிகளும் கிடைக்கவில்லை. குறுக்கைநாட்டு கங்கைகொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலத்து பெருங்குறி மகாசபையார் திருவேள்விக்குடி மகாதேவர் கோயில் கீழைக்குளத்தின் கீழ்ப்பக்கம், ஸ்ரீகரணமசக்கல் என்று பெயர் கூவப்பட்ட நிலம் முக்காலே மூன்று மாக்காணியை சண்டேஸ்வர தேவர்க்கு இறையிலி செய்து கொடுத்துள்ளார்கள். இஃது விடப்பட்ட காலம் முதலாம் இராசாதிராசனின் முப்பத்து மூன்றாவது ஆட்சி ஆண்டாகும். இது அர்த்த மண்டபத்தின் வடபுறச் சுவரில் இருக்கின்றது. இது மிகவும் சிதைந்துவிட்டது. இக் கல்வெட்டிலுள்ள மெய்க்கீர்த்தி "திங்களேர் தன்தொங்கல் வெண்குடை நிழற்ற நிலமகள் நிலவ மலர்மகள்புணர"—என்று தொடங்கப் பெற்றுள்ளது. நல்லாற்றூர் நாட்டுப் பிர்மதேயம் விடேல்விடுகு சதுர்ப்பேதிமங்கலத்துச் சபையார் குறுக்கைநாட்டுப் பிர்மதேயம் விடேல்விடுகுதேவி சதுர்வேதி மங்கலத்துத் திருவேள்விக்குடிப் பெருமாளுக்கு, திரு நுந்தாவிளக்கினுக்காக அறுமாவரை நிலத்தை விற்றுக்கொடுத்துள்ளனர், இது கோப் பரகேசரிவர்மரின் மூன்றும் ஆண்டில் நிகழ்ந்ததாகும். இக் கல்வெட்டு கர்ப்பஇல்லின் மேற்புறச் சுவரில் இருக்கிறது.

திருவேள்விக்குடி கற்றளி மகாதேவர்க்கும் அவர் தேவியார்க்கும் திருவமுதுக்கும், கறியமுது இரண்டுக்கும் ஆக, நான்கு மாநிலத்தை நாரணச் செட்டி என்பவன் கொடுத்துள்ளான். இஃது அதிராசேந்திர தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டில் நிகழ்ந்ததாகும். இக் கல்வெட்டு கர்ப்பஇல்லின் மேற்கு, தெற்குப்புறச் சுவர்களில் இருக்கின்றது. இது மிகவும் சிதைந்துவிட்டது. ஆர்க்காட்டுக் கூற்றத்து, ஆர்க்காடு கொற்றன் கூத்தனான செம்பியன் ஆர்க்காட்டு வேளான் திருவேள்விக்குடி உடையார்க்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு முப்பத்தாறு ஆடுகளைக் கொடுத்துள்ளான்.

உடையபிராட்டியார் பராந்தகன் மாதேவியார் திருவேள்விக்குடி ஆழ்வார்க்கு நூற்று நாற்பத்து முக்கழஞ்சு நிறையுள்ள வெள்ளிக் கலசம் ஒன்றைக் கொடுத்துள்ளனர். இக் கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் உள்ளது.

திருவேள்விக்குடி உடையார்க்கு இளைய வாள்பெற்ற கைக்கோளரில் பனையன் கோதண்டன் என்பான், நிறை முப்பத்து நான்குள்ள காளங்கள் இரண்டினை இட்டுள்ளான். இந்நிகழ்ச்சி உத்தம சோழதேவரின் நான்காம் ஆட்சியாண்டில் ஆகும். இக்கல்

வெட்டு . அர்த்தமண்டபத்தின் தென்புறச் சுவரில் இருக்கிறது.

வாணகோவரையரும், மாகுலன் மலையனும், திருவேள்விக்குடி மணவாள நம்பியாரையும், நாறு சாந்து இளமுலை நாச்சியாரைம், விநாயகப் பிள்ளையாரையும் கொண்டுபோய் திருச்சத்தி முற்றம் உடையார் கோயிலில் எழுந்தருளுவித்துள்ளார்கள். இது நிகழ்ந்தது இராசராச தேவரின் ஐந்தாவது ஆட்சி யாண்டாகும். இம் மன்னனின் 17-ஆவது ஆட்சியாண்டில் உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர்நாட்டு அம்பர் அருவந்தை அரையன் சிவேதவனப் பெருமாளான தொண்டைமானுர் இதை அறிந்து, திருச்சத்தி முற்றமுடையார் கோயிலுக்குத் தம்முடைய சாக்கில் நின்றும் நூற்றுக்கழஞ்சு பொன்னை ஒடுக்கி மணவாள நம்பியையும், கூத்தாடி அருளும் பிரானுரையும், திருக்காம கோட்டமுடைய பெரிய நாச்சியாரையும், சுப்பிரமணியரையும் அவர் நாச்சியார் இருவரையும், ஆட்கொண்ட நாயகரையும் நாச்சியாரையும், திருநாவுக்கரசு தேவரையும், சுந்தரர் பெருமாளையும் பரவை நாச்சியாரையும் புறப்படவிட்டு, திருவேள்விக்குடி கோயிலில் எழுந்தருளுவித்துள்ளார். இவரே (வேதவனப் பெருமாளான தொண்டைமானுர்) மணவாள நம்பி முதலானவர்களுக்குப் பரிகலபரிச் சின்னங்களும், திருவாபரணங்கள் வேண்டுவனவும் கொடுத்துள்ளனர். மேலும் மணவாள நம்பிக்குத் திருவமுது, கறியமுது, அடைக்காய் அமுது உள்ளிட்டவைகளுக்கு திருவேள்விக்குடியிலும், பேரம்பலம் பொன் வேய்ந்த பெருமாள் மங்கலத்திலும் இத் தொண்டைமானுர் தமக்குக் காணிப்பற்ருன நிலம் இரண்டே சின்னத்தையும் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளனர்.

இராஜராஜ வளநாட்டுப் பரவைநாட்டுப் பூண்டி உடையான் அழகிய விடங்கன் உய்யவந்தானுன ஞான ஈஸ்வரர், விக்கிரம சோழதேவரின் திருக்குலத்துக்கும், திருமேனிக்கும், நன்மை உண்டாகும்படி, திருவாவடுதுறை சிவபெருமானை அரசன் விரும்பியவண்ணம் பூசித்து வந்தார். அவர் திருவாவடுதுறையில் கேதாரம் என்னும் திருநாமத்தால் சிவலிங்கப்பிரதிஷ்டைப் பண்ண விரும்பினுர். அதன்பொருட்டு விருதராச பயங்கரவளநாட்டு நல்லாற்றூர்நாட்டு, திருவேள்விக்குடி பிர்மதேயம் பூலோகமாணிக்கச் சதுர்ப்பேதி மங்கலத்து மகாசபையார், திருவேள்விக்குடி உடையார் கோயிலில் எடுத்துக்கட்டியில் கூட்டங் குறைவறக் கூடியிருந்து, திருவாவடுதுறை ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு, கேகரன் என்னும் பெயருள்ள நிலத்தில் திருவுலகளந்தருளிய பன்னீரடி கோலால், அளக்கப்பெற்ற இரண்டுமாக் காணிக்கீழ் இரண்டு மாநிலத்தை இருபது காசுக்கு விற்று அக்காசை மணவாளநம்பி சந்நிதியில் பெற்றுக்கொண்டனர். பிறகு பூலோகமாணிக்கச் சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார் அந்த இருபது காசையுங்கொண்டு, கேதாரலிங்கத்துக்குக் கோயிலும், திருமுற்றமும், திருநந்தவனமும், திருமடை விளாகமும் செய்துகொள்ளுமாறு ஞான சிவரிடத்தில் கொடுத்துவிட்டனர். பூலோக மாணிக்கச் சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார், இறையிலிப் பிரமாணம் பண்ணிக்கொடுத்த நிலத்தின் நான்கெல்லை, கீழ்பாற்கெல்லை ராஜராஜ வதிக்குக் கிழக்கும், பூலோக மாணிக்க வாய்க்காலுக்குத்தெற்கும், இரண்டாங்கண்ணுற்று இரண்டாஞ் சதுரத்து இறையிலி நிலத்துக்கு மேற்கும், தென்பாற்கெல்லை கற்பக மாணிக்க வாய்க்காலுக்கு வடக்கும் (மற்ளுெரு எல்லை சிதைந்துவிட்டது) அடங்கிய நிலப்பகுதி என்று, விக்கிரம சோழதேவரின் நான்காம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கூறுகின்றது. இது நடராசர் மண்டபத்தின் வடபுறத்தில் இருக்கிறது.

ஞானசிவர் திருக்கேதாரமென்னும் திருநாமத்தால் சிவலிங்கப்பிரதிஷ்டைப் பண்ணுவித்தற்கும், பூஜை உள்ளிட்டன நடத்துவதற்கும், தவசிகளுக்கும், இக்கோயில் கும்பிட வந்த அபூர்வி மாஹேஸ்வரர் உண்பதற்கும் ஆக, பூலோக மாணிக்கச் சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார் ஞானசிவரிடத்தில் தொண்ணூறு காசைப்பெற்று, ராஜ ராஜவதிக்குக் கிழக்கும், மணவாளநம்பி இறையிலி, பூலோக மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் இவைகட்குத் தெற்கும், இரண்டாங்கண்ணுற்று இரண்டாங்கண்ணுறு இரண்டாம் சதுரமான பெருவழிக்கு மேற்கும், தென்பாற்கெல்லை, கற்பக மாணிக்க வாய்க்காலுக்கு வடக்கும், ஆக இவ்விசைந்த பெருநான்கெல்லையுள் திருவுலகளந்தருளின பன்னீரடிக்கோலால் பல தடியால் விளைநிலமும், கொல்லையும் உள்படநிலம் ஒன்றே முக்காலே இரண்டுமாக்

காணியை விற்றுக்கொடுத்தனர். இது நிகழ்ந்தது விக்கிரம சோழ தேவரின் நான்காம் ஆண்டாகும். இதுவும் நடராசர் மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

பூலோக மாணிக்கச் சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார் பூலோக மாணிக்க வாய்க்காலுக்குத் தெற்கும், சொன்னவாறு அறிவார் தேவதானம் மாறின நிலத்துக்கு மேற்கும், கற்பகமாணிக்க வாய்க்காலுக்கு வடக்குமாகக் கிடந்த கொல்லையுட்பட மேற்படி திறப்பான நிலத்துக்குக் கிழக்கும் ஆக இந் நான்கெல்லையுள் ஒருமா அரைநிலத்தையும்; திருவரங்கவதிக்குக் கிழக்கும், இராயக்கொண்டையபட்டன் நிலத்துக்கு மேற்கும், தண்ணீர்ப்பந்தல் பற்றுக்கு வடக்கும், கண்ணுற்றிற்குத் தெற்கும் ஆக நிலம் நாலுமாவரையும் மேற்குறித்த ஞானசிவர்க்கு முப்பத்தொரு காசுக்கு விற்றுள்ளனர். அந் நிலத்தின் வருவாய் கேதாரலிங்கத்தை வழிபட வரும் மாகேஸ்வரர்களுக்கும், அக்கோயிலில் வேதம் ஓதுபவர்க்கும் பயன்படுத்தப்பட்டது. இது நிகழ்ந்தது விக்கிரம சோழ தேவரின் ஐந்தாம் ஆண்டாகும்.

திருவேள்விக்குடி ஸ்ரீ கர்ணத் திருக்கற்றளிப்பிச்சன் இருபத்து நான்கரை கழஞ்சே ஒருமஞ்சாடி பொன்கொண்டு பல தேவர் இளங்கிச்சோனைக்காக, விக்னேஸ்வரர் கோயிலில் ஒரு நுந்தாவிளக்கு எரிப்பிக்க உடன்பட்ட செய்தியைக் குறிப்பிடுகின்றது. இக் கல்வெட்டு, பிள்ளையார் கோயிலின் தென்புறச் சுவரில் உள்ளது. இது கோப்பரகேசரிபன்மரின் பதினொன்காம் ஆண்டில் பொறிக்கப் பெற்றதாகும். இது மிகவும் சிதைந்துவிட்டது.

விடேல்விடுகுதேவி சதுர்ப்பேதிமங்கலத்துப்பால், திரு எருதுபாடி (எதிர்கொள்பாடி) மகாதேவர்க்கு நந்தவனப்புறமாகவும், ஸ்ரீபலி புறமாகவும், நொந்தாவிளக்குப் புறமாகவும் முதலாம் இராசராச சோழனது 20, 24, 27-ஆம் ஆண்டுகளில் இராசேந்திரசிங்க வளநாட்டுக் குறுக்கை நாட்டுப்பாண்டூரிலும், நல்லாற்றூர்நாட்டு ஆலங்குடியிலும், உய்யக்கொண்டார் வளநாட்டுப் பேராவூர் நாட்டுக் கூடலூரிலும் பலரால் நிலங்கள் விடப்பட்ட செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டு அர்த்தமண்டபத்தின் வடப்பக்கத்திலிருந்து தொடங்கி, மேற்கு, தெற்குப் பாகங்களில் செல்கின்றது. சிறுபான்மை சிதைந்துவிட்டது. சிறுபான்மை, தக்ஷிணாமூர்த்தி மண்டபம், சோமாஸ்கந்தர் மண்டபம், இவற்றின் இடையில் வைத்துக் கட்டவும் பெற்றுள்ளது. இக் கல்வெட்டு கங்கைகொண்ட சோழதேவரின் ஆறும் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றது. மேலும் இக்கல்வெட்டு, முதலாம் இராசராசரது மனைவியாராகிய அருமொழியார் ஐம்பது பசுக்களை திருஎருதுபாடி மகாதேவர்க்கு இராசேந்திர சோழ தேவரின் இரண்டாம் ஆண்டில் கொடுத்துள்ளனர் என்பதையும் இக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

## சரித்திரப் பகுதி

திருவேள்விக்குடியைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு :—கோப்பரகேசரி வர்மர் காலத்தில் இவ்வூர் வடகரை குறுக்கை நாட்டுக்கு உட்பட்டிருந்தது. வடகரை என்பது காவிரிக்கு வடகரையாகும். குறுக்கை என்பது தேவாரம்பெற்ற தலமாகிய குறுக்கையாகும். இது திருவேள்விக்குடிக்குக் கிழக்கே சுமார் ஐந்து மைல் தூரத்தில் இருக்கின்றது. "குறுக்கைநாட்டுக் குறுக்கை" என்று நாட்டுத் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனாரால் குறிப்பிடப்பெற்றது இவ்வூரேயாகும். முதலாம் இராசேந்திரன் காலத்தில் இவ் வேள்விக்குடி இராசேந்திர சிங்கவளநாட்டுக் குறுக்கை நாட்டுக்கு உட்பட்டிருந்தது. இராசேந்திர சிங்கவளநாடு என்பது காவிரிக்கும் சிதம்பரத்துக்கு வடக்கே இருக்கும் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட பெருநிலப் பரப்பாகும். இது முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் விருதராஜ பயங்கர வளநாடு என்று பெயர்பெற்றது. பிற்பட்ட காலங்களிலும் இப்பெயரே நின்று நிலவுவதாயிற்று.

திருவேள்விக்குடியைத் தன்னகத்துக் கொண்டுள்ள சதுர்வேதிமங்கலம் :—சதுர்வேதி மங்கலம் என்பது சில சிற்றூர்களைத் தன்னகத்துக்கொண்டதாகும். அம் முறையில் இத் திருவேள்விக்குடி கோப்பரகேசரி வர்மன் காலத்தில் விடேல்விடுகுதேவி சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்திருந்தது. கங்கைகொண்ட சோழன் காலத்தில் இது கடலங்குடி என்று பெயர்பெற்றது. விஜயராஜேந்திரன்

காலத்தில் (கங்கைகொண்ட சோழனின் இரண்டாவது மகன்) இக் கடலங்குடி, **கங்கைகொண்ட சோழ** சதுர்ப்பேதிமங்கலம் என்று வழங்கப்பட்டது. பின் இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் இக் கங்கை கொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலம் கடலங்குடி ஆயிற்று. அதுவே இன்றளவும் நின்று நிலவுவதாயிற்று. இக் கடலங்குடி திருவேள்விக்குடிக்குத் தென்கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது.

**இவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப்பெற்று அண்மையில் உள்ள ஊர்கள்:**—குணமலப்பாடி—இது திருவேள்விக்குடிக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றது. இக் காலம் இதை மக்கள் 'குணதலாப் பாடி' என்றும், கொள்ளாபாடி என்றும் சொல்கின்றனர். கோப்பரகேசரிவர்மரின் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருப்பதால் இவ்வூர் மிகப் பழமை வாய்ந்ததாகும்.

**முருகவேள்மங்கலம்** :—இது திருவேள்விக்குடிக்கு வடமேற்கே சுமார் மூன்றுமைல் தூரத்தில் இருக்கின்றது. இவ்வூரும் கோப்பரகேசரிவர்மன் காலத்துக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. இது இக் காலம் **'முருவமங்கலம்'** என்று சொல்லப்படுகின்றது.

**செம்பியன் கண்டியூர்** :—இது திருவேள்விக்குடிக்கு வடமேற்கில் சுமார் 1½ மைல் தூரத்தில் இருக்கின்றது. இக் காலம் கண்டியூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூரைப் பற்றித் திருத்துருத்திச் சொன்னவாறு அறிவார் கோயிலில் உள்ள விக்கிரம சோழன் கல்வெட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

**சோத்தமங்கலம்**:-இது திருக்குறுக்கைக்கு மேல்பால் உள்ளதாகும். திருவெதிர்கொள்பாடி இறைவனுக்கு முதலாம் இராசராசனல் நிபந்தம் அளிக்கப்பெற்று, அவன் மகனுகிய கங்கைகொண்டசோழன் காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டில் இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது. (இவ்வூரே இக்கட்டுரையாளரின் சொந்த ஊராகும்.)

**பாண்டூர்** :—இது திருக்குறுக்கைக்குத் தென்பால் இருக்கிறது.

**இக்கோயில் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற வேறு நாடுகள்:**-நல்லாற்றூர் நாடு இது திருவேள்விக்குடிக்கு மேற்கே நல்லாற்றூர் என்பதை தலைநகராகக்கொண்ட நாடாகும். குணமலப்பாடி, ஆலங்குடி முதலான ஊர்கள் இந்த நல்லாற்றூர் நாட்டைச் சேர்ந்தன என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. திருக்கோடிக்காவிற்குக் கிழக்கே நல்லாத்தடி என்று இப்பொழுது ஓர் ஊர் இருக்கிறது. இதுவே நல்லாற்றூர் ஆதல்வேண்டும். இவ்வூர்க்குக் கோப்பரகேசரிவர்மன் காலத்தில் விடேல்விடுகு சதுர்வேதிமங்கலம் என்று பெயர் வைக்கப்பெற்றிருந்தது. இது, விக்கிரமசோழன் காலத்தில் பூலோக மாணிக்கச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயர் எய்திற்று.

**உய்யக்கொண்டார் வளநாட்டுப் பேராவூர் நாடு**:—உய்யக்கொண்டார் வளநாடு என்பது காவிரியாற்றுக்கும் அரிசிலாற்றுக்கும் இடைபட்ட நிலப்பரப்பாகும். இதன் பிரிவுகளுள் ஒன்றே பேராவூர் நாடு. இது திருவேள்விக்குடிக்குத் தெற்கே சுமார் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்நாட்டைச் சேர்ந்த கூடலூர் இவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

இதுவேயன்றித் திருவழுந்தூர் நாட்டு ஆனுங்கூரும், இராஜராஜ வளநாட்டுப்பரவை நாட்டுப் பூண்டியும் குறிக்கப்பெற்றுள்ளன.

**பழங்காலத்தில் ஊர்ச் சபைகூடும் இடம்** :-ஒவ்வொரு சதுர்வேதிமங்கலத்திலும் ஒவ்வொரு சபை இருந்தது. அந்தச் சபையாரே கோயில் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். பூலோக மாணிக்கச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் திருவேள்விக்குடி உடையார் கோயிலில் எடுத்துக்கட்டியில் கூட்டங் குறைவறக் கூடியிருந்து திருவாவடுதுறை உடையார்க்கு மூலப் பிரத்யனுகிய ஆதி சண்டேஸ்வரதேவர்க்கு ஒருநிலத்தை இறையிலி பிரமாணம் பண்ணிக்கொடுத்த செய்தியை விக்கிரமசோழன் காலத்து கல்வெட்டு அறிவிக்கின்றது. கோயிலுக்கு நிலத்தை விற்றல், வாங்கல்களில் சண்டேஸ்வரர் திருப்பெயரால் நிகழ்த்தி வந்துள்ளனர் என்று அறியக் கிடக்கின்றது.

---

மதுரை: மீனட்சி சுந்தரேசுவரர் கோயிலில் தெப்ப மகோற்சவம் 19-1-61 முதல் 31-1-61 வரை நடைபெற்றது.

# ஸ்ரீ ருத்ராத்யயனம்

[திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L. திருப்பனந்தாள்]

**உருத்திரன்:** பொருள்

"உருத்திரன் என்னும் நாமம் செந்தீப்பண்ணவன் தனக்கும் ஆமால்" என்றமையால் (கந்தபுராணம், ததீசிப் படலம், 45) படைத்துக் காத்து அழித்து மறைத்தளிக்கும் சிவபெருமானையே உருத்திரன் என்ற சொல் குறிக்கும். உருத்திரன் என்பது அசுரர்களை அழச்செய்கிறவன், எல்லாவுயிர்களிடத்தும் உள்ள துன்பங்களைப் போக்குபவன், அழுகையைப் போக்குகின்றவன், மறையாகிய ஒலியை ஊழிக்காலத்தில் முதலில் பிரமனுக்கு அருளியவன், நாதத்தால் உலகை இன்புறச் செய்கின்றவன், மறையால் அல்லது ஓங்காரத்தால் வேண்டியவற்றை அளிக்கின்றவன், துன்ப காரணத்தைப் போக்குகின்றவன்—என்று பல பொருள்படும்.

"இன்பம் செய்தலின் சங்கரன்; எம்பிரான்,
இன்பம் ஆக்கலின் சம்பு; இடும்பைநோய்
என்ப தோட்டும் இயல்பின் உருத்திரன்
என்பாரால்"

என்று காஞ்சிப்புராணத்தில் சிவஞான முனிவரும் அருளியுள்ளார்.

"இன்னலங் கடலுட் பட்டோர்
யாரையும் எடுக்குநீரால்
உன்னரும் பரமமூர்த்தி
யுருத்திரன் எனும்பேர் பெற்றான்"

என்பது கந்தபுராணம்.

## உருத்திரனே எல்லாம் ஆவன்

ஸர்வோவை ருத்ர: ருத்ராய நமோ அஸ்து
புருஷோவை ருத்ர: சன்மஹோ நமோ நம:

என்று கிருஷ்ண யசுர்வேதம் (24வது அநுவாகம்) கூறும்.

ருத்ரோ ப்ரஹ்மா, உமா வாணீ...
ருத்ரோ விஷ்ணுர், உமா லக்ஷ்மீ...
ருத்ர: சூர்ய, உமா சாயா...
ருத்ர: சோம, உமா தாரா...
ருத்ரோ திவா, உமா ராத்ரி...
ருத்ரோ வேத, உமா சாஸ்த்ரம்...
ருத்ரோ வ்ருக்ஷ, உமா வல்லீ...
ருத்ரோ கந்த, உமா புஷ்பம்...
ருத்ரோ அர்த்த, அட்சர: ஸா உமா
தஸ்மை தஸ்யை நமோ நம:
ஸர்வ தேவாத்மகம் ருத்ரம் நமஸ்குர்யாத்

என்ற உருத்திர ரகச்யோபநிஷத்தில், எல்லாமாய் விளங்குபவர் ருத்ரபரமேசுவரன் என்று கூறப்பெற்றுள்ளது.

இருக்கு, எசுர், சாமம், அவர்வணம் என்னும் நான்கு வேதங்களும், "வேள்வி வாயிலாக உருத்திர பரமேசுவரனையே வழிபடும் முறையை விதிக்கின்றனர்;" ஆகவே இந்நான்கு வேதங்களிலேயும் உருத்திர மந்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள்...

## இருக்குவேத பஞ்சருத்ரம்

இருக்கு வேதத்துள் ஐந்து உருத்திரங்கள் உள்ளன; அவற்றுள் 43 இருக்குகள் உள. இவை, "பரமேசுவரனது ஐம்முகத்திற்கும் ஐந்து உருத்திரங்களாக அமைந்துள்ளமையின், இப்பஞ்சருத்ரங்களே மிகச் சிறந்தன என்று இருக்குவேதிகள் பெரிதும் பாராட்டுவர்." இவற்றுள் சிலவற்றின் **சாயணபாஷ்யக்** கருத்து வருமாறு:—

எல்லா முணர்கின்றவனும், வேண்டியவற்றை அருள்கின்றவனுமாகிய உருத்திர மகாதேவனை யாம் எப்போது அழகிய துதிகளால் துதிப்போம்? (பக்கம், 1 இருக்குவேத பஞ்சருத்ரம்)

எமது கிராமத்திலுள்ள பசு எருமை முதலான மிருகங்களும், எமது மக்களும், பிணியிலாதவர்களாய் வளரவேண்டுமென்று உருத்திரனை இனிது துதிக்கின்றோம். (பக்கம் 6)

சோதியும் சுடருமாகியவனும், மறைமுடியில் மன்னுகின்றவனுமாகிய உருத்திர

பரமேசுவரனைத் தேவவுணவால் வழிபடுகின்றோம். அவன், கையில் பிணி நீக்குதற்குரியவைகளைத் தாங்கியவனாய் வந்து, சுகம் வீடு பாதுகாப்பு என்பவற்றை எமக்குக் கொடுத்தருள்வானாக. (பக்கம் 8)

உருத்திரபரமேசுவர! யாம் உனக்குத் தோத்திர மந்திரங்களை அர்ப்பிக்கின்றோம். உனது அனுக்கிரகம் எமக்கு மிகுந்த சுகத்தைக் கொடுப்பதாம் ஆதலின் அதை மிகவும் வேண்டுகின்றோம். (பக்கம் 10)

மருத்துக்களை ஈன்ற உருத்திர பரமேசுவர! நின்னால் அருள் செய்யத்தக்க சுகமனைத்தும் எமக்கு உண்டாகுக. எம்மிடத்து, சூரியதரிசனம் எப்போதும் இருக்குமாறு செய்தருள்வாயாக. எமக்கு நல்ல மக்கள் உண்டாவார்களாக. நாங்கள் தழைத்தோங்குவோமாக. (பக்கம் 12)

உருத்திரபரமேசுவர! அனைவருக்கும் இன்பையளித்தருளும். உனது திருக்கரத்தால் என்னைப் பாதுகாத்தருள்வாயாக. எனது பாவத்தைப் போக்கி எனது பிழைகளையும் பொறுத்தருள்வாயாக. (பக்கம் 16)

உருத்திரபரமேசுவர! நீ எல்லாம்செய்தற்கு உரியோனாதலின் உலகனைத்தையும் அடக்கி ஆளுகின்றனை. உன்னையன்றி ஒருவரும் வல்லுநர் இலர். ஆதலின் நீயே முத்தொழிற் குரியான். (பக்கம் 17)

உருத்திர பரமேசுவர! நீ எவ்வாற்றால் முனிவுறுது களிப்புறுவையோ அவ்வாற்றை எங்கட்கு உபதேசித்தருள்வாயாக. வேள்வியில் உன்னை இனிது துதிக்கின்றோம். (பக்க 20)

உருத்திர பரமேசுவரன், உண்மையில் மண்ணிலுண்டான மக்களை ஐசுவரியமுடையவர்களாகவும், விண்ணிலுண்டானவர்களைச் சாம்பிராச்சியம் உடையவர்களாகவும் எண்ணியருள்கின்றனன். (நேரில் கூறல்) உருத்திர பரமேசுவர! எமது மக்களைப் பிணியிலாதவர்களாய்ச் செய்வதுடன் எமது வீட்டிற்கும் வந்தருள்வாயாக! (பக்கம் 21)

### சாமவேதருத்ரீயம்

உருத்திரபரமேசுரன், **'சமாதானப் பிரியன்'** ஆகலின் சாமவேத ருத்திரத்தை ஓதினால் பரமேசுவரனதுபேரன்பினை எளிதிற் பெறலாம். **சாமவேத உருத்திரத்தில் 11 மந்திரங்கள் உள்ளன.** சில ஆர்ச்சிகங்கள் எனப் பெறும்; அதாவது இருக்கு மந்திரத்துக்குள்ளே எழுத்துக்களைக் கொண்டே முடிந்து நிற்பது. தோத்திரத்தால் ஆனது **ஸ்தௌபிகம்** எனப்பெறும். இப்பதினொரு மந்திரங்களும் **உருத்திர சங்கிதை** எனப் பெயர்பெறும். சாமவேத பிராமணம் என்னும் சுருதியிலும் "ஆவோ ராஜா" என்றல் தொடக்கத்து உருத்திர சங்கிதையை நன்கு ஓதி உருத்திரனுக்கு அன்பு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

"ஆவோ ராஜா" என்பது சாமவேதத்தில் உருத்திர சங்கிதையில் முதன் மந்திரம் ஆகும். இறப்பதன் முன்னரே பரமேசுவரனை வழிபட வேண்டும் என்று ஒரு ரிஷி தன் புதல்வர்களுக்கு அறிவுறுத்தும் முறையாக இம்முதன் மந்திரம் அமைந்துள்ளது.

### ருதர்வண ருத்திர மந்திரங்கள்

'த்ரயீ' என்ற சொல் ரிக் யஜுர் சாம வேதங்களையே குறிப்பதால் அதர்வண வேதத்தை வேதமாகக் கருதாதிருந்தனர் எனலாம். ஆனால் யாகங்களை வெளியிலிருந்து பிறர் கெடுக்காதவாறு செய்யவும், யாகத்தில் யாருக்கேனும் நோய்வரின், அந்நோயைப் போக்கவும், அதர்வண வேதம் இன்றியமையாததாயிற்று.

**இவ்வதர்வண வேதத்துள்ளும் 75 உருத்திர மந்திரங்கள்உள்ளன:** சிலவற்றின் பொருள் பின்வருமாறு:—

பச்சை ஊன் உண்ணும் காக்கை முதலான பறவைகளும், ஈக்களும், பொது வாய பறவைகளும் உணவில் உட்காராதபடி அருள்புரிவீராக (2).

கிழக்கு, வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திக்குகளிலுள்ள உருத்திரனுக்கு வணக்கம்; சுவர்க்கத்தில் இரவியாகவும், அந்தரிக்கத்தில் வாயுவாகவும், பூமியில் அக்கினியாகவும், விளங்கும் உருத்திர பரமேசுவரி! உனக்கு வணக்கம் (4).

உயிர்களைப் பரிபாலிக்கும் உருத்திர பரமேசுவர! உனது திருமுகத்துக்கு

வணக்கம். உயிர்களைப் படைப்போய்! உனது திருமுகத்துக்கு வணக்கம். இரவி மதி தீ என்னும் உனது முக்கண்ணிற்கும் வணக்கம் (5).

உருத்திரபரமேசுவர! உனக்கு மாலைப் போதில் வணக்கம்: காலைப் போதில் வணக்கம்: இரவில் வணக்கம்; பகலில் வணக்கம் (16).

......போற்றத்தக்க கிரண மண்டலத்தின் நடுவிலிருந்து வானின் மழையைப் பெய்விக்கின்ற உனக்கு வணக்கம் (24)

......உருத்திர! நீ எங்கும் கலந்துள்ளாய்; அனைத்தையும் பார்க்கின்றாய்; எங்குமுள்ள பிரமாண்டத்தை ஆக்கியழித்தருளுகின்றாய்; இது உனக்கு அதிசயமில்லை (25).

சுவர்க்கத்துக்கும் அந்தரிஷத்திற்கும் மண்ணிற்கும் உருத்திர பரமேசுவரன் இறைவன்; இவ்வுருத்திரன் கதிரோனாயிருந்து கிரணங்களைக்கொண்டு எங்கும் நிறைந்திருக்கிறான்!...அவனுக்கு வணக்கம் (27).

உருத்திரபரமேசுவர! எமது பிணியை நலப்படுத்தியருள்வாயாக; எமக்கு நலம் தருவாயாக; எமது சுற்றத்தார்கள் அனைவரும் பிணியால் பீடிக்கப்படாதவர்களாகுக; பிணிகளும் அடங்கி ஒழிய உலகனைத்தும் எமக்கு மங்களமாகுக; எல்லாத் தேசத்தவர்களும் நலமடைவார்களாக! (6—57—2).

இப்பசு மாட்டுக் கூட்டங்களை ஒன்றாய்ச் சேர்க்க...இந்திரன் இப்பசுமந்தைகட்கு நலந்தரும் பேச்சுப் பேசுவானாக; உருத்திரன் பிணி வாராதபடி உபாயம் செய்தருள்வானாக (6—147—1).

தீ, நீர், செடி, கொடி இவற்றுள் இருக்கின்றவனும், எல்லாப் புவனங்களின் பிராணிகளையும் ஆக்கிக் காத்தழிப்பதில் வல்லுநனுமாகிய அக்கினி வடிவருத்திரனுக்கு வணக்கம் (7—61—1).

**யசுர்வேத சதருத்ரீயம்**

எசுர் வேதத்தில் **சதருத்ரீயம்** என்ற பகுதி உருத்திரபரமேசுவரனை நேரேகூறும் பகுதியாகும். இதனை எசுர் வேதிகள் பெரிதும் பாராட்டுவர். இது எசுர் வேதத்தில், நான்காம் காண்டத்தில், ஐந்தாம் பிரபாடகத்தில், பதினொரு அநுவாகங்களாக உள்ளது. இதில் உருத்திர மந்திரங்கள் நூறுயிருத்தல்பற்றிச் **சதருத்ரீயம்** எனப்பெற்றது என்பர் சிலர்.* இது **உருத்திராத்யாயம்** எனவும் கூறப்படும்.

**சதருத்ரீயச் சிறப்பு** : "தேவர்களுள் உருத்திர மகேசுவரனைப் போலவும், புராணங்களுள் கந்தபுராணம் போலவும், மிருதிகளுள் மனுமிருதியைப் போலவும், வேதத்தில் சதருத்ரீயம் சிறந்து விளங்குகின்றது" என்று வித்யாரண்ய முனிவர் **உருத்திரகல்பம்** என்ற நூலுள் கூறியுள்ளார். **கைவல்ய உபநிடதம்**, "எதை ஜபித்தால் முத்தியாம்? யாக்வல்கியர், கூறுவாயாக; சதருத்ரீயத்தால் முத்தியாம்" என்றும், "எவன் சதருத்ரீயத்தை ஓதுகின்றானோ அவன் அக்கினி புனிதன் ஆகின்றான்" என்றும் கூறுகின்றது. அத்திரி ரிஷி, "எல்லாவற்றுக்கும் இதுவே பிராயச்சித்தமுமாகும்" என்று கூறியுள்ளார். "இது எல்லாப் பயன்களையும் அளிக்கும்" ஒரு வாக்கியம் செப்புகின்றது.

**இச்சதருத்ரீயத்தில் பிரபாடகம் 5-அநுவாகம் 8-ல் பதினொராவது மந்திரம் நம:சிவாசய என்பது. எனவே சிவநாமம், வேதத்தின் இருதயமாகக் கருதப்படும் உருத்திர மந்திரங்களின் நடுவில் இருப்பது, இதற்குரிய தனிச்சிறப்பு ஆகும்.**

பாகுபாடு : சதருத்திரீயம் 11 அநுவாகங்களில் உள்ளது. இப்பதினொரு அநுவாகங்களிலும் ரிக்-யசுர் ஆகிய மந்திரங்கள் கூறப்பெறுகின்றன. 1-வது அநுவாகத்தில் 15 இருக்கும், 2 முதல் 9-வரை அநுவாகங்களில் முறையே 13,17,17,15, 15,16,17,19-யசுசும், 10-வது அநுவாகத்தில் 12 இருக்கும், 11-வது அநுவாகத்தில் 10 இருக்கும் 3-யசுசும், ஆக இருக்கு 37-ம் யசுசு 132-ம் ஆக 169-மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. †

**பெயர் வகைகள்**

உருத்திரம், உருத்திர ஏகாதசனி, ஸ்ரீ ருத்திரம், மகாருத்ரம், அதிருத்ரம் என ஐந்துவகைப்படும்:—

*இஃது எங்ஙனம் பொருந்தும் என்பது புலப்படவில்லை.

† திரு. C. K. S பெரிய புராணம் உருத்திர பசுபதி நாயனர் புராண வுரைகாண்க.

அவற்றுள் ஒரு உருத்திரமும் ஒரு சமகமும் சேர்ந்தது, **உருத்திரம்** எனப்படும்;

பதினொரு உருத்திரங்களும் ஒரு சமகமும் சேர்ந்தது, **உருத்திரஏகாதசனி;**

121 உருத்திரங்களும் 11 சமகங்களும் சேர்ந்தது, **ஸ்ரீருத்ரம்;**

1331 உருத்திரங்களும் 121 சமகங்களும் சேர்ந்தது, **மகாருத்ரம்;**

14641 உருத்திரங்களும் 1331 சமகங்களும் சேர்ந்தது, **அதிருத்ரம்.**

**யசுர்வேத உருத்திர மந்திரங்கள்**

மேலே குறிப்பிட்டவாறு உள்ள 169 மந்திரங்கள் சிலவற்றின் உரைகளைக் கீழே தரப்பெற்றுள்ளன:—

(4-5-2-6)*குடும்ப வாழ்வைத்தொலைக்கின்றவனும், மண்ணுலக முதலிய உலகங்களைப் பரிபாலிக்கின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-2-7)—வில்லால் இடர் களைந்து நம்மைப் பரிபாலிக்கின்றவனும், க்ஷேத்திரங்களைப் பாதுகாக்கின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-4-10) சேனைகளான உருத்திரர்களே! உங்களுக்கு வணக்கம்; சேனைத் தலைவர்களான உருத்திரர்களே! உங்களுக்கு வணக்கம்.

(4-5-4-11) - தேரைச்செலுத்துகின்றவரும், தேரை நிறுத்திக் கொள்ளுகின்றவரும் ஆன உருத்திரர்களுக்கு வணக்கம்.

(4-5-4-12) - தச்சர்களான, தேர் செய்கின்றவர்களான உருத்திரர்களே உங்களுக்கு வணக்கம்.

(4-5-5-1)—உயிர்களை உண்டாக்கித் துடைக்கும் உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-5-5)-ஆயிரங் கண்களையும் நூற்றுக்கணக்கான விற்களையுமுடைய உருத்திரனுக்கு வணக்கம்.

* 4-காண்டம்: 5 பிரபாடகம்; 2-அநுவாகம்; 6-ம் மந்திரம். இங்ஙனமே மற்ற எண்களையும் அமைத்துப் படிக்க.

(4-5-5-6)-கைலையங்கிரிவாசனும், திருமாலின் திருமேனி கொண்டவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-5-7)-மேகமாய் மழை பெய்விக்கின்றவனும், பாணத்தைத் தாங்குகின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-5-11)-உலகம் தோற்று முன் உள்ளவனும் அவையின் கண் தலைவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-6-7) - தான்ய விசேடமாயும் நெற்குவியல் வடிவாயுமிருக்கின்ற உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-6-9)-வன தருக்களாய் இருக்கின்றவனும், கொடி முதலியவாக இருக்கின்றவனுமாய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-6-10)—சப்த வடிவாகியஉருத்திரனுக்கும் பிரதித்தொனி வடிவாகிய உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-7-12)-மழை நீராகிய உருத்திரனுக்கும், கடல் நீராகிய உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-8-1)-உமையுடன் கூடிய உருத்திரனுக்கும், துன்ப காரணத்தை நீக்குகின்ற உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-8-3)-இன்பமளிக்கும் உருத்திரனுக்கும், பசுக்களைப் பாதுகாக்கும் உருத்ரனுக்கும் வணக்கம்.

(4-5-8-8)—ஓங்காரப் பொருளாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-9)—சுகம் அதுவரும் வழி என்பவைகளை உண்டாக்குகின்ற உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-10)—தந்தை முதலானோர்களால் உலக சுகத்தைக் கொடுக்கின்றவனும், குரு நூல்கள் முதலியவற்றால் முத்திச் சுகத்தைக் கொடுக்கின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-11)-மங்கள வடிவனும், அற்புதமுடைய மங்களவடிவனும் ஆகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-12)-தீர்த்தங்களிலும், நதிக் கரையில் தாபித்துள்ள இலிங்கத்திலும் உள்ள உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-12)-பாவத்தை நன்கு போக்குகின்றவனும், பந்தத்தை நீக்குகின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4–5-9-3)சடைமுடியுடைய உருத்திரனுக்கும், அன்பர்களைப் பாதுகாக்க முன் நிற்பவனாகிய உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-10-17) விரும்புகின்ற பொருள்களைக் கொடுக்கும் உருத்திரர்களே! வணக்கம்.

(4-5-10-18)—பாவங்கள் முழுவதையும் தொலைத்தருள்கின்ற உருத்திரர்கட்கு வணக்கம்.

## நன்றியுரை

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள் யாவும் **காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளால்** மொழி பெயர்க்கப்பெற்றுச் சென்னை, திருவொற்றியூரான் அடிமை என்னும் **திரு. த. ப. இராமசாமிப் பிள்ளையவர்களால்** தமது சொந்தப் பொருட் செலவில் பதிப்பித்து நன்கொடையாக அளிக்கப்பெற்ற **"திருநான்மறை உருத்திரத்திரட்டு"** என்ற 167 பக்கமுள்ள நூலுள் கண்டவற்றினின்று வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளப்பெற்றன. அந்நூலை யான் படித்து இன்புற்றேன்; 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று கருதி, அந்நூல் பகுதிகளுள் ஈண்டைக்கு ஏற்பன வற்றை மட்டும் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அம்மொழிபெயர்ப்பாசிரியருக்கும், பதிப்பாளர் அவர்களுக்கும் எளியேன் மிகவும் கடமைப்பட்டவனாவேன்.

## உருத்திரப் பெயருடையார்:

### முன்னரும் பின்னரும்

**கடியலூர் உருத்திரங் கண்ணனார்:** இவர் சங்கப்புலவருள் ஒருவர். கடியலூர் என்பது பாண்டி நாட்டின் கண்ணதோரூர். பத்துப்பாட்டுள் கண்ட பெரும்பாணாற்றுப் படையும் பட்டினப்பாலையும் இவர் பாடியனவே ஆகும். கண்ணன் என்ற இயற் பெயருடைய இவர், உருத்திரப் பெயரும் கொண்டுள்ளார். இவர் பெயரும் உருத்திரன் என்று இன்றி உருத்திரம் என்றிருத்தலால், ஸ்ரீ ருத்திரத்தை ஒட்டியே இவர் பெயர் அமைந்திருத்தல் கூடும் என்னலாம். இவர் பாடியவை குறுந்தொகை 352 முதலியன.

**உருத்திரனார்:** இவரும் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவர் பாடியவற்றுள் ஒன்று குறுந்தொகை 274.

**சோழன் நல்லுருத்திரன்:** இவர் கலித்தொகையுள் முல்லைக்கலி பாடியவர்; இவர் பாடியது புறம் 190.

**உருத்திர சன்ம கண்ணர்:** இவர் திருவள்ளுவ மாலை 31-ம் செய்யுளைப் பாடியவர்.

**உருத்திர சன்மனார்:** இவர் இறையனார் களவியலுரை கேட்க நடுவராய் அமர்ந்திருந்தவர்; அகநானூற்றைத் தொகுத்தவரும் இவரே.

## உருத்திர பசுபதி நாயனார்

இவர் சோழ நாட்டின் கண்ணதாகிய **திருத்தலையூர்** என்ற தலத்தில் வாழ்ந்த மறையவர்; சிவனடிமைத் திறம்பூண்டவர்; பசுபதியார் என்ற பெயரினர்; **வேதத்து நடுவணுள்ள உருத்திர மந்திரத்தை இடையறாது ஓதும் நாவர்;** இவர் பொய்கையையடைந்து, **கழுத்தளவு நீரில் நின்று**.* கை உச்சிமேல் குவித்துச் சிவபிரானிடத்து அன்பு பூண்டு உருத்திரத்தைப் பயிலத் தொடங்கினார்; "அருமறைப் பயனாகிய உருத்திர மதனை" இரவும் பகலும் இடையீடின்றி ஓதியமையின் உமையொரு பாகனார் உவந்தருளிச் சிவபுரியில் தன்னடிக் கீழ் இவரைச் சேர்ப்பித்துக்கொண்டார். "நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்" உருத்திர பசுபதியார் என்ற திருப்பெயர் இவர்க்கெய்தியது.

## ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்

இப்பெயரால் கோயில்களில் முன்னாளில் ஒரு குழுவினர் இருந்தனர் எனக் கல்லெழுத்துக்கள் நவில்கின்றன.

திருக்கழுக்குன்றத்துத் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயிலில் தொண்டர்கள் நாயன் திருக்காவணத்துத் திருட்டு வழக்கு ஒன்றை விசாரிப்பதற்குக் கூடியவர்களில் 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்கள்' கூறப்பெறுகின்றனர். (S. I. I. Vol. V, 479).

---

* தாராசுரம் கோயில் சிற்பத்தில் இவர் மார்பளவு நீரில் நிற்பதாகவுளது.

இது வீரகம்பண்ண உடையார் கல்லெழுத்து.

திருமணஞ்சேரியில் கண்ட மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 20-வது ஆட்சியாண்டுக் கல்லெழுத்தினின்று 'ஸ்ரீருத்ரஸ்ரீமாகேசுவரர்' ஒரு தருமத்தை ஏற்று நடத்த ஒப்புக்கொண்டனர் என்று (புதுக்கோட்டைச் சாஸனங்கள்-152 ல்) தெரிய வருகிறது.

சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவருடைய 3-ம் ஆண்டுச் சாஸனத்தினின்று திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் கோயிலில் (பிரான் மலையில்) 'ஸ்ரீருத்ரஸ்ரீமாகேசுவரர் இருந்தனர்' என அறியலாம் (430 of Vol. VIII)

வீரகம்பண்ண உடையாரின் (சகர யாண்டு 1297க்குரிய) ஆறகளூர்க் கல்லெழுத்து (431 of 1913) 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்களும்' கோயில்பணியாளரும் கூட்டம் கூடியிருந்து எண்ணுடைய நாயனார் என்பார்க்குக் கோயில் அலுவல் பார்க்க உத்தரவு அளித்தனர் என்று கூறுகிறது.

**உருத்திரகணத்தார்**

திருவாமாத்தூர்க்கோயிலில் காரியம் பார்ப்பவர்களுக்குரிய ஊதியத்தை, ஊர்ச் சபையினரும், சிவப்பிராமணரும், **உருத்திர கணத்தாரும்** சேர்ந்து நிர்ணயித்தனர் என்று ஒரு கல்லெழுத்து (18 of 1922) இயம்புகிறது. இவ்வுருத்திரகணத்தார் இறைவன் முன்னிலையில் திருப்பாடல்கள் (Sacred Hymns) பாடுபவர் என்றும் இதில் கூறப் பெற்றுள்ளது.

மேலே குறித்த கல்லெழுத்துச் செய்திகளால் **ஸ்ரீருத்ரஸ்ரீமாகேசுவரர்** என்று ஒரு குழுவினர் திருக்கோயில்களுள் இருந்தனர் என்றும், கோயில் நிர்வாகத்தில் அவர் பங்குபற்றினர் என்றும், அவர்கள் பக்திப் பாடல்களைப் பாடுபவர் என்றும் அறியலாம். இம்மாகேசுவரருக்குத் தரப்பெற்ற **ஸ்ரீருத்ர** என்ற அடைமொழியால், இவர்கள் இறைவன் திருமுன் **ஸ்ரீருத்ரம்** ஓதும் தொண்டில் ஈடுபட்டவராதல் கூடும் என்று ஊகித்து அறியலாம்.

திருவாமாத்தூர்க் கல்லெழுத்துள் கூறப்பெற்ற **உருத்திரகணத்தார்** மேற்குறித்த ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்கள் போன்றவரோ அல்லது அவர்களின் வேறானவரோ என்று அறியக் கூடவில்லை. **உருத்திர பல் கணத்தார்க்கு** அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற ஞானசம்பந்தர் வாக்கு இங்கு நினைவுக்கு வரும். இப்பாடலுக்கு விரிவுரை தந்த சேக்கிழார்,

**" மண்ணி னிற்பிறந் தார்பெறும்**
**பயன்மதி சூடும்**
**அண்ண லாரடி யார்தமை**
**அமுதுசெய் வித்தல்**
**கண்ணி னாலவர் நல்விழாப்**
**பொலிவுகண் டார்தல்**
**உண்மை யாமெனில் உலகர்முன்**
**வருகென உரைப்பார்"**

என்றருளினார். இதனால் **உருத்திர** பல் கணத்தார் என்பது சிவனடியார்கள் (-பன்மாகேசுவரர்) என்று அறியப் பெறுகிறது; இவர்களை ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர் என்று கொள்வதற்குச் சேக்கிழார் விளக்கம் இடம் தரவில்லை. எனவே **உருத்திர கணத்தார் வேறு, ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர் வேறு** என்று கோடல் பொருந்தும்.

இனி **உருத்திர பண்டிதர்** என்று ஒருவர் மேல் குறித்த திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டில் (S.I.I. Vol. V, 479) குறிக்கப் பெறுகிறார்; இத்தலத்தில் கண்ட எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரது கல்லெழுத்தினின்று (481 of Vol V.) **சிவருத்திரபண்டிதர்** என்று இன்னொரு பெயர் தெரிய வருகிறது. இராசராச சோழனின் தஞ்சை யிராசராசேச்சரத்துக் கல்வெட்டினின்று, இராசராசேச்சரத்தில் நியமித்த பிடாரர்களில் (ஓதுவார்களில்) மூவர் ருத்ரசிவன், என்ற தீக்ஷா நாமம் உடையராகக் காணப் பெறுகின்றனர். இதனால் **உருத்திரப் பெயரைப் பின்னோரும் பூண்டிருந்தனர்** என்பது தெளிவு.

**ஸ்ரீருத்ர அத்யயனம்**

இனி **ஸ்ரீருத்ரம் திருக்கோயில்களில் ஓத நிபந்தங்கள்** விட்டமையும் கல்லெழுத்துக்களினின்று அறிய வருகின்றது.

திருக்கடவூர்க்கருகில் **திருக்கடவூர் மயானம்** என்ற தலம் உளது. அங்குக் கண்ட

திருபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானது 22-ம் ஆண்டுக் கல்வெட்டில் (84 of 1906) வேதம் ஓதவும், **ஸ்ரீருத்ரம் அத்யயனம் செய்யவும்**, வீணை வாசிக்கவும் நிலம் ஒதுக்கப் பெற்ற செய்தி கூறப் பெற்றுள்ளது. [இக்கல்லெழுத்தில் **திருத்தொண்டத் தொகை மங்கலம், சிவபாத சேகர மங்கலம்** என்ற ஊர்கள் குறிக்கப் பெற்றுள்ளன.]

மேற்குறித்த அரசனது திருநெல்வேலிக் கல்வெட்டு (432 of S. I. I. Vol. V; 141 of 1894) **ஸ்ரீருத்ராத்யயனம்** செய்வதைக் குறித்து நிபந்தம் விட்ட செய்தியைக் கூறுகிறது. இவ்வரசனது பிள்ளைகளில் ஒருவர் சுந்தரபாண்டியதேவர்; இவர் புரட்டாசித் திங்கள் மூலநாளில் பிறந்தவர். அம்மூலநாள் முதற்கொண்டு திருநெல்வேலியுடையார் திருமுன்பு சிறு காலைச் சந்தியிலே நாடோறும் ஸ்ரீருத்ராத்யயனம் செய்யும் பன்னிருவர்க்குப் போஜன முள்ளிட்டு வேண்டுவனவற்றுக்கு **ஸ்ரீருத்ராத்யயனப்புற இறையிலியாக** நிலம் ஒதுக்கப்பெற்றது.

இனித் திருபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடுங்கொண்டு முடிகொண்ட சோழபுரத்தில் (பழையாறையில்) வீராபிஷேகம் பண்ணியருளிய ஸ்ரீசுந்தரபாண்டியதேவற்குயாண்டு பதினேழாவதின் எதிராமாண்டின் எதிராமாண்டு கொடுத்த கல்வெட்டில் **ஸ்ரீருத்ராத்யயனம்**பற்றிய செய்தி சொல்லப்பட்டுள்ளது (422 of S. I. I. Vol V; 433 of 1894). திருநெல்வேலியில் ஆலாலசுந்தரர் திருமடத்தில் சே(ய்)ஞலூர் திருவெண்காடுடையான் அனவரதானனை அணுக்கநம்பி என்ற தபஸ்வி ஒருவர் இருந்தார். இவருடைய தந்தை திருவெண்காடுடையானை அணுக்கநம்பி என்ற பெயருடையவர்; அவருக்குத் திருநெல்வேலி(யுடைய நயினார்) கோயிலிலே சிறுகாலை சந்தியிலே **ஸ்ரீருத்ரம் அத்யனனம்** பண்ணுதற்கு இருபத்தஞ்சச்சு அளிக்கப் பெற்றது. இவ்விருபத்தைந்து அச்சையும் பலரிடத்திலே கோதைப் பிராட்டி மங்கலத்தில் நெல் வட்டிக்குக் கொடுத்தார்; 30 கலம் நெல் வட்டியாக வந்தது. இவ்விருபத்தைந்து அச்சையும் பலரிடத்திலே கோதைப் பிராட்டி மங்கலத்தில் நெல் வட்டிக்குக் கொடுத்தார்; 30 கலம் நெல் வட்டியாக வந்தது. இவ்வட்டியைப் பெற்றுக் கோதைப் பிராட்டிமங்கலம்...... ஆனந்த பிள்ளை என்பாரும், அவர்க்குப் பிறகு அவர் மகனும் ஸ்ரீருத்ராத்யயனம் செய்தனர். இத்தொகையைக் கடனாகப் பெற்றவர் திருப்பிக் கொடுத்துவிட்டனர். ஆனந்த பிள்ளை, குருகத்தி குண்டூர் ஸ்ரீமாதவபட்டன் என்பாரிடம் 17 அச்சுக் கொடுத்துச் சிறிது நிலம் விலைக்கு வாங்கினர். எஞ்சிய பணம் (8 அச்சு) இவ்வானந்த பிள்ளை மகன் பெருமாள் கையில் கொடுக்கப்பெற்றது. இவ்வச்சு எட்டால் வந்த பலிசையும், நிலத்தினின்று பெற்ற நெல் முப்பதின்கலமும் தக்ஷிணையாகக் கொண்டு ஷை பெருமாளும் அவன் வர்க்கத்தாரும் அத்யயனம் பண்ணவேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பெற்றது.

**புராணங்களில்**

ஸ்ரீருத்ரம் ஓதியவர் சிவலோகத்தில் வீற்றிருப்பர் என்று பரஞ்சோதி—**திருவிளையாடற் புராணம்**, வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலத்தில், செய்யுள் 45-ல் சொல்லப் பெற்றுள்ளது:

மறைகளின் சத வுருத்திர மந்திரம் நவின்றோர்
நிறைகொள் கண்டிகை நீறணி நீரர் யாரேனும்
குறிகு ணங்குலன் குறித்திடா தன்பரைச் [சிவனென்
றறியு மன்பினற் பிறவிவேர் அறுத்தவர் [இவர்காண்

இனிச் சேதுப்புராணத்தில் சீருருத்திரம் ஓதுவார் நரகம்புகார் என்று கூறப்படுகிறது. அப்பாடல் வருமாறு:

அண்ணலும் இராமநாதன் அபிடேக
காலந் தன்னில்
நண்ணுசீர் உருத்தி ரத்தை
நமகமார் சமகம்* தன்னைப்
பண்ணமர் பவமா னத்தைப்
பஞ்சசாந் தியைமுன் னாக
எண்ணுமா மந்தி ரங்கள் இயம்புவான்
நிரயம் எய்தான்.

காஞ்சிப் புராணம் வாணேசப் படலம், செய்யுள் 106-ல்,

---

* ச என்பது உம்மை; மே என்பது எனக்கு; இவ்விரண்டு சொற்களும் மிகுதியாய் இருத்தல் பற்றிச் சமகம் என வழங்கப் பெறும்; சமகமந்திரத்தால் விரும்பியவைகள் வேண்டப்படுகின்றன.

"என்ற வாய்மொழி கேட்டலும்
தொழுதெழுந் தியாதவர் குலத்தோன்றல்
மன்ற மாமறை முழுவதும்
முழுவதும் உருத்திரன் எனுமாற்றல்"

என்ற வரிகளில் 'எல்லாப் பொருள்களும் உருத்திரனே என்பது திருவுருத்திரத்தில் கூறப்பெற்றது' எனச் சிவஞானமுனிவர் புகன்றுள்ளார்.

திருநெறிக்காளாக் காட்டுப்படலத்தில் 49-ம் செய்யுளில்,

"உருத்திரமும் கணித்துள்ளப் புண்டரிகத்துமை [பாகன்
திருப்பதங்கள் சிந்தித்து"

என்று உருத்திரம் ஓதுதலும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

முடிப்புரை

எனவே ஸ்ரீருத்திரம் ஓதுதல் இடைக் காலத்துப் பெரும்பான்மை என்று அறிய வருகிறது. ஆகவே "இவ்வுருத்திரத்திற்கு உரியவர், தமது வாணுளை வீணுளாகப் போக்காது, சிவனை மறவாத சிந்தையோடும், இதனை நியமமாக ஓதுக !"* உய்க!!

* பெரிய புராண சூசனம்—நாவலர்.

## ஆணையர் கலந்துகொண்ட திருவெம்பாவை - திருப்பாவை மாநாடுகள்

| | |
|---|---|
| 18-12-60 | தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி |
| 19-12-60 | மதனகோபால சுவாமி கோயில், மதுரை |
| ,, | சுவர்ணகாளீசுவரர் கோயில், காளையார் கோயில் |
| 20-12-60 | நன்மைதருவார் கோயில், மதுரை |
| 25-12-60 | வரதராஜப்பெருமாள் கோயில், பண்ருட்டி |
| 27-12-60 | அரங்கநாதசுவாமி கோயில், ஸ்ரீரங்கம் |
| 28-12-60 | தாயுமானசுவாமி கோயில், மலைக்கோட்டை |
| 5- 1-61 | ஆதிநாத ஆழ்வார் கோயில், ஆழ்வார் திருநகரி |
| ,, | சுப்பிரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர் |
| 6- 1-61 | நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி |
| 7- 1-61 | பூவணநாத சுவாமி கோயில், கோயில்பட்டி |
| 8- 1-61 | ஆதி கும்பேசுவரர்கோயில், கும்பகோணம் |
| ,, | பாபவிநாச சுவாமி கோயில், பாபநாசம் |
| 9- 1-61 | இருதய கமலநாத சுவாமி கோயில், வலிவலம் |
| 10- 1-61 | வேதாரண்யேசுவரர் கோயில், வேதாரண்யம் |
| ,, | சுந்தரராஜப் பெருமாள் கோயில், நாகபட்டினம் |
| 11- 1-61 | சுவேதாரண்யேசுவரர் கோயில், திருவெண்காடு |

**வடலூர்:** திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் (சத்தியஞான சபை, சத்திய தருமச்சாலை, சித்திவளாகத் திருமாளிகை) திருப்பணி 7-12-60-ல் திருப்பணிக்குழு ஆலோசகர் முன்னுள் முதல் அமைச்சர் திரு. O. P. இராமசாமி ரெட்டியார் M. L. C. அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அன்பர்கள் பலரும் திருப்பணிக்கு நன்கொடை அளித்து (பொருள் காப்பாளர், நிர்வாக அதிகாரி, வள்ளலார் தெய்வநிலையம், வடலூர், தெ. ஆ. மா.) திருப்பணி இனிது நிறைவேறச் செய்து, வள்ளற்பெருமான் திருவருளுக்குப் பாத்திரராகும்படி திருப்பணிக் குழுவினர் கேட்டுக் கொள்ளுகிறுர்கள்.

**திருப்பாதிரிப்புலியூர்:** கருடநதிக்கரை ஆஞ்சநேய சுவாமிக்கு அனுமந்த ஜயந்தி மகோற்சவம் கடலூர் உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில் கால்டாக்சு ஏஜண்டு திரு. D. கொண்டா ரெட்டியார் அவர்களால் சிறப்பாக நடைபெற்றது.

# சிவஞானபோதம்

[திரு. K. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன் தொடர்ச்சி)

**பாயிரவியல்:**

**(ii) அவையடக்கம்:**

'தம்மை உணர்ந்து தமையுடைய தன் [உணர்வார்,
எம்மை உடைமை, எமையிகழார்;—தம்மை
உணரார் உணரார்: உடங்கியைந்து தம்மில்
புணராமை, கேளாம் புறன்'

எனவரும் ஆசிரியர் மெய்கண்ட தேவர்மேலே மங்கலவாழ்த்து வாயிலாக முழு முதற் கடவுளது இலக்கணம் இன்னது என உணர்த்தி, அப்பொருளை நினைந்து, வாழ்த்தி, வழிபடுதற்கு உரிய அருள் உருவம் இவை என்பது அறிவுறுத்தருளினர். இங்கு அவையடக்கம் கூறுமுகத்தால் முதல்வன் அருட்கண்ணால் உண்மையை நோக்குவார் கூறும் பொருண் முடிபின் குறைவிலா நிறைவும், ஏனையோர் தம் சிற்றறிவு கொண்டு கூறும் பொருணிலைகளின் குறையும் உணர்த்துவார் ஆயினர்:—

**பாட்டின் பொருள் நிலை:** (ஒருவர் தமது அறிவின்கண் முதற்பொருளைத் தலைப்பட்டு உணரும் உணர்வே மெய்யுணர்வு எனப்படும்.) உடைப்பொருளாகிய தமது (ஆன்மாவினது) இயல்பை முன்னர் உணர்ந்து, பின் உடையவனாகிய முதல்வனைத் தமது மாசு நீங்கிய அறிவின் கண் தலைப்பட்டுணரும் பெருமக்கள் சிவமே ஆவர்; ஆதல்பற்றி அன்னோர் எம்மை அடிமையாக உடையவரே. ஆதலால், அவர் எம்மை இகழ்தலுக்குக் காரணம் இன்று: எம்மால் உலக நலங்கருதி இயற்றப்படும் சிவஞானபோதம் என்னும் இந் நூலினையும் நன்றெனக் கண்டு கைக்கொள்வர்.

இனி, தம்மியல்பையே உணரமாட்டாத பிறர் எல்லாரும் தலைவனாகிய முதல்வன் இயல்பை உணரமாட்டார் என்பது தெளிவு; இன்னோர் உண்மையின் ஒவ்வொரு கூறுபற்றி ஒருபுடை உணர்வையே உடையராய், யானையின் இயல்பை உணரப்புக்க பிறவிக்குருடர் போன்று, தாம் தாம் தம் சிற்றறிவாற் கண்டவற்றையே முழுவுண்மை எனக்கூறி, ஒருவரோடு ஒருவர் முரணி நிற்பர். இத்தகையோர் எம்மையும் எம்மாற் செய்யப்படும் நூலையும் பழித்து அல்லது பொருட்படுத்தாது இகழ்தல் கூடும். இங்ஙனம் இன்னோர் இகழ்ந்து உரைக்கும் புறன் உரைகளையு மாம் பொருட்படுத்தோம்—என்றபடி.

**விளக்கம்:**—

(i) இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) எனப்படும் முப்பொருள்களில் இறைவன் உடையவன்; ஏனை இரண்டும் உடைப்பொருள். உடைப்பொருள் அடிமையும் உடைமையும் என இருவகைப் படும். அவற்றுள் உயிர்கள் அடிமை; தளை எனப்படும் அறிவில்லாத பொருளெல்லாம் உடைமை ஆகும், **"என்று நீ அன்று நான் உன் அடிமைஅல்லவோ?"** என்னும் தாயுமான அடிகள் வாய்மொழி இங்கு ஒத்து நோக்கத்தக்கது.

(2) ஆன்மாவில் (பரம) ஆன்மாவைக் காண்கிறுன் (ஆத்மந்யேவ ஆத்மாநம் பச்யதி) என்பது பிருகதாரண்ய உரை!

எந்தத் திண்ணிய அறிஞர்கள் அவரை ஆன்மாவில் இருப்பவராகக் காண்கிருர்களோ அவர்களுக்கு என்றும் இன்பம்; ஏனையோர்க்கு இன்றும் (தம் ஆத்மஸ்தம், யே அநுபச்யந்திதீரா: தேஷாம் சுகம் சாச்வதம்; ந இதரேஷாம்) என்பது சுவேதா சுவதர உரை.

உள்ளது (சத்து) எனப்படும் செம்பொருளை ஒருவன் தன் உள்ளத்தின்கண் ஆய்ந்து ஒரு தலையாக உணர்ந்தால், அவனுக்கு மீளப் பிறப்பு உள்ளதாக எண்ணவேண்டா [ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாப்-பேர்த்து உள்ள வேண்டா பிறப்பு] என்பது திருக்குறள்.

"தன்னிற் றன்னை அறியும் தலைமகன்
தன்னிற் றன்னை அறியிற் றலைப்படும்"

என்பது அப்பர் அருள்மொழி.

இவை யாவும் ஒரே கருத்துடையன என்பதற்குக் காட்டப்பட்டன.

இங்குக் காட்டியபடி, முன்னர்த் தன்னைப் பாசத்தின் வேருவான் கண்டு, அதனால் மாசற்று விளங்கும் தன் அறிவின்கண் தோன்றும் திருவருளால் முதற் பொருளுக்கு அடிமையாகச் சென்று காணும்போது, அங்ஙனம் சென்ற உயிரைத் தன் வண்ணமாம்படி செய்து, ஞான ஆனந்தமயமாய் விளங்குவது முதற் பொருள். **'தன்னைக்கண்ட-என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசனுக்கே'** என்னும் பொன்வண்ணத் தந்தாதித் தொடர் **'ஆன்மா முத்திநிலையில் முதல்வனைச்சார்ந்து அவன் வண்ணமாகத் திகழும்'** என்னும் உண்மையை விளக்கும்.

இதனால், வீட்டு நெறிக்கண் உள்ள முதற்படி **தன்னை உணர்தலும்,** இரண்டாம் படி **தன்னை முதல்வனுக்கு அடிமையென்றுணர்ந்து அவனை அணைதலும்,** மூன்றும்படி **அவ்வாறணைந்து அவன் வண்ணமாய் நிற்றலும்** ஆம் என்பது விளங்கும். இவ்வாறு முதற் பொருளைத் தலைப்பட்டாரே அதன் இயல்பை உண்மையான் உணர்ந்து பிறர்க்கு உணர்த்தவல்லோர் ஆவர். **அவர் தம் வாய்மொழிகளே மெய்ந்நெறிக்கண் பிரமாணமாகத் தக்கவை.** உலகியல் நடைபற்றி எழும் ஏனைய இலக்கியம், இலக்கணம், தருக்கம், பேருரைகள் முதலியவையெல்லாம் ஒருவனது அறிவை நுட்பமும் திட்பமும் அடைவித்தற்கு உரியவையேயன்றி உண்மையைத் தெளிவிப்பவை ஆகா. கடல் நீர், அளவிலும் ஆரவாரத்தினும் மிக்கிருப்பினும், தாகம் தணிக்கமாட்டாமைபோல.

சிவஞான போதம் என்னும் இந்நூல் சுவானுபவத்தை உரைகல்லாகக்கொண்டு உபநிடதங்களின் முடிநிலைத் துணிபுகளைக் கோவைசெய்து உணர்த்துவது; ஆதலால், சுவானுபூதிமான்கள் இந்நூலை ஏற்றுப் போற்றுவதன்றி இகழ்தல் செய்யார் என்பார் **தம்மை உணர்ந்து தமையுடையதன் உணர்வார் எமை இகழார்** என்றார். **எம்மைஉடைமை** (யால்) எனக் காரணங் கூறியது முடிநிலை உண்மையனுபவத்தில் வேறுபாடு இருத்தல் கூடாமையின், தமது நெறி அவர் தம் கருத்து ஒழுங்கிற்கு இயைந்ததாகவே இருக்கும் என்னும் துணிபுபற்றி.

**தம்மை உணர்ந்து** என்பதில் **தாம்** என்றது உயிரை, **தமையுடைய தன்னுணர்வார்** என்பதில் **தான்** என்றது பரமான்மா எனப்படும் முதற்பொருளை. **'தம்மை உணர்ந்து தமையுடைய தன் உணர்வார்'** என்பதற்கு நின்மல துரிய நிலைக்கண் தான்பணி நீத்தல் வாயிலாகத் தம் இயல்பு உணர்ந்து துரியாதீத நிலைக்கண் முதல்வனை உணரும் சித்தாந்த சைவர் என்பது பொருளாக மாபாடியம் உரைக்கின்றது.

(3) இனி, **தம்மை உணரார் உணரார்** என்றது சீவான்மாவின் இயல்பைக் குற்றமற உணர்ந்து கொள்ளாத காரணத்தால் முதற்பொருளை உணரமாட்டாராய் **வேறு வேறு சமயம் செய்தாரை.** அங்ஙனம் செய்யப்பட்ட சமயங்களை **உலகாயதம்** முதலாகச் சிவாத்துவிதம் ஈறாக இருபத்து நான்காக வைத்து எண்ணுதல் சைவநூல் மரபு என்பது மேலே ஒருவாறு கூறப்பட்டது.

**'தம்மை உணரார் உணரார்'** என்பதையும் **'உடங்கியைந்து தம்மிற் புணராமை கேளாம் புறன்'** என்பதையும் மூலமாகக்கொண்டு பிறசமயக் கொள்கைகளை மதமும் மறுப்புமாக வைத்து உரைக்கும் நூல்கள் **சிவஞான சித்தியின் பரபக்கமும் சங்கற்ப நிராகரணமும்** ஆகும். அவ்விரு நூல்களுக்கும் வித்தாகிய மூலம் இவ்விரு தொடர்களே ஆகும்.

(4) இவ்வடிகளின் ஆழ்ந்தபொருளை விளக்கும் சிவஞான மாபாடியப் பகுதிகள் படித்து இன்புறத்தக்கவை. ஆதலால் அப்பகுதிகள் இங்கே வேண்டிய அளவு எடுத்துத் தரப்படுகின்றன:—

"**தம்மை யுணரார்** எனப் பொதுப்படக் கூறுதலானே, தாம் ஒரு பொருள் உண்டென்பதை உணராத **உலகாயதரும்,** தம்மைக் குணிப்பொருள் என்றுணராத **புத்தர் சாங்கியர் மாயாவாதிகளும்,** தம்மை முதல்வனுக்கு அடிமை என்றுணராத **ஏனைச் சமயத்தாரும்** அடங்குவர். **பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவித சைவரும் தம்மை உடைப்பொருள் எனக்கொள்ளினும்,** அவருட் **பாஞ்சராத்திரிகள்** உடைப்பொருளாகிய தமக்கு அணுபரிமாணம் கோடலானும், உடையான் அல்லாதானை உடையான் என மயங்கிக்கோடலா

னும், உடையானுக்குப் பரிணமங் கூறுத லானும், **சிவாத்துவிதசைவர்** உடையானது சிற்சத்திக்குப் பரிணமங்கூறுதலானும், பிறவாற்றானும் **அவரும் தம்மை உணரார்** எனக்கொள்க. (கோடல்-கொள்ளுதல்)

"**அவர் உடங்கியைந்து தம்மிற் புணராமை** யாவது, பிறவிக்குருடர் பலர் குழீஇக் கொண்டு வேழங்காண்டல் விருப்பான் அது நின்றுழிச் சென்றுகையினல் ஒவ்வோர் உறுப்பினைத்தைவந்து (தடவி), **வேழமாவது முறம்போல்வதென்றும், உரல்போல்வதென்றும், உலக்கை போல்வதென்றும், மலை போல்வதென்றும், தம்முண் மாறுகொண்டு ஒருவரையொருவர் மறுத்துக் கலாம் (கலகம்) விளைத்தல் போலச்** சித்தாந்த சைவநெறி நின்று ஆசான் திருவருள் பெறுதார் தத்தம் உணர்விற்கேற்பச் சமய நூல்களில் ஒவ்வொன்றனை ஆராய்ந்து அவற்றிற்கூறும் ஏகதேசப் பொருள்களே பற்றிக் கூறி, **ஒருவரை ஒருவர் மறுத்து தம்முண் மாறுகொண்டு கலாம் விளைத்தல்.**

"அங்ஙனம் கலாய்க்கின்றுழிக் கண்ணுடையான் ஒருவன் நோக்கி, இவர் செவி முதலிய ஓர் ஓர் உறுப்புக்களே பற்றிக் கூறிக் கலாம் விளைக்கின்றார்கள் எனவும், வேழத்தின் (யானையின்) இயல்பு வேறு எனவும் தெரிந்துணர்ந்து அவர்க்கு அதனை உணர்த்தலுறின், '**கொடிறும் பேதையும்**, போலத் தாம் கொண்டதே பற்றி அவனையும் தம்முள் ஒருவனாக வைத்துக் கூறி, மாறுகோடலேயன்றிப் பொருள் எனக் கொள்ளமாட்டார். அதுபற்றி அவன் வெகுளாது இவரது இயல்பு இது என நகையாடி ஒழிந்துவிடும். (வெகுளாது—கோபியாது; கொடிறு-பொருள்களை இடுக்கிப்பற்றும் கருவி; அது குறடா என வழங்கப்படும்.)

"அதுபோல, ஒவ்வொரு சமய நூல் பற்றி அங்ஙனம் பிணங்குவாரை **அவையெல்லாம் ஒவ்வோர் ஏகதேச இயைபுபற்றிக் கூறின** ஆகலான், அவை பற்றிப் பிணங்கற்க எனவும், **பொருட்டன்மை வேறு** எனவும் யாம் **இந்நூலால் உணர்த்தப்புகின்**, அவர் **அதனைக் கொள்ளமாட்டாது** பயிற்சி வயத்தால் **தாங்கொண்டதேபற்றி**, எம்மையும் தம்முள் ஒருவராக வைத்து இகழ்ந்துரைப்பார் ஆகலின், அவ்வழி அவர் வெள்ளறிவு இது வென்றொழிவதன்றி அதனைக் கொள்ளாம் என்பார் **கேளாம்புறன்** என்றார். **கேட்டல் பொருளாகக் கோடல்.**"

(5) முதற்பொருள், செம்பொருள், சத்து, பிரமம், சிவம், பரமான்மா—எனப் பலவாற்றாற் குறிக்கப்படும் கடவுள் பற்றிய உண்மை அனுபவம் **வேதங்களிலும்**, **உபநிடதங்களிலும், ஆகமங்களிலும், திருமுறைகள் திருக்குறள்** முதலிய செந்தமிழ் நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவற்றை ஆராயப் புகுவார் பொருண்முடிபு காணும்போது பலபடக் காண்கிறார்கள். சிலர் காணப்படும் உலகம் ஒன்றே உண்டு, கடவுளும் உயிரும் இல்லை என்பர். சிலர் அறிவு வடிவப் பிரமம் ஒன்றே உள்ளது; ஏனை உலகும் உயிரும் மயங்கிய வழிக்கயிற்றில் அரவுபோலத் தோன்றி மெய்யுணர்ந்த வழிக்கானல் நீர் போல் இன்றாய்க் கழியும் என்பர். சிலர் முப்பொருளையும் உடன்பட்டு, உயிரும் உலகமும் மண்ணிலிருந்து ஆக்கப்பட்ட குடம், கரகம், சால் முதலியனபோல, உருவுதிரிந்து தோன்றியவை என்பர். சிலர் கடவுளை உருவம் என்பர்; சிலர் அருவம் என்பர். சிலர் கடவுள் உலக நலன் கருதித் தன்னிச்சையால் பிறவி எடுத்து உயிர்கள்போல நடிக்கும் என்பர். சிலர், இதனை உடன்படாது, கடவுள் வேண்டும்போது தனது அருள் உருவைக்காட்டி அருள்புரிதலும், தன்னை அணைந்த சுத்தான்மாக்கள் மூலம் ஏனை உயிர்களுக்கு உபதேசித்தலும் கூடும் ஆதலின், பிறவியிற் புகவேண்டா என்பர்.

இப்படிப் பல்வேறு வகைப்பட்ட கொள்கைகளுள் எது உண்மைக்கொள்கை எனக் காணல் உறுவார்க்கு இப்பாட்டின் பிற்பகுதி ஒரு **சோதனை நெறியைச்** சுட்டுகின்றது.

பிறவிக் குருடர்கள் யானையைக் கண்ணாற் காணப்பெறாமல் தடவியுணர்ந்து கூறிய இயல்புகள் எல்லாம் உண்மையேயன்றிப் பொய்யல்ல; ஆயினும் அவற்றுள் எதுவும் முழுவுண்மை அன்று. கண் உடையான் கூறும் உண்மையியல்பு மற்றவர் கூறிய இயல்புகள் அனைத்தையும் தனது ஒவ்வொரு கூறாக அமையக்கொண்டு, அவையனைத்திற்கும் அப்பாற்பட்டதும்

ஆகும். இதுபோல முதற்பொருளைத் தலைப்பட்டு அருட்கண்ணால் கண்டுணர்ந்தார் கூறும் பொருளியல்பு, பிறர் உய்த்துணர்ந்து கூறும் பொருளியல்புகளுள் எவற்றையும் '**இது ஆகும அது ஆகாது**' எனக் காரணமின்றி மறுக்க வழி செய்யாமல், அவை அனைத்தையும் தன் ஏகதேசமாகக் கொண்டு, முறைப்படுத்தி இயைத்து உணர வழி வகுக்கும்.

சமய நூல்களை ஆராய்ந்து எல்லாவற்றையும் தழுவிய **பொதுநிலை உண்மைப் பொருண்** முடிபு காணல் உறுவார்க்குவேண்டிய சோதனை நெறிக்கொள்கை (Prinicip-le of critical test) ஒன்றனை மேற்காட்டியவாறு உணர்த்துவதே **உடங்கியைந்து தம்மிற்புணராமை** எனப்போந்த பகுதியின் கருத்தாகும். இத்தொடரின் அடி நிலைக் கொள்கை (Basic Principle)யை வழி நூலாசிரியர் அருணந்திசிவனார் பின்பற்றிப் பொதுநிலைக் கொள்கை ஒன்றனைத் தமது நூலில் நிறுவுவது அறிந்து சிந்தித்தற்கு உரியது. அது,

"ஓதுசம யங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொ(ன்)று ஒவ்வாமல் உளபலவும்; [இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னில்
இதுவாகும்; அது அல்ல(து) எனும் [பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொரு சமயம், அதுசமயம், [பொருள், நூல்.
ஆதலினால் இவையெல்லாம்
அருமறைஆ கமத்தே
அடங்கியிடும்; அவையிரண்டும்
அரனடிக்கீழ் அடங்கும்."

எனவரும்.

வேத ஆகமங்களும், அவற்றிற் கூறப்படும் பொருண் முடிபுகளைத் தமது சுவானுபவத்தோடு பொருந்த அருட்கண்ணாற் கண்டு மெய்ந்நெறியை உலகத்திற்கு விளக்கியருளிய **திருஞானசம்பந்தர்** முதலிய அருளாசிரியன்மார்களுடைய அருட்பாடல்களும் கொண்டுள்ள **முடிநிலை முடிபுகள் ஒவ்வொன்றும் பிறர் கூறும் ஏகதேச உண்மைகளைத் தம் மகத்தே அடங்கக்கொண்டு முழு வுண்மைகளாக நிலவுகின்றன** என்பதை இச்சிவஞான போதநூல் தெள்ளத் தெளிய விளக்கிச் செல்கின்றது. அஃது ஆங்காங்குக் காட்டப்படும்.

இனி, இவ்வடிப்படைச் சோதனை நெறியை உட்கொண்டு, குமரகுருபர அடிகள் வைதிக நெறிகளைப் படிமுறை செய்து ஓர் உவமையின் வைத்து விளக்குகிறார். அஃது இங்கு அறிதற்கு உரியது:—

'முதல்வன் சொற் பிரபஞ்சத்திற்கு மூலம் ஆகிய குடிலை (மகாமாயை அல்லது பிரணவசத்தி) என்னும் பெரிய வயலில் **அருளாகிய** விதையை விதைத்துக் **கருணையாகிய** நீரைப்பாய்ச்சி, **வேதம்** என்னும் மரத்தை வளர்த்தான். அதன்கண் தோன்றும் பயன்கள் இலை முதல் கனிவரையிற் பலவாக உள்ளன.

'அவற்றுள் பலர் (தார்க்கிகர்) இலைகளையே நன்று எனக் கண்டு கொண்டு மகிழ்ந்தனர்; வேறு பலர் (மீமாஞ்சகர்) இலையைவிட்டுத் தளிரையே நன்று எனக் கொண்டனர். மற்றும் பலர் (சாங்கியர், யோக மதத்தினர், பாஞ்சராத்திரர், ஏகான்மவாத வேதாந்திகள்) தளிரை விடுத்து, அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்பவற்றைத் தனித் தனிக்கொண்டு மகிழ்ந்தனர். (இவர்கள் எல்லாரும் மூலப் பிரகிருதிக்கு மேற்பட்ட மாயை, மகாமாயை என்னும் நுண்பொருள்களின் உண்மைகளை அறிந்துகொள்ளாதவர்கள்). இப்படி இந்த ஆறு உறுப்புக்களும் பலருக்குப் பலவாறு பயன்படுவனவேயாக, பெரியோரால் ஆராயப்படும் வேதாந்தம் (பர உபநிடதங்கள்) எனப்படும் உச்சியில், தெவிட்டாத சுவையுள்ள அரிய பழம் பழுத்தது. அப்பழத்தின் சாரமாகிய சைவ சித்தாந்தத் தேன் அமுதை அருந்தப்பெற்ற தவமுடையார் சிலரே ஆயினர் எனக் கூறினர்:

"குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதபம் வளர்த்தனை;
பாதபம் அதனில் படுபயன் பலவே:

அவற்றுள்,

இலைகொண் டுவந்தனர் பலரே, இலைஒரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே, தளிர்ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ்(சு) அருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டு கொண்(டு) உவந்தனர் [பலரே

# திருநாளைப்போவார் நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

## திருத்தொண்டத் தொகை

திருத்தொண்டத் தொகையுள் உருத்திர பசுபதிநாயனாரை அடுத்துத் தனியடியார்களுள் பதினேழாம் எண்ணு முறைமைக்கண் நிற்பவர் திருநாளைப்போவார் நாயனார். இவரைப்பற்றிக் கூறும் திருத்தொண்டத் தொகைப் பகுதி,

"செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்" என்பது.

## நாயனாரது சிறப்புப் பெயர்

'திருநாளைப் போவார்' என்பது இவர்க்குக் காரணப்பெயரே. இவரது இயற்பெயர் 'நந்தனார்' என்பதே. நம்பியாரூரர் நாயன்மார்களது வரலாறுகளை எவ்வகையாலேனுங் குறிப்பித்துச் செல்லும் முறையிலே அவர்களைப் பற்றிக் கூறுந் தொடர்களை அருளிச் செய்கின்றாராதலின், இந்நாயனாரது சிறந்த வரலாற்றுக் குறிப்பு இத் தொடரால் விளங்குதற்பொருட்டே 'நாளைப் போவார்' என்னும் காரணப் பெயராலே இவரைக் குறித்தருளினார். ஆயினும், அதுபற்றியே இப்பெயரை அவர் தாமே ஆக்கியதாகக் கொள்ள வேண்டுவதில்லை; இப் பெயரும் அவருக்கு முன்பே வழக்கில் இருந்திருத்தலுங் கூடும்; அன்றி நம்பியாரூரர் தாமே ஆக்கிக் கூறினார் எனினும் அதனால் வருவதொரு குற்றம் இன்று.

## இயற்பெயர்

'நந்தன்' என்பது, 'ஆநந்தன்' என இக்காலத்து இடப்பட்டு வந்தது என்பதனை இந்நாயனாரது இயற்பெயரைக் கொண்டு அறியலாம். 'நந்தன்' எனினும், 'ஆனந்தன்' எனினும் பொருள் ஒன்றே; அஃதாவது, 'மகிழ்ச்சியுறுபவன்' என்பதே இரண்டற்கும் பொருள். சிவனது திருவடிப் பேரின்பத்தினால் உலகியற் றுன்பங்களால் சிறிதும் தாக்குண்ணாது மகிழ்ச்சியே உற்றிருந்த இவருக்கு, இவ்வாறு இயற்பெயர் அமைந்ததும் மிகமிகப் பொருத்தமே.

## வரலாறு

இந்நாயனாரது வரலாறு 'அற்புதத்தினும் அற்புதம்' என்று சொல்லத்தக்க பெரியதோர் அதிசயத்தினை உடையது. அஃதாவது, இம்மண்ணுலகிற் பிறந்தார் எவரும் இம் மண்ணுலகிலேயே முன்னை உடம்பு நீங்க, மற்றோர் உடம்பை எடுத்து நின்றார் இல்லை. விண்ணுலகு செல்லுங்காலத்து வேறொரு தேவ உடம்பைப் பெற்றுச் சென்றார் என்பதனையும், இவ்வுடலோடே விண்ணுலகு சென்றார் என்பதனையும் கேட்டிருக்கின்றோம். ஆனால், இவர்போல, இவரது விருப்பத்திற்கு மாறாயிருந்த உடம்பை இவ்விடத்திலே நீக்கி, அதற்கு ஏற்புடைய மற்றோர் உடம்பினைப் பெற்றுத் தம் விருப்பம்

---

அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப
ஓரும் வே தாந்தம்என் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே"

எனவரும். (பாதபம்—மரம்)

இங்கு உச்சியிற் பழுத்த பழம் என்றதனால் வேதாந்த சூத்திரங்களுக்குச் சீகண்டாசாரியர் உரைத்த உரைபற்றி எழுந்த சிவாத்துவிதசைவம் குறிக்கப்பட்டது. அஃது அநாதி நித்திய பதார்த்தங்கள் எனப்படும் பதி பசு பாசங்களின் தடத்த நிலையைக் குற்றமறக் கொண்டுரைக்கும். அம்முப்பொருள்களை முத்திநிலை பற்றிச் சிவம், ஆன்மா, மலம் என வைத்துச் சொரூப நிலை தேற்றும் சைவ சித்தாந்தம் அதன் சாரம் எனப்பட்டது. அவையடக்கம் முற்றிற்று.

நிறைவுறப் பெற்றுரை நாம் எவ்விடத்துங் கேட்டதில்லை.

## நாடும் ஊரும்

திருநாளைப்போவார் நாயனுர் சோழ நாட்டில் ஆதனூரில் தோன்றினுர். பிற் காலச் சோழர்கள், ஆட்சியை எளிதில் நடாத் துதற்பொருட்டுச் சோழ நாட்டினைப் பல உள்நாடுகளாகப் பிரித்திருந்தனர். அப்பிரி வின்படி ஆதனூர், மேற்கானாட்டில் அமைந் தது எனச் சேக்கிழார் குறித்தருளுகின்ருர். இந்நாட்டிற்கு உரிய நதியாய் அமைந்தது கொள்ளிடமே என்பதனையும் அவர் நன்கு விளக்கியுள்ளார்.

இம்மேற்கா நாட்டின் வளப்பத்தினைச் சேக்கிழார் ஒன்றிரண்டு அடிகளில் தெரி வித்துவிட்டு, ஆதனூரின் நீர்வளப்பத்தினை யும் நிலவளப்பத்தினையும் சில செய்யுட் களால் மிக அழகுபட விளக்குகின்ருர். திருநாளைப் போவார் ஆதனூர் என்னும் அவ் வூரில் தோன்ருது, அவ்வூரின் சேரியில் தோன்றினுராதலின், அந்தச் சேரியின் இயற்கை நிலையினைச் சேக்கிழார் ஈடும் எடுப் பும் இல்லாத வகையில், உள்ளது உள்ள வாறே சித்திரித்துக் காட்டுகின்ருர், உள்ளது உள்ளவாறே கூறினுர் என்ருல், அங்குள்ள பொருள்களை எல்லாம் தொகுத்து ஒரு பட்டி யல் கொடுத்துவிடவில்லை. அவ் வருணனை யைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்து, கற்பாருள்ளத்தையும் கேட்பாருள்ளத்தை யும் கவர்ந்து கொள்ளுமாறு சுவை ததும்பக் கூறியுள்ளார். இதனுல், சங்கத்துச் சான் ருேர்களாகிய நல்லிசைப் புலவர்கட்குப்பின், சேக்கிழாருக்கே தனியுரிமை யுடையதாய் நின்ற தன்மைநவிற்சியணிக்கு, இவ்விடத் தைச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகக் காட் டுவர் பலரும். அதனை ஒருசிறிது இவண் காட்டுதல் பொருந்தும்.

## புலைப்பாடியின் வருணனை

ஊரைச் சூழ்ந்துள்ள இடம் 'புறம்பணை' (புறம்பே அணைந்துள்ளது) எனப்படும். அந்த இடங்கள் ஊரின் ஒவ்வொரு திசையிலும் ஒவ்வொரு வகையாய் அமைந்திருக்கும். அவற் றுள் நன்செய் நிலங்களாய் அமைந்துள்ள பகுதியே சிறப்புடையது. நன்செய் நிலங் களே 'வயல்' எனப்படும். பெரும்பாலும் சேரிகள் வயல்களின் நடுவிலே அமைந்திருக் கும். அவ்வாறே ஆதனூர் வயல்களின் நடு விலே ஒரு பெருந்திடல் உள்ளது. அத் திடலில் அமைந்திருந்தது அவ்வூர்ச் சேரி. சேரியைச் சேக்கிழார் 'புலைப்பாடி' என்கின் ருர்.

சேரிவாழ் மக்களைக் 'கீழ்மைத் தொழில் உழவர்' என அவர் குறிக்கின்ருர். அது, 'நிலத்திற்கு உரிமையுடையவர்களை (நிலக் கிழார்களை) அண்மிநின்று, அவர்களின் கீழே உழவுத் தொழில் செய்து பிழைப்பவர்' எனப்பொருள் தரும். அது பெரும்பாலும் அடிமைத் தொழிலேயாகையால், 'கீழ்மைத் தொழில்' எனவும், 'கடைத் தொழில்' என வும் படும். இதுபற்றியே சேரிவாழ்நர், 'கடைஞர்' எனவும் பெயர்பெற்றனர். சாதிகள் எல்லாம், தொடக்கத்தில் தொழில் பற்றியே கொள்ளப்பட்டனவாகையால், பிற் காலத்தில் அவையெல்லாம் பிறப்புப் பெய ராகவே ஆயின.

'ஆதனூர்ப் புலைப்பாடி குடிவளம் மிகப் பெருகி இருந்தது' என்கின்ருர் சேக் கிழார். எளிய மக்கள் கள்ளம் கபடற்ற உள்ளம் உடையவர்கள். 'நாளைக்கு வேண் டும்; மறுநாளைக்கு வேண்டும்' என்று சேர்த்து வைத்து இறுகப் பிடிக்கும் தன்மை யில்லாதவர்கள்; அன்றன்ருடம் கிடைத் ததை உண்டு கவலையின்றிக் காலம் கழிப்ப வர்கள்; உழைப்பு மிகுதியால் உடல் உர மும் உடல் நலமும் பெற்றுத் திகழ்பவர்கள்; ஆதலின், அவர்கள் சுற்றம் பெருகி வாழ்தல் சொல்ல வேண்டா. ஆகவே, ஆதனூர்ப் புலைப்பாடியும் அவ்வாறிருந்தது.

குடிகள் மிகுந்திருந்தமையால் இட நெருக்கம் மிகுந்து, சிறுசிறு குடிசைகள் அங்கு மிகப் பலவாய் நிறைந்திருந்தன. அந்தச் சிறு குடிசைகளையும் அவ்வப் பொழுது புதுப்பித்துக்கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள் அம்மக்கள். அதனுல், அவற் றின் கூரைகள் எல்லாம் சிதைந்தும், அழிந் தும் மிகப் பழைமையுடையனவாய் இருக் கின்றன. அவையெல்லாம் புல்லாலும் வைக் கோலாலும் வேயப்பட்டவை. அவற்றின் மீது அவர்கள் சுரைக்கொடியைப் படரவிட் டிருக்கின்ருர்கள். சுரைக்காய் அவர்கட்குரிய புலாலுணவோடு பயன்படும் என்பர். 'சைவர் களாய் இருப்பவர்கள் உண்ணலாகாது' என

விலக்கப்பட்ட மரக்கறிகளுள் சுரைக்காயும் ஒன்றாக இருப்பது, அதனை இம்மக்கள் பெரிதும் விரும்புதலினாலேயே போலும்!

இக்கருத்துக்களை யெல்லாம் அடக்கியுள்ள சேக்கிழாரது திருப்பாடல் வருமாறு:-

"மற்றவ்வூர்ப் புறம்பணையின்
வயல்மருங்கு பெருங்குலையிற்
சுற்றம்விரும் பியகீழ்மைத்
தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற்
படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல
நிறைந்துளதோர் புலைப்பாடி.

(குலை - கரை (திடல்). துவன்றி - நெருங்கி. குரம்பை - குடிசை.)

இத்தகைய சிறிய குடிசைகளின் முன்னிடங்களிலெல்லாம் கோழியின் சிறிய குஞ்சுகள் திரிந்துகொண்டிருக்கின்றன; தோற்கயிறுகள் சிந்திக்கிடக்கின்றன; பிறந்து சில நாட்களேயான சிறிய நாய்க்குட்டிகள் சிறிது துள்ளிக் குதிக்கின்றன; அந்த நாய்க்குட்டிகளை இளஞ்சிறார்கள் காண்கின்றார்கள்; நாய்க்குட்டிகளின்மேல் சிறுவர் யாவர்க்கும் உண்டாகும் விருப்பம் நாம் யாவரும் அறிந்ததே. ஒருவர் இல்லத்தில் ஈனப்பட்டுக் கிடக்கும் நாய்க்குட்டியை மற்றோர் இல்லத்துச் சிறுவர் காணின், அவர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஒரு குட்டியை அவ்வில்லத்தினர் அறியாமல் எடுத்துக்கொண்டு ஓடி விடுதல் இயல்பு. அவ்வாறே இப்புலைப்பாடிச் சிறுவர்களும் சில குட்டிகளை எடுத்துக்கொண்டு ஓடுகின்றார்களாம். புலைப்பாடிச் சிறுவர்களும் சில அணிகலன்களை . அணிந்திருக்கின்றார்கள்; அவை பொன்னாலோ அல்லது வெள்ளியினாலோ செய்யப்பட்டவை அல்ல; இரும்பினாற் செய்யப்பட்டவை. அவை கைக்காப்பு, அரைச்சதங்கை என்பன. அவை அவர்தம் ஏழைமைக் கேற்ப அவ்வாறு செய்யப்பட்டனவாயினும், இரும்பு உடைமை, பேய் முதலியன தீண்டி வருத்தாதிருத்தற்கும் பயன்படுவனவாம். அச்சிறுவர்களும் கருநிறம் உடையர்; அவர்தம் அணிகலங்களும் கருநிறம் உடையன. கரியகாப்பணிந்த கரிய கைகளால் அச்சிறுவர்கள் நாய்க்குட்டிகளை அயலார் குடிசையிலிருந்து கவர்ந்துகொண்டு ஓடும்பொழுது அக்குட்டிகள் தம் மிகச் சிறிய மெல்லிய குரலால் குரைக்கின்றன. அக்குரைப்பொலி அவற்றிற்கு உரியவர்கள் காதில் விழாதபடி அச்சிறுவர்களது அரையிற் கட்டியுள்ள இரும்புச் சதங்கையின் சிறிய ஒலிகள் அடக்கி விடுகின்றனவாம். என்னே அழகு! சிறிய குரைப்பொலியை அடக்க இருப்பு மணியின் சிறிய ஓசை போதுமன்றோ! இந்நயஞ் செறிந்த பாடல்,

"கூருகிர்மெல் லடியளகின்
குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயில் முன்றிலின்நின்ற
வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக்
கருஞ்சிறார் கவர்ந்தோட
ஆர்சிறுமென் குரைப்படக்கும்
அரைக்கசைத்த இருப்புமணி'

என்பது. இவைபோல இன்னும் ஒரு சில செய்யுட்களையே ஆசிரியர் சேக்கிழார் அமைத்துள்ளாராயினும், அவற்றின் தன்மை நவிற்சி அழகினை ஈண்டு விளக்கப் புகின், இக்கட்டுரை மிகவும் பரந்துபட்டுச் செல்லும். அவையெல்லாம் அவர்தம் புராணத்துள்ளேயே கண்டு இன்புறற் பாலனவாம். அன்றியும் அந்நயங்களை யெல்லாம் நம் சொல்லால் எவ்வளவுதான் கூறினும், அவரது செய்யுளிலிருந்து அவற்றை உணருமிடத்து உண்டாகின்ற இன்பம் போன்ற இன்பம் உண்டாவதில்லை. மேலும் ஒரு சிறிதும் வெற்றிடமின்றிச் செறிந்து கிடக்கும் பொருளையுடையன சேக்கிழாரது செய்யுட்கள் யாவும். அதனால், அவர் ஒரு பொருளுக்கு நூற்றுக்கணக்கான பாடல்களை அமைப்பதில்லை. ஒரு சில செய்யுட்களே அமைப்பார். ஆயினும், அவற்றின் பொருள்களை விளக்கமாக எடுத்து உரைக்கப்புகின், அவ்வுரை மிக விரிந்து செல்லும்; அவ்வாறு விரிந்து செல்லினும் அவற்றின் முழுநிலையை விளக்கி விடுதல் இயலாததாகவே முடியும். ஆதலின் இவ்வருணனையை இதனுடன் நிறுத்திக் கொள்வோம்.

## நாயனாரது உணர்வின் சிறப்பு

இத்தகைய புலைப்பாடியிலேயே, 'திருநாளைப்போவார்' என்னும் நந்தனார் தோன்றியருளினார். உடம்பு, தாழ்த்தப்பட்ட மக்கள் இனத்தில் தோன்றியதாயினும், அவரது உணர்வு, 'சாமுசித்தர்' என்னும் உயர்ந்த நிலையை உடையதாய் இருந்தது. அஃதாவது,

'கருவிலே திருவுடையர்' என்னும் முறையில் பிறக்கும்பொழுதே சிவபிரானது திருவடியில் உண்மை அன்புடையவராய்ப் பிறந்தார். இதனைச் சேக்கிழார்,

"மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைந்த உணர்வோடும் வந்தார்" எனக் குறித்தருளினர். 'சிவன்கழற்கே' என்பதில் உள்ள பிரிநிலை ஏகாரம், இவர் எந்த ஒரு நாளிலாயினும், எந்த ஒரு பொழுதிலாயினும், புலைப்பாடியினரும் பிறரும் தங்கள் சிற்றறிவு காரணமாகச் சிறு பயன்களை வேண்டி வழிபடும் 'காடன், மாடன்' முதலிய சிறு தெய்வங்களைச் சிறிதாயினும் சிந்தையுள் வைத்தாரல்லர் என்பதை விளக்கி நின்றது. இதனைப் பின்னரும், "மறந்தும் அயல் நினைவின்றி" என அவர் குறிக்கின்றார்.

## இவர் குலப்பிறப்பிற்குக் காரணம்

இத்துணைத் திடபத்தி இவருக்குக் கருவிலே எவ்வாறு அமைந்தது? முன்னைத் தவமிகுதியாலன்றோ அமைந்தது! இத்துணைப் பெருந்தவமுடைய இவர்க்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் இனத்திற் பிறக்குமாறு இருந்த வினைதான் யாதோ! அல்லது,

"கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்;...
அறிவார்யார்—
நல்ஆள் பிறக்குங் குடி"
(நான்மணிக்கடிகை)

என்றவாறு எக்குலத்திலும், அறிவதற்கரிய திருத்தொண்டர் இருத்தல்கூடும்; அதனாற் குலம்பற்றி யாவரையும் இகழற்க எனவும், குலம் முதலிய உலகியல் தடைகளெல்லாம் தனது அருட்பெரு நெறிக்குத் தடையாகா; அந்நெறியில் அனைவரும் ஒரு தன்மையரே எனவும் நம்மனோர்க்கு அறிவுறுத்தற்பொருட்டு இறைவனே அவரை அங்ஙனம் பிறக்குமாறு செய்தானோ! அதனை நாம் அறியோம்! சேக்கிழாரும் அதுபற்றி யாதுங் கூறவில்லை.

"தவம் செய்தார் என்றும்
தவலோகம் சார்ந்து—
...தவஞ்செய்த—
நற்சார்பில் வந்துதிப்பர்

என்னும் சிவஞானபோதத்தின்படி, தவமுடையார்க்கு அத்தவப்பயன் மற்றொரு பிறப்பிற் கைகூடவேண்டியிருப்பின், அதற்குரிய நல்ல சூழலிலேயே தோன்றுவர். இந்நாயனாரது வரலாறு அதற்கு மாறாய் உள்ளது. தாழ்ந்த இனமென்று அக்காலத்து எண்ணப்பட்ட பிற பிற குலங்களிலும் நாயன்மார் சிலர் சிலர் தோன்றியுள்ளனர். அவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோராவர். ஆயினும், அவரெல்லாம் தம் குலப்பிறப்பை எண்ணித் துன்புறுமாறு யாதொரு நிகழ்ச்சியும் நிகழவில்லை. இவர்க்கு அவ்வாறின்றி, "இன்னல் தரும் இழிபிறவி இதுதடை" என்று எண்ணி ஏக்கறும் நிலை உளதாயிற்று. ஆகவே, இதனை இறைவன் செயல் என்றேயும் எண்ணலாம் எனத் தோன்றுகின்றது. ஏனெனில், 'உலக நலத்தின்பொருட்டு, தன்னையே சார்ந்து நிற்பவர்க்குச் சிறிது துன்பத்தையும் இறைவன் தருகின்றான்' என்பதனை திருஞானசம்பந்தர், நம்பியாரூரர் இவர்களை மண்ணின்மேல் பிறக்குமாறு செய்த செயல்களால் அறிகின்றோமன்றோ! அந்நாயன்மார்களைப் பின்பு அவர்கள் செய்யவேண்டிய செயல்கட்கேற்ப, வைதிக அந்தணர் குலத்திலும், ஆதிசைவ அந்தணர் குலத்திலும் தோன்றச் செய்தான்; இவரை இக்குலத்தில் தோன்றச்செய்தான். நாயன்மார் தோன்றிய குலம் யாதாயினும், அவரது தோற்றம் அக்குலத்தின் தவப்பயனே என்பதைப் பல இடங்களில் சேக்கிழார் குறித்துச் செல்கின்றார். அவ்வாறே தாழ்த்தப்பட்ட இனத்து மக்கள் இந்நாயனாரைப் பின்பற்றிச் சிவபத்தியை மேற்கொண்டு தமக்கேற்ற வகையில் சிவத்தொண்டினைப் புரிந்து உய்தி பெறுமாறு இவரை அக்குலத்தில் இறைவன் தோற்றுவித்தான்போலும்!

## வாழ்க்கைநிலைக்கு ஏற்ற தொண்டு

இந்நிலையில், இவர், தமது வாழ்க்கை நிலைக்கு ஏற்றவகையில், பேரார்வத்தோடும், சிவபெருமானுக்குத் திருத்தொண்டுகள் பலவற்றைச் செய்துவந்தமையையைக் கூறுதற்பொருட்டு, இவரது, சாமுசித்த நிலையை,

"பிறந்துணர்வு தொடங்கியபின்
பிறைக்கண்ணிப் பெருந்தகைபாற்
சிறந்தபெருங் காதலினாற்
செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும் அயல் நினைவின்றி"

என முன்னர் இனிது விளக்கி,

"........வருபிறப்பின் வழிவந்த
அறம்புரி கொள்கைய ராயே அடித்தொண்
டின் நெறிநின்றார்'

என அதனைப் பின்னர்க் குறித்தருளினர்.

## இவரது உள்ளநிலை

இதனுள், "செம்மைபுரி சிந்தையராய்" என்பது, மேற்காட்டிய திருத்தொண்டத் தொகைப் பகுதியில் உள்ள, 'செம்மையே' என்பதற்கு விளக்கந்தருவதாய் உள்ளது. அதனுள், 'செம்மையே' என்பதனை, 'போவார்' என்பதனோடு இயைப்பதா? 'அடியேன்' என்பதனோடு இயைப்பதா? என்னும் ஐயம் எழுகின்றது. இரண்டனோடும் இயைப்பினும் தவறில்லை. எனினும், 'போவார்' என்பதனோடு இயைத்தலே நாயனாரது திருக்குறிப்பு என்பது இதனால் விளங்குகின்றது.

'செம்மை' என்பது என்றும் ஒருபடித்தாய் நிற்கும் நிலை. புரிதல் இடையறாது நிகழ்த்தல். பிறைக்கண்ணிப் பெருந்தகைபால் சிறந்த பெருங்காதல் முன்பு உண்டாகப் பின்பு அது காரணமாக என்றும் அவனை ஒரு படித்தாக நினைக்கும் நிலையை இடையறாது நிகழ்த்துகின்ற மனத்தையுடையவராய் இவர் இருந்தார் என்பதனால், இந்நிலையே, பின்பு இவர், 'நாளைப் போவேன்; நாளைப் போவேன்' என இடையறாது நினைத்து அதனை முற்றுவித்துக் கொள்ளும் நிலையைத் தந்தது என்பது விளங்கும். ஆகவே, "செம்மையே திருநாளைப் போவான்" என வன்றொண்டர் அருளிச்செய்த சிறு தொடரில் இந்நாயனாரது வரலாறு முழுவதும் அடங்கிவிட்டது என்றே கூறலாம்.

இச் செம்மை என்பதே ஒரு நெறிய மனமாகும். இது நாயன்மார்கட்கே வாய்த்துள்ளது. குலப்பிறப்புக் காரணமாக, நினைத்தபொழுதே தில்லைக்குச் செல்ல மாட்டாது, 'நாளைப்போவேன்' என்று ஒவ்வொரு நாளும் நினைத்து நாட்களைக் கழித்து வந்த இவர், சின்னாட்களுக்குப் பின்னர், 'இஃது இப்பிறப்பிற் கூடுவதன்று' எனச் சோர்வடைந்து அந்நினைவைக் கைவிட்டாரில்லை. அவ்வாறு கைவிடுதலே நம்மனோர்க்கு இயல்பு. அவ்விழிதகைமை நாயன்மாரிடந் தோன்றுவதில்லை. ஆனதுபற்றியே அவர்களை உய்யும் நெறிகாட்டுவாராக ஆண்டவன் நமக்கு அளித்துள்ளான்.

## திருத்தொண்டுகள்

தம் பிறப்புக்கேற்ற வகையில் இவர் செய்த திருத்தொண்டுகள்: சிவபிரானது திருக்கோயில்கள்தோறும் சென்று, அங்கு முழக்கப்படும் பேரிகை முதலிய தோற்கருவிகளுக்குத் தோல் வார் முதலியன கொடுத்தல், அபிடேகத்திற்குக் கோரோசனை கொடுத்தல், கோயிலின் புறம்பே நின்றுகொண்டு அன்பு மிகுதியால் ஆடுதல் பாடுதல் முதலியனவாம்.

அக்காலத்துக் கோயில்களுட் பெரும்பாலன சிறிய அளவினவாய் வெளியில் நின்றேயும் மூலத்தானப் பெருமானைத் தரிசிக்கும் அமைப்புடையனவாய் இருந்தன. இன்றுங்கூட அவை அப்படித்தான் இருக்கின்றன என்று சொல்லலாம். அன்றியும் 'தீண்டாதார்' எனப்பட்டோர், கோயில்களில் கொடிமரம் உள்ள இடம் வரையில் செல்லலாம்' என்ற ஒரு விதியும் அக்காலத்தில் இருந்தது; அது பின்னே பின்னே விளங்காது மறைந்துவிட்டது. சில கோயில்களில் இருந்தும் வந்தது. கொடிமரத்துக்கு அணுக்கமான இடத்தையே சேக்கிழார், 'திருவாயிற்புறம்' எனக் குறித்தார் என்னலாம். மேலும் கொடியை ஏற்றிப் பறக்கவிட வேண்டிய இடம் வாயிலின் வெளிப்பக்கமேயன்றி உட்பக்கம் அன்றே! அதனால், பல நலங்களைக் கருதிச் சில கோயில்களில் கொடிக்கம்பத்தைச் சூழவும் சில மதில்களும் கோபுரவாயில்களும் அமைக்கப்பட்டிருப்பினும், 'கோயில்' என்பது கொடிக்கம்பத்திற்கு உட்பட்ட பகுதியே என்பது தெரிகின்றது.

இம்முறையில் சிவாலய தரிசனமும், சிவத்தொண்டும் செய்து வந்த இவர், திருப்புன்கூருக்குச் செல்வதில் மிகவும் விருப்பமுடையவரானார். அதற்குக் காரணம் அங்குள்ள பெருமானுக்குச் 'சிவலோக நாதன்' என்னும் பெயர் சொல்லப்படுவதே எனத் தெரிகின்றது.

## திருப்புன்கூர்த் தரிசனம்

சேக்கிழார், "திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிகநினைந்து" என அப்பெயரை எடுத்தோதுகின்றார். அத்தலத்திற் செல்லினும், அப்பெருமானைத் தரிசிப்பினும், சிவலோகத்திற் சென்றதும், அங்கே சிவபிரானைத் தரிசித்ததும் ஆகும் என நாயனாரது உள்ளத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். அதனால், அவ்வாறே அங்குச் சென்றார். பேரவாவோடு சென்ற அவருக்கு அங்கு ஒரு தடை ஏற்பட்டது.

திருப்புன்கூர்த் திருக்கோயிலில் உள்ள இடபதேவர் திருவுருவம் மிகப் பெரிய திரு வுருவம். அதனால் கொடிமரத்துக்கு இப்பால் நின்று எட்டியும் வலம் இடம் ஒதுங்கியும் உள்ளிருக்கும் மூர்த்தியைக் காணமுடிய வில்லை. வழக்கம்போல அவர் வெளியே நின்றுகொண்டு இறைவன் புகழ்ப் பாடல் களைப் பாடினார்; ஆடினார். என்ன செய்யி னும் இறைவனை நேரே கண்டு கும்பிடவேண் டும் என்னும் அவா நிரம்பிற்றில்லை. அதனால், அவர் அவ் விடத்தைவிட்டு நீங்கமாட்டாதவ ராயினார்.

இவரது ஆர்வத்தினையும், ஒருங்கிய நினைவையுங் கண்டு இறைவன், இடப தேவரை அவர் இருக்கும் இடத்தைவிட்டுச் சிறிது விலகியிருக்கச்செய்து தனது திரு மேனித் திருக்காட்சியை அளித்தருளினான். நாயனார் கண்டுகளித்துப் பெருமகிழ் வெய் தினார்.

இனி,

"சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்"

எனச் சேக்கிழார் அருளியதில் 'நேரே' என் னும் சொற் குறிப்புப்பற்றி வேறொன்றுங் கூறலாம். 'மற்றைய தலங்களில் இறைவனை எட்டியும் ஒதுங்கியும் கண்ட அளவில் அமைந்தார் நாயனார்; இத்தலத்தில் சிவலோக நாதனை அந்த அளவில் கண்டு அவர் அமைதி பெறாது, முழுவடிவத்தினையும் ஒருங்கே நேரே கண்டு கும்பிடவேண்டும் என விரும் பினார்: அதனால், இவ்வற்புதச் செயலை இறை வன் செய்ய வேண்டுவதாயிற்று' என்பதே அது. இதனால், நாயன்மார் தம் பெருமை இனிது விளங்குகின்றதன்றோ?

இவ்வாறு தம் கருத்து நிரம்பப்பெற்ற நாயனார், இத்தலத்தில் சிறப்பாக ஒரு திருப் பணியைச் செய்தார். சிவலோகநாதன் தம் பொருட்டுச் செய்த நினைத்தற்கரிய அற்புதச் செயலைக் கண்ட நாயனார், இவ்வுலகத்தையே மறந்துவிட்டார்; ஏன்? தம்மையே மறந்து விட்டார். இதனைச் சேக்கிழார்,

"சிவலோக முடையவர்தம் திருவாயில் முன்னின்று
பவலோகங் கடப்பவர்தம் பணிவிட்டுப்
பணிந்தெழுந்து"

என விளக்குகின்றார். பவலோகம் - பிறவி யுட் பட்ட உலகங்கள். அவற்றை 'அருள் நிலையாற் கடந்தவர் நாயனார். அவர், தம் பணிவிட்டமை தம் செயலற்று நின்றமை யாகும்.

## திருக்குளம் அமைத்தல்

இங்ஙனம் பணிந்தெழுந்து ஆராக் காத லுடன் மீள்கின்ற அவர், அத்திருக்கோயி லுக்கு அண்மையில் பள்ளமாய்க் கிடந்த ஓர் இடத்தைக் கண்டு, அதனை அத்திருக்கோயி லுக்குரிய திருக்குளமாகச் செய்ய விரும்பி அவ்வாறே முயன்று செய்தமைத்தார். இஃது அவர் ஒருவராலே முடியக்கூடிய தன்று. நாயனாரது பத்திச் சிறப்பினால் அவருக்கு நாட்டில் நன்மதிப்பு இருத்தல் ஒருதலை. சிறப்பாக அவர் இனத்தவர்க்கு அவரிடம் அன்பும் மதிப்பும் மிக்கிருக்கும். அதனால், அவரது கருத்தை முற்றுவிக்கப் பொதுவாக நாட்டில் உள்ளவர்களும் சிறப்பாக அவர் இனத்து மக்களும் அவருக்குத் துணைபுரிந் திருத்தல் கூடும். இன்றியமையாத சிறந்த கருத்துக்களைக் குறிப்பித்துக்கொண்டு போதலேயன்றி, இதுபோன்ற சிறிய பொருள்களை எடுத்துக்கொண்டு விளக்கிச் செல்லுதல் சேக்கிழாரிடம் இல்லை. அதனா லேயே நந்தனாரது இனத்து மக்கள் அவரிடம் வெறுப்பும் அச்சமுங் கொண்டிருந்ததாகப் பிற்காலத்து நாடகநூலார் ஒருவர் படைத் துக்கொண்டு கூறியதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை.

நாயனார் தமது ஆர்வத்தால் மேற் கொண்ட திருக்குளத் திருப்பணியை இறை வனது திருவருள் முன்னின்று முற்றுவித்தது என்பதனை,

"வடங்கொண்ட பொன்னிதழி மணிமுடியார்
திருவருளால்
தடங்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின்"

என்று அருளிச்செய்தார் சேக்கிழார். இதனை யும், இறைவன் ஆணையால் விநாயகர் தம் பூதகணங்களோடு வந்து முற்றுவித்ததாக வளர்த்திக் காட்டுகின்றார் அந் நாடக நூலா சிரியர்.

## தில்லை செல்ல நினைதல்

இத்திருப்பணியை முடித்துச் சென்ற நந்தனார், முன்னை முறையிலேயே சிவ தலங்கள் பலவற்றிற்குச் சென்று வணங்கு தலும், முன் கொடுத்து வந்தனவாகக் கூறிய பொருள்களை அத் திருக்கோயில்களுக்குக் கொடுத்தலும் செய்துவந்தார். (தொடரும்)

# அறநிலையச் சட்டம்

# MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM, Translation Dept.

—:O:—

(முன் தொடர்ச்சி)

(1) தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவர் அல்லது மானேஜிங், அல்லது நிர்வாக தர்மகர்த்தா விஷயத்தில், அவருடைய வாரிசுதாரருக்குப் பொறுப்பைக் கொடுக்க மறுப்பது, அல்லது தாமதித்து அல்லது கொடுக்காமலிருப்பது ;

(3). (2) உட்பிரிவின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கும் போது, சந்தர்ப்பத்துக்கேற்றபடி பொருத்தமான அதிகாரி சம்பந்தப்பட்ட தர்மகர்த்தாவின்பேரில் குற்றச்சாட்டுகள் தயாரித்து, அக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லவும், அவருக்கு விரோதமாகக் காட்டப்பட்ட சாட்சியத்தைப் பரிசீலனை செய்யவும், அவருக்கு அனுகூலமாகச் சாட்சியம் கொண்டு வரவும் அவருக்கு ஓர் அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்; எடுத்து விடுவதற்கான அல்லது தள்ளிவிடுவதற்கான அல்லது சிறிது காலம் நீக்கிவைப்பதற்கான உத்தரவில், ஷை தர்மகர்த்தாவுக்கு விரோதமாகத் தயாரிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளும் அவருடைய சமாதானமும் ஒவ்வொரு குற்றச்சாட்டின் பேரிலும் செய்யப்பட்ட தீர்ப்பும் அதற்குண்டான காரணங்களும் கண்டிருக்கவேண்டும்.

(4) ஷை தர்மகர்த்தாவுக்கு விரோதமாகத் தயாரிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பைசல் செய்யப்படுகிறவரையில், பொருத்தமான அதிகாரி கடமைகளை நிறைவேற்றுவதற்கும் மேற்படி தர்மகர்த்தாவை சிறிது காலம் நீக்கிவைத்து, அந்தத் தர்மகர்த்தாவின் அலுவல்களைச் செய்வதற்கும் தகுதியான ஒருவரை நியமிக்கலாம்.

(5) (2) உட்பிரிவின்படிப் பிறப்பித்த ஓர் ஆணையினால் துன்பமடைந்த ஒரு தர்மகர்த்தா சிறிது காலம்நீக்கி வைப்பதற்கான, அகற்றுவதற்கான அல்லது தள்ளிவிடுவதற்கான மேற்படி ஆணை அவரால் வரப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அதற்கு எதிராக

(i) ஷை ஆணை, ஆணையரால் பிறப்பிக்கப்பட்டிருந்தால் அரசாங்கத்தாருக்கும்,

(ii) ஷை ஆணை, துணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்டிருந்தால் ஆணையருக்கும்,

(iii) ஷை ஆணை, பிராந்தியக்குழுவால் பிறப்பிக்கப்பட்டிருந்தால், துணை ஆணையருக்கும் அப்பீல் செய்துகொள்ளலாம்.

(6) 5-வது உட்பிரிவின்படி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையால் துன்பமடைந்த பரம்பரை தர்மகர்த்தர் ஒருவர் அத்தகைய உத்தரவு தம்மால் வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 90 தினங்களுக்குள், ஷை ஆணைக்கு எதிராகக் கோர்ட்டில் வழக்குத் தொடரலாம்,

**54. பரம்பரையான தர்மகர்த்தா உத்தியோகத்தில் உண்டாகும் காலி இடங்களைப் பூர்த்தி செய்வது**—(1) யாதொரு அறநிலையத்தின் பரம்பரையான தர்மகர்த்தா உத்தியோகத்தில் நிலையான காலி இடம் ஒன்று ஏற்பட்டால், வாரிசு பாத்தியதை அடைவதற்குரியவர்களின் வரிசையில் அடுத்தபடியிலுள்ளவர் ஷை உத்தியோகத்திற்கு வரப் பாத்தியதை யுள்ளவராவார்.

(2) 53-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி பரம்பரையான தர்மகர்த்தா சிறிது காலம் நீக்கி வைக்கப்பட்டது காரணமாக அந்த உத்தியோகத்தில் தற்காலிகமான

ஒரு காலி இடம் உண்டானால், வாரிசு பாத்தியதையுடையவர்களின் வரிசையில் அடுத்த படியிலுள்ளவர் அந்த உத்தியோகத்துக்கு வரப் பாத்தியதையுள்ளவராய் இருப்பதுமல்லாமல் ஷை தர்மகர்த்தாவுடைய தகுதியின்மை நீங்குகிறவரையில் அவருடைய அலுவல்களைச் செய்துவரவும் வேண்டும்.

*(3)* அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகத்திலே நிலையான அல்லது தற்காலிகமான ஒரு காலி இடம் ஏற்பட்டு, அந்த உத்தியோகத்துக்கு அடுத்தபடிவர யாருக்கு உரிமை இருக்கிறதென்பதைப்பற்றி விவாதம் ஒன்று கிளம்பி யிருந்தாலும், அல்லது

அந்தக் காலி இடத்தை உடனே பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும், அல்லது யாதொரு பரம்பரையான தர்மகர்த்தா மைனராயிருந்து அப்படிப்பட்ட தர்மகர்த்தாவாகப் பிரவர்த்திக்கத் தகுதியுள்ளவரும் விருப்பமுள்ளவருமான காப்பாளர் எவரும் இராவிட்டாலும், காப்பளராகப் பிரவர்த்திக்கப் பாத்தியதையுள்ள நபர் இன்னாரென்பது விஷயமாய் விவாதமொன்று கிளம்பியிருந்தாலும், அல்லது

பரம்பரையான தர்மகர்த்தா ஒருவர் சித்த சுவாதீனமில்லாத காரணமாகவோ இதர மனக்கோளாறு அல்லது தேகக் கோளாறு காரணமாகவோ அசக்ததை காரணமாகவோ தர்மகர்த்தாவின் அலுவல்களைச் செய்யத் தகுதியற்றவராயிருந்தாலும்,

துணை ஆணையர் ஷை பரம்பரையான தர்மகர்த்தாவின் யோக்கியதைக் குறைவு நீங்குகிற வரையிலாவது ஷை உத்தியோகத்துக்கு மற்றொரு பரம்பரையான தர்மகர்த்தா வருகிற வரையிலாவது அதற்குக் குறைவாய் துணை ஆணையர் கட்டளையிடக்கூடிய கால அளவுக்காவது ஷை நிலையத்தின் தர்மகர்த்தாவுடைய அலுவல்களைச் செய்வதற்குத் தக்க ஒருவரை நியமிக்கலாம்.

விளக்கம்—இந்த உட்பிரிவின்படி யாதொரு நியமனம் செய்கையில் ஷை தர்மகர்த்தாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் வாரிசு உள்ளவர்கள் யாரேனுமிருந்தால் அவர்களுடைய உரிமைகளைத் துணை ஆணையர் கிரமப்படி கவனிக்கவேண்டும்.

*(4)* *(3)* உட்பிரிவின்படி துணை ஆணையர் பிறப்பித்த ஓர் ஆணையினால் துன்பமடைந்த யாதொரு நபர், அந்த உத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அந்த உத்தரவின்பேரில் ஆணையருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

*(5)* *1902*-ம் ஆண்டு மதராஸ் கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆக்ட் என்னும் சட்டத்தில் (சென்னை *1902*-ம் ஆண்டு *1*-வது சட்டம்) கண்டதெதுவும் இப் பிரிவிலுள்ளதெதனாலும் பாதிக்கப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

*55.* **அறநிலையங்களில் உத்தியோகம் வகிப்பவர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிப்பது.**—*(1)* யாதொரு அறநிலையத்தில் உத்தியோகம் வகிப்பவர்களிடையே அல்லது ஊழியக்காரர்களிடையே நிலையாகவோ தற்காலிகமாகவோ ஏற்படும் காலி இடங்களை ஷை உத்தியோகம் அல்லது ஊழியம் பரம்பரையானதாயிராத விஷயங்களில், பிரஸ்தாப தர்மகர்த்தா பூர்த்தி செய்ய வேண்டும்.

*(2)* ஷை உத்தியோகம் அல்லது ஊழியம் பரம்பரையானதாய் இருந்தால், வாரிசு பாத்தியதையுள்ளவர்களின் வரிசையில் அடுத்துள்ள நபர் அந்த உத்தியோகத்துக்கு வரப் பாத்தியதையுள்ளவராவார்.

*(3)* ஆயினும் வாரிசு பாத்தியதையுரிமை விஷயமாய் ஒரு விவாதம் ஏற்பட்டிருந்தாலும், அல்லது

ஷை காலி இடத்தை உடனே பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும், அல்லது

வாரிசு பாத்தியதையுடைய நபர் ஒரு மைனராயிருந்து, காப்பாளராகப் பிரவர்த்திப்பதற்குத் தகுதியும் விருப்பமும் உள்ள எவரும் அவருக்கு இராவிட்டாலும், காப்பாளராகப் பிரவர்த்திக்கப் பாத்தியதையுள்ளவர் இன்னார் என்பது பற்றி விவாதம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அல்லது

பரம்பரையாய் உத்தியோகம் வகிப்பவர் அல்லது பரம்பரையான ஊழியக்காரர் அசக்ததை, நோய், அல்லது மற்ற காரணங்களால் ஷை பதவியின் அலுவல்களை நிறைவேற்றவோ சேவைகளைச் செய்யவோ முடியாததால் *56*-வது பிரிவைச் சேர்ந்த *(1)* உட்

பிரிவின்படித் தமது உத்தியோகத்திலிருந்து சிறிது காலம் நீக்கி வைக்கப்பட்டாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷெ உத்தியோகம் வகிப்பவரின் அல்லது ஊழியக்காரரின் தகுதியின்மை நீங்குகிறவரையிலாவது ஷெ உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு வேறொரு நபர் வருகிறவரையிலாவது, ஷெ உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்யவோ ஷெ சேவை புரியவோ தக்க ஒரு நபரைத் தர்மகர்த்தா நியமிக்கலாம்.

**விளக்கம்:** இந்த உட்பிரிவின்படி யாதொரு நியமனம் செய்கையில் பிரஸ்தாப ஷெ குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் வாரிசு பாத்தியதையுள்ளவர்கள் எவர்களேனுமிருந்தால் அவர்களுடைய உரிமைகளைத் தர்மகர்த்தா கிரமப்படி கவனிக்கவேண்டும்.

(4) (3). உட்பிரிவின்படி ஷெ தர்மகர்த்தா பிறப்பித்த ஓர் உத்தரவினால் துன்பமடைந்த யாதொரு நபர் அவ்வுத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அந்த உத்தரவின்பேரில் துணை ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

56. **அறநிலையங்களில் உத்தியோகம் வகிப்பவர்களையும் ஊழியக்காரர்களையும் தண்டிப்பது:** (1) யாதொரு அறநிலையத்தைச் சேர்ந்த அல்லது அதிலிருந்து யாதொரு ஆதாயம் அல்லது மேலாதாயம் பெற்றுவரும் சகல உத்தியோகம் வகிப்பவர்களும் ஊழியக்காரர்களும், பிரஸ்தாப உத்தியோகம் அல்லது ஊழியம் பரம்பரையானதாயிருந்தாலும் சரி, இராவிட்டாலுஞ்சரி, தர்மகர்த்தாவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கவேண்டும்; மேலும், தர்மகர்த்தாவினவர் நம்பிக்கைத் துரோகம், திறமையின்மை, உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாமை, கடமையை அசட்டை செய்தல், துர்நடத்தை அல்லது இதர போதுமான காரணத்துக்காக, நடைமுறை எதுவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதை அனுசரித்து பிறகு அவர்களில் யாருக்காகிலும் அபராதத் தண்டனை விதிக்கலாம், வேலையிலிருந்து சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கலாம், வேலையிலிருந்து நீக்கிவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

(2) (1) உட்பிரின்படி ஒரு தர்மகர்த்தாவால் தண்டிக்கப்பட்ட யாதொரு உத்தியோகம் வகிப்பவராவது ஊழியக்காரராவது ஷெ உத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அந்த உத்தரவின்பேரில் துணை ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(3) பரம்பரையான உத்தியோகம் வகிப்பவர் அல்லது ஊழியக்காரரொருவர், (2) உட்பிரிவின்படி துணை ஆணையர் பிறப்பித்த உத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்வுத்தரவின்பேரில் ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

57. **சேவைகளுக்கான கட்டணங்களை நிச்சயிக்கவும் அவைகளின் பங்கீட்டை நிர்ணயிக்கவும் அதிகாரம்:** இச்சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்படுகிற யாதொரு ஏற்பாட்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு அறநிலையத்தின் தர்மகர்த்தா, பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாக ஆணையரால் கட்டளையிடப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, ஷெ அறநிலையத்தில் யாதொரு சேவைக்கிரியை அல்லது ஆசார அனுட்டானம் செய்வதற்கான கட்டணங்களை நிச்சயிக்கவும், ஷெ நிலையத்தின் அர்ச்சகர்களுக்காவது உத்தியோகம் வகிப்பவர்களுக்காவது ஊழியக்காரர்களுக்காவது அக்கட்டணங்களில் எந்தப் பாகத்தையேனும் கொடுக்கவேண்டியிருந்தால் அந்தப் பாகத்தை நிர்ணயிக்கவும் அதிகாரமுடையவராவார்.

58. **பரிமாணச் செலவு திட்டங்களை நிச்சயிப்பது:** (1) யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தா அந்த நிலையத்தின் திட்டம் அல்லது செலவு வீத நிர்ணயத்தையும், அந்த நிலையத்துக்குச் சம்பந்தப்பட்ட வெவ்வேறு காரியங்களுக்காகப் பங்கிடு செய்யப்படவேண்டிய தொகைகளையும் அல்லது ஷெ நிலையத்தின் வருவாய் அல்லது இதர சொத்தாவது ஷெ காரியங்களுக்காக எந்தச் சங்கியாபரிமாணங்களின்படி உபயோகிக்கப்படலாமோ அந்தச் சங்கியாபரிமாணங்களையும் நிச்சயிப்பதற்காக பிரேரணைகள், ஷெ நிலையம் 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிராவிட்டால், பிராந்தியக் குழுவினருக்கும், ஷெ நிலையம் அவ்வாறு சேர்க்கப்பட்டிருந்தால்

ஆணையருக்கும், இச் சட்டத்தின் தொடக்கத்தின் தேதியிலிருந்து அல்லது, மேற்சொன்ன பட்டியலில் ஷை நிலையத்தைச் சேர்ந்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது, சந்தர்ப்பத்துக்கேற்ப பிராந்திய குழுவினரால் அல்லது ஆணையரால் அனுமதிக்கப்படக்கூடிய மேற்கண்ட கால அளவுக்குள் அனுப்பவேண்டும். அப்பிரேரணைகளை, ஷை நிலையம் பிராந்தியக் குழு ஒன்றின் விசாரணையதிகாரத்துக்குட்பட்டிருந்தால் அக்குழுவுக்கும் மற்ற விஷயங்களில் ஆணையருக்கும் அனுப்பலாம்.

ஆனால், எந்த நிலையம் விஷயமாக பிரேரணைகள், சந்தர்ப்பத்துக்கேற்ப பிராந்தியக் குழுவுக்கோ ஆணையருக்கோ இச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னால் அனுப்பப்பட்டிருக்கின்றனவோ அந்த நிலையத்துக்கு இவ்வுட்பிரிவு பயன்பட்மாட்டாது.

(2) ஷை தர்மகர்த்தா அந்தப் பிரேரணைகளை ஷை நிலையத்தின் வளவிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி, பிராந்தியக் குழு அல்லது ஆணையர் கட்டளையிடக்கூடிய வேறு மாதிரியாகவும் பிரசித்தம் செய்ய வேண்டும்; அந்தப்படி பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் பற்றுள்ள யாதொரு நபர் தமது ஆட்சேபணைகளையாவது அபிப்பிராயக் குறிப்புக்களையாவது ஷை பிராந்தியக் குழு அல்லது ஆணையருக்கு அனுப்பலாமென்று கண்டு நோட்டீஸையும் ஷை பிரேரணைகளுடன் கூடப் பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) ஷை கால அளவு கழிந்துபோன பிறகு பிராந்தியக் குழுவாவது ஆணையராவது தம்மிடம் வந்திருக்கும் எவையேனும் ஆட்சேபணைகளையும் அபிப்பிராயக் குறிப்புகளையும் பற்றி யோசித்தபிறகு ஷை நிலையத்தின் திட்டவட்டமான உபயோகத்தையும் அதன் திரவிய நிலைமையையும் அனுசரித்து அப்பிரேரணைகளின்மேல், அக் குழுவுக்கு அல்லது ஆணையருக்குத் தமக்குத் தகுதியாய்த் தோன்றுகிற உத்தரவு பிறப்பித்து அவ்வுத்தரவின் நகல் ஒன்றைப் ஷை தர்மகர்த்தாவுக்கு அனுப்பவேண்டும்.

பிராந்தியக் குழுவின் அல்லது ஆணையரின் உத்தரவானது நிர்ணயிக்கப்பட்டவிதமாகப் பிரசுரிக்கப்படவேண்டும்.

(4) (3) உட்பிரிவின்படிப் பிராந்தியக் குழுவால் பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவின் பேரில் ஷை தர்மகர்த்தாவாவது, பற்றுள்ள யாதொரு நபராவது, ஷை உத்தரவு தர்மகர்த்தாவுக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் துணை ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். தர்மகர்த்தாவோ, நபரோ, துணை ஆணையரின் உத்தரவால் துன்பமடைந்திருந்தால் ஷை உத்தரவு வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள், ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(5) தர்மகர்த்தா திட்டம் அல்லது செலவு நிர்ணய வீதத்தை மூன்று வருஷங்களுக்கு ஒருமுறை சரிபார்த்து சந்தர்ப்பத்துக்கேற்ப, பிராந்தியக் குழுவினருக்கும், ஆணையருக்கும் ஷை திட்டத்தை அல்லது செலவு நிர்ணய வீதத்தை மாற்றியமைப்பதற்கான பிரேரணைகளை அனுப்பவேண்டும்; (2), (3) (4) உட்பிரிவுகளின் ஷரத்துக்கள் திட்டத்தை அல்லது செலவு நிர்ணய வீதத்தை மாற்றியமைக்கவும் பயன்படும்.

ஆனால், பிராந்தியக் குழு அல்லது ஆணையர், எந்த நேரத்திலும், அதனுடைய அல்லது அவருடைய சொந்தப் பிரேரணையில், எழுதிவைக்கப்படவேண்டிய காரணங்களை முன்னிட்டு தர்மகர்த்தாவை, ஷை திட்டத்தை அல்லது செலவு நிர்ணய வீதத்தை மாற்றியமைக்கும்படிக் கட்டளையிடலாம்; ஷை மாற்றியமைக்கும் நடைமுறையானது, இந்தப் பிரிவில் சொல்லப்பட்டபடி இருக்க வேண்டும்.

## அத்தியாயம் IV

### மடங்கள்

59. மடத்தின் அல்லது அதைச் சேர்ந்த குறிப்பிட்ட கட்டளையின் தர்மகர்த்தாவை எடுத்துவிடுவதற்கான வியாஜ்ஜியம் :—(1) ஆணையராவது ஆணையருடைய சம்மதத்தை எழுத்துமூலமாகப் பெற்றிருக்கிற பற்றுள்ள எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களாவது, அடியிற்கண்ட காரணங்களில் யாதொன்றுக்காகவேனும் பலவற்றிற்காகவேனும் யாதொரு மடத்தின் அல்லது யாதொரு மடத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு கட்டளையின் தர்மகர்த்தாவை எடுத்துவிடுவதற்காக ஒரு டிக்ரி பெறும்பொருட்டு

நீதிமன்றத்திலே வியாஜ்ஜியம் தொடரலாம்; அக் காரணங்களாவன :—

(a) அந்தத் தர்மகர்த்தா சித்த சுவாதீன மற்றவராயிருக்கிருரென்பது ;

(b) அவர் ஒரு தர்மகர்த்தாவாயிருக்கத் தகுதியற்றவராயிருக்கக்கூடிய விதமாக தேக சம்பந்தமான அல்லது மூளை சம்பந்தமான ஒரு கோளாறினல் அல்லது வியாதியினல் அவர் பீடிக்கப்பட்டிருக்கிருரென்பது ;

(c) இந்து மதத்தையாவது ஷெ மடத்தின் கொள்கைகளையாவது அவர் தழுவாமற் போய்விட்டாரென்பது ;

(d) அவர் யாதொரு குற்றம் செய்திருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டு அக் குற்றம் ஒழுக்கக்கேடான நடத்தையைக் காட்டுகிறதென்பது ;

(e) ஷெ அறநிலையத்தின் சொத்துக்களில் யாதொன்று விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட யாதொரு ட்ரஸ்டை அவர் மீறி இருக்கிருரென்பது ;

(f) நிலையத்தின் நிதிகளை அல்லது சொத்துக்களை வீணுக்கினுர் அல்லது ஷெ நிதிகளை அல்லது சொத்துக்களை ஸ்தல ஸ்தாபனத்துக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்தினுர் என்பது ;

(g) நிலையத்தின் வருவாயை அல்லது அதன் நிதிகளை அல்லது சொத்துக்களை "பாதகாணிக்கையாக" மாற்ற சூழ்ச்சிகளை மேற்கொண்டாரென்பது ;

(h) ஒழுக்கக்கேடான வாழ்க்கையை நடத்தினுர் அல்லது மடத்தின் மற்றப்படி தலைமைப் பதவியின் பெருமைக்கு இழுக்குக் கொண்டுவரும்படியாக வாழ்க்கை நடத்துகிருர் என்பது ;

(i) இச் சட்டத்தின்படியாவது வேறு யாதொரு சட்டத்தின்படியாவது அவருக்கேற்பட்டுள்ள கடமைகளையேனும் அல்லது நிறைவேற்றவேண்டிய அலுவல்களையேனும் செய்வதில் அவர் பிடிவாதமாகவும் வேண்டுமென்றும் தவறிக்கொண்டு வருகிருரென்பது.

(2) ஆணையர் (1) உட்பிரிவின்படி எழுத்து மூலமாகத் தம்முடைய சம்மதத்தைக் கொடுக்க மறுத்தால், துன்பமடைந்த கட்சிக்காரர் தாம் உத்தரவு வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம் ; அவர்கள் அவசியமென்று தாங்கள் கருதக்கூடிய விசாரணை செய்த பிறகு, ஆணையரின் உத்தரவை ஊர்ஜிதப் படுத்தலாம் அல்லது எழுத்து மூலமாகத் தம்முடைய, சம்மதத்தைக் கொடுக்கும்படி ஆணையருக்கு உத்தரவிடலாம்.

60. **காலி இடங்கள் ஏற்படும்போது செய்யவேண்டிய ஏற்பாடுகள் :**—(1) யாதொரு மடத்தின் அல்லது யாதொரு மடத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட இனுமின் தர்மகர்த்தா உத்தியோகத்தில் ஒரு காலி இடம் ஏற்பட்டிருந்து, அவ் உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வருவதுபற்றி விவாதம் ஒன்று ஏற்பட்டிருந்தாலும், அல்லது

அந்தக் காலி இடத்தை உடனே பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும், அல்லது

ஷெ தர்மகர்த்தா ஒரு மைனராயிருந்து, அவருக்குக் காப்பாளராகப் பிரவர்த்திக்கத் தக்கவராகவும் விருப்பமுள்ளவராகவுமுள்ள காப்பாளர் எவரும் இராவிட்டாலும், காப்பாளராகப் பிரவர்த்திக்கப் பாத்தியதை யுள்ள நபர் இன்னுரென்பது விஷயமாய் விவாதமொன்று ஏற்பட்டிருந்தாலும், அல்லது

சித்த சுவாதீனமற்றிருப்பதனுலோ மூளை சம்பந்தமான அல்லது தேக சம்பந்தமான இதர கோளாறு அல்லது வியாதியினுலோ ஷெ தர்மகர்த்தா தர்மகர்த்தாவுக்குரிய அலுவல்களைச் செய்ய முடியாதவராயிருந்தாலும்,

உதவி ஆணையர், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஷெ மடத்தைச் சேர்ந்த கட்டளைகளையாவது மேலேகண்ட குறிப்பிட்ட கட்டளையாவது கொஞ்ச காலத்துக்குப் பத்திரமாய் வைத்திருப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும், தமக்குத் தகுதியென்று தோன்றுகிற ஏற்பாடுகளைச் செய்து உத்தரவு பிறப்பிக்கலாம் ; மேலும் அவர், அது சங்கதியை உடனே ஆணையருக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும்.

(2) ஷெ ரிப்போர்ட் வந்துசேர்ந்ததன் பேரில் ஆணையர் அவசியமென்று தமக்குத்

தோன்றும் விசாரணை செய்த பிறகு சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஷை மடத்தினுடையவும் அதன் கட்டளைகளினுடையவும் அல்லது மேலேகண்ட குறிப்பிட்ட கட்டளையினுடையவுமான பரிபாலனத்துக்காக ஓர் ஏற்பாடு அவசியமென்று சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர் சந்தர்ப்பந்துக்கேற்றபடி, ஷை தர்மகர்த்தாவின் தகுதியின்மை நீங்குகிற வரையிலாவது ஷை உத்தியோகத்துக்கு மற்றொரு தர்மகர்த்தா வருகிற வரையிலாவது தமக்குத் தகுதியாகத் தோன்றும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

(3) அத்தகைய ஏற்பாடுகளைச் செய்கையில் ஷை மடத்தின் சீடர்கள் எவர்களேனுமிருந்தால், அவர்களுடைய உரிமைகளை ஆணையர் கிரமப்படி கவனிக்கவேண்டும்.

(4) 1902-ம் ஆண்டு மதராஸ் கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆக்ட் என்னும் சட்டத்தில் (சென்னை 1902-ம் ஆண்டு 1-வது சட்டம்) கண்டதெதுவும் இப்பிரிவில் கண்டதெதனுலும் பாதிக்கப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

*61.* **பரிமாணச் செலவுத் திட்டங்களை நிச்சயிப்பது** :-(1) ஒவ்வொரு மடத்தினுடைய அல்லது யாதொரு மடத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒவ்வொரு கட்டளையினுடைய தர்மகர்த்தா மேற்படி நிலயத்தின் திட்டம் அல்லது செலவு வீத நிர்ணயத்தையும், அந்த நிலயத்துக்குச் சம்பந்தப்பட்ட வெவ்வேறு காரியங்களுக்காகப் பங்கிடு செய்யப்பட வேண்டிய தொகைகளையும் அல்லது மேற்படி நிலயத்தின் வரும்படி அல்லது இதர சொத்தானது மேற்படி காரியங்களுக்காக எந்தச் சங்கியாபரிமாணங்களின்படி உபயோகிக்கப்படலாமோ அந்தச் சங்கியாபரிமாணங்களையும் நிச்சயிப்பதற்காக அப்போதைக்கப்போது ஆணையருக்குப் பிரேரணைகள் அனுப்பலாம்.

(2) மேற்படி ஆணையர் அந்தப் பிரேரணைகளை மேற்படி மடத்தின் வளவிலும் ஆணையர் கட்டளையிடக்கூடிய வேறு மாதிரியாகவும் பிரசித்தம் செய்யவேண்டும்; அந்தப்படிப் பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் பற்றுள்ள யாதொரு நபர் ஆணையருக்கு ஆலோசனைகள் அனுப்பலாமென்று கண்டு ஒரு நோட்டீஸையும் மேற்படி பிரேரணைகளுடன்கூடப் பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) மேற்படி பிரேரணைகளையும் பற்றுள்ள நபர்கள் சொல்லுகிற எவையேனும் அபிப்பிராயக் குறிப்புக்களையும் பரிசீலனை செய்து பார்த்ததன்பேரில், மேற்படி செலவு திட்டமோ அந்தச் செலவுத் திட்டத்திலுள்ள ஓர் இனமோ அந்த நிலயத்தின் நிலயான மாமூலுக்கு மாறுபட்டிருக்கிறதென்ருவது அதனுடைய திரவிய நிலைமையை முன்னிட்டுப் பார்க்கும்போது அதிகமானதென்ருவது ஆணையர் அபிப்பிராயப்பட்டால், ஆணையர் தர்மகர்த்தரின் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்கலாம்; அதைப்பற்றி ஆலோசனை செய்த பிறகு மேற்படி செலவுத் திட்டத்திலாவது அச்செலவுத் திட்டத்திலுள்ள ஓர் இனத்திலாவது யாதொரு மாறுதல் செய்ய வேண்டுமென ஆணையர் அபிப்பிராயப்பட்டால், அவர் அவ் விஷயத்தை அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்க வேண்டும்; அதன் பேரில் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்; அவ்வுத்தரவுகள் முடிவானதாகும்.

*62.* **பாத காணிக்கையைச் செலவிட அதிகாரம்** :—(1) ஒரு மடத்தின் தர்மகர்த்தர், பாத காணிக்கை எதையாகிலும், அதாவது அம் மடத்தின் தலைவர் என்ற முறைமையில் தனிப்பட அவருக்கென்றே சொத்து அல்லது பணம் ரூபமாகக் கொடுக்கப்பட்ட தானம் முதலியவற்றின் வரவுகள்பற்றி கிரமமான கணக்குகள் வைத்து வரவேண்டும். மேலும் ஷை "பாதகாணிக்கையை" நிலயத்தின் வழக்கங்களையும் மாமூல்களையும் அனுசரித்து செலவிட பாத்தியதையுள்ளவராவார்.

(2) ஷை சொத்து அல்லது பணதானமானது, தர்மகர்த்தரால், அவருடைய பதவிக்காலத்தில், நிலயத்தின் வழக்கங்களையும் மாமூல்களையும் அனுசரித்துச் செலவிடப்படாவிட்டால், மடத்தின் நிதியில் ஒரு பகுதியாக்கப் படவேண்டும்.

## அத்தியாயம் V

### விசாரணைகள்

*63.* **சிலதகராறுகளையும் விஷயங்களையும் துணை ஆணையர் தீர்மானிக்க வேண்டுமென்பது**:-

"வழக்குத்" தொடருவது அல்ல. அப்பீல் செய்து கொள்வது விஷயமாய் இதில் பின்னால் கண்டிருக்கிற உரிமைகளுக்குட்பட்டு, அடியிற்கண்ட தகராறுகளையும் விஷயங்களையும் விசாரணை செய்து தீர்ப்பளிக்க டிெ துணை ஆணையருக்கு அதிகாரம் உண்டு:-

(a) யாதொரு நிலையம் அறநிலையமா என்பது ;

(b) ஒரு தர்மகர்த்தர் பரம்பரையான தர்மகர்த்தராக உத்தியோகம் வகிக்கிறாரா அல்லது வகித்தாரா என்பது ;

(c) யாதொரு சொத்து அல்லது பணம் மத சம்பந்தமான ஒரு கட்டளையாவென்பது;

(d) யாதொரு சொத்து அல்லது பணம் குறிப்பிட்ட ஒரு கட்டளையா வென்பது;

(e) ஆசாரத்தினலோ மற்றப்படியோ யாதொரு அறநிலையத்திலே யாதொரு மரியாதை, ஆதாயம் அல்லது மேலாதாயம் பெற யாதொரு நபருக்குப் பாத்தியதை இருக்கிறதாவென்பதும், வேறு யாதொரு விஷயம் சம்பந்தமாய் ஒரு மதஸ்தாபனத்தின் ஊர்ஜ்ஜிதமான வழக்கம் இன்னது என்பதும்;

(f) யாதொரு நிலையம் அல்லது கட்டளை முழுவதுமோ சிறிது மட்டிலோ மதத்தன்மை அல்லது லௌகிகத் தன்மை வாய்ந்ததாவென்பதும், யாதொரு சொத்து அல்லது பணம் முழுவதுமோ சிறிதுமட்டிலோ மத சம்பந்தமான அல்லது லௌகிகம் சம்பந்தமான உபயோகங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதாவென்பதும்; மேலும்,

(g) சிறிதுமட்டில் மதத்தன்மை வாய்ந்ததும் சிறிதுமட்டில் லௌகிகத் தன்மை வாய்ந்ததுமான ஒரு நிலையத்தின் ஆதரவுக்காக அல்லது அப்படிப்பட்ட ஒரு நிலையத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் செய்யப்படுவதற்காக அல்லது சிறிதுமட்டில் மதத் தன்மை வாய்ந்ததும் சிறிதுமட்டில் லௌகிகத் தன்மை வாய்ந்ததுமான ஒரு தருமம் செய்யப்படுவதற்காக யாதொரு சொத்து அல்லது பணம் சிறிதுமட்டில் மதசம்பந்தமான உபயோகங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டால் அப்படிப்பட்ட சொத்து அல்லது பணத்தில் என்ன வீதாசாரப்படியுள்ள பாகம் மதசம்பந்தமான உபயோகங்களுக்காக வகுத்துக் கொடுக்கப்பட வேண்டுமென்பது.

**64. திட்டம் என்னும் ஏற்பாடுகளை நிச்சயிக்க துணை ஆணையருக்குள்ள அதிகாரம்:—** (1) யாதொரு நிலையம் சரிவர பரிபாலிக்கப்படுவதன் நன்மைகளை உத்தேசித்து அந்த நிலையத்துக்காக ஏற்பாடு ஒன்றை நிச்சயிக்க வேண்டுமென்று நம்ப பிரஸ்தாப துணை ஆணையருக்கு நியாயமிருந்தால் அல்லது யாதொரு ஸ்தானம் சரிவர பரிபாலிக்கப்படுவதன் நன்மைகளை உத்தேசித்து அதற்காக ஓர் ஏற்பாடு நிச்சயிக்கப்படவேண்டுமென்று கண்டு பற்றுள்ள ஐந்து பேருக்குக் குறையாதவர்கள் எழுத்து மூலமாய் விண்ணப்பஞ் செய்து கொண்டால், மேற்படி துணை ஆணையர் மேற்படி தர்மகர்த்தரோடும் பற்றுள்ள நபர்களோடும், மேற்படி நிலையம் விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிற பிராந்தியக் குழு ஏதாகிலுமிருந்தால் அதனேடும் நிர்ணயிக்கப்பட்ட விதமாகக் கலந்தாலோசிக்க வேண்டும்; அப்படிக்கலந்து ஆலோசித்த பிறகு அடியிற்கண்டபடி செய்வது அவசியமென்றே உசிதமென்றே அவர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர் உத்தரவு மூலமாய், அந்த நிலையத்துக்காகப் பரிபாலன ஏற்பாடு ஒன்றை நிச்சயிக்க வேண்டும்.

**விளக்கம்**—இப்பிரிவின் காரியங்களுக்காக, "நிலையம்" என்பது ஒரு கோயில் அல்லது ஒரு கோயிலில் சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளை எனப் பொருள்படும்.

(2) (1) உட்பிரிவின்படி யாதொரு நிலையத்துக்காக நிச்சயிக்கப்பட்ட ஓர் ஏற்பாட்டில் அடியிற்கண்ட விஷயங்களுக்காக நிபந்தனை கண்டிருக்கலாம்:—

(a) பிரஸ்தாப காலத்திலுள்ள தர்மகர்த்தர் பரம்பரையாய் ஏற்பட்டிராதவராய் இருந்தாலும் சரி பரம்பரையாய் ஏற்பட்டிராதவராய் இருந்தாலும் சரி, அவரை எடுத்து விடுவது :—

ஆனல், பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு தர்மகர்த்தரை எடுத்து விடுவதற்காக மேற்படி ஏற்பாட்டில் நிபந்தனை கண்டிருந்தால், உரிமை வழியாய் உத்தியோகத்துக்கு வருபவர்களின் வரிசையில் அடுத்தபடியாய் இருப்பவரும் தகுதி பெற்றுள்ளவருமாகியவர் தர்மகர்த்தராக நியமிக்கப்படுவதற்குக் கூட அந்த ஏற்பாட்டில் நிபந்தனை ஏற்படுத்தவேண்டும்;

(b) பிரஸ்தாப காலத்திலுள்ள யாதொரு தர்மகர்த்தர் அல்லது தர்மகர்த்தர்களுக்குப் பதிலாக ஒரு புதிய தர்மகர்த்தர் அல்லது தர்மகர்த்தர்களை நியமிப்பது;

(c) மேற்படி தர்மகர்த்தர் அல்லது தர்மகர்த்தர்களின் அதிகாரங்களையும் கடமைகளையும் வரையறுப்பது;

ஆனால், (b) பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோன்ற ஒரு ஷரத்தை ஏற்படுத்துகையில், எந்த மதப்பிரிவைச் சேர்ந்தவர்களின் பிரயோசனத்திற்காகவென்று மேற்படி நிலையம் முக்கியமாக உத்தேசிக்கப்பட்டு அல்லது நடத்தப்பட்டு வருகிறதோ அவர்களுடைய உரிமைகளைக் கிரமப்படி கவனிக்க வேண்டும்.

(3) துணை ஆணையர் ஷை அறநிலையத்தின் சொத்துக்கள் எவை என்பதை நிச்சயித்து, அந்தச் சொத்துக்களின் பட்டியல் அடங்கியுள்ள ஷெட்யூல் ஒன்றை அந்த ஏற்பாட்டுடன் சேர்க்கலாம்.

(4) யாதொரு நிலையத்துக்காக ஏற்பாடு ஒன்று தயாரிக்கப்படுகிறவரையில், துணை ஆணையர் அதன் தர்மகர்த்தருக்குரிய அலுவல்கள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எதையாவது செய்வதற்காகத் தகுந்த ஒருவரை நியமித்து அவருடைய அதிகாரங்களையும் கடமைகளையும் வரையறுக்கலாம்.

(5) (a) துணை ஆணையர், தர்மகர்த்தர், அக்கரையுள்ளவர்கள், ஸ்தாபனம் சம்பந்தமாக அதிகாரிகளை நிறைவேற்றுகின்ற கடமைகளைச் செலுத்துகிற ஏதேனும் பிராந்தியக் குழுவைக் கலந்தாலோசித்து, எப்போதாகிலும் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக, (1) உட்பிரிவின்படி நிச்சயிக்கப்பட்டு அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை அல்லது 1926-ம் ஆண்டு சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்படி (சென்னை 1927-ம் ஆண்டு 2 வது சட்டம்) சபையாரால் நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட அல்லது அச் சட்டத்தினுல் நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்டு அமுலில் உள்ள யாதொரு திட்டத்தை அல்லது ஆணையரால் நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட யாதொரு திட்டத்தை, அல்லது 70-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படிக்கான ஒரு அப்பீலின் பேரில் கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட, அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை 118 வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (a) பகுதியின்படி கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்டதாக அல்லது மாற்றியமைக்கப்பட்டதாகக் கருதப்பட்டு அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை மாற்றியமைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

ஆனால், 70 வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படிக்கான ஒரு வழக்கின் அல்லது ஷை பிரிவின் (2) உட்பிரிவின்படிக்கான ஓர் அப்பீலின் பேரில் கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட 118-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (a) பகுதியின்படிக் கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்டதாக அல்லது மாற்றியமைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை மாற்றியமைப்பது அல்லது ரத்து செய்வது, நிர்ணயிக்கக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டுமாத்திரமே செய்யப்பட வேண்டும்.

(b) துணை ஆணையர் (a) பகுதியில் குறிப்பிடப்பட்ட ஷை திட்டமானது இச் சட்டத்திற்கும் இதன்படிச் செய்யப்பட்ட விதிகளுக்கும் பொருத்தமில்லாதது எனச் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், தர்மகர்த்தரையும் அக்கறையுள்ள நபர்களையும், ஸ்தாபனம் சம்பந்தமாய் அதிகாரங்களைச் செலுத்துகிற, கடமைகளை நிறைவேற்றுகிற பிராந்தியக் குழு எதாகிலுமிருந்தால் அதையும் கலந்தாலோசித்து, எப்போதாகிலும், இச் சட்டத்தின், இதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் ஷரத்துக்களை அனுசரித்திருக்குமாறு அவசியமாயிருக்கக்கூடிய அத்தகைய விதமாக அத் திட்டத்தை மாற்றியமைக்கலாம்.

(தொடரும்)

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
    விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
    வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
    கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
    எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே,

[விண்ணகத்திலுள்ள தேவரும் நெருங்குதற்கரிய பரம்பொருளே! உனது அடிமைகளாகிய யாங்கள் உய்ய உலகிடை வந்து இறையின்பத்தில் வாழ அருள்புரிந்தவனே! திருப்பெருந்துறை மேயவனே! பரம்பரை அடிமைகளாகிய எங்கள் கண்ணுள் நின்று இன்பம் பயப்பவனே! கடலில் எழுந்த அமுதானவனே! கரும்புபோன்ற இனிமையனே! அன்புடைத் தொண்டர்கள் அகத்திருப்பவனே! உலகிலுள்ள உயிர்கட்கு உயிரானவனே! எழுந்தருள்க!]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
    பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்துநீ
    குற்றேவ லெங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
    எற்றைக்கு மேழேழு பிறவிக்கு முன்றன்னோ
டுற்றோமே யாவோம் உனக்குநா மாட்செய்வோம்
    மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

[அதிகாலையின் உன்னை வந்து வணங்கி உன் பொன்தாமரை அடிகளைப் போற்றும் நோக்கத்தைக் கேட்டருள்வாயாக. மாடுமேய்த்துண்ணும் இடைக்குலத்துப் பிறந்த நீ எங்களுடைய தொண்டுகளைப் பெற்றுக்கொள்ளாமல் போகக் கூடாது. கோவிந்தா! இன்று பறைகொள்ள வந்தோமல்லோம். எக்காலத்தும், ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு உறவுடையவர்களாவோம். உனக்கே அடிமை செய்வோம். வேறுபட்ட எமது இச்சைகளினின்றும் தவிர்த்தருள்வாயாக.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

சார்வரி—மாசி


**சைவம்**

5உ—கோச்செங்கட்சோழ நாயனார்
21உ—எறிபத்த நாயனார்
28உ—காரி நாயனார்.

**வைணவம்**

15உ—குலசேகராழ்வார்.

# கன்னியாகுமரிமாவட்டத்திலுள்ள திருவாட்டாறுகோயில் பிரகாரம்



வானேற வழிதந்த வாட்டாற்றான் பணிவகையே
நானேறப் பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே
தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன் செழும்பறவை
தானேறித் திரிவான தாளிணை யென்தலைமேலே.

—நம்மாழ்வார்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6.
Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.